விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 17 ஞாயிற்றுக்கிழமை (01.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

# கணவன் கண் முன்னே மனைவி கொடூரமாக பாலியல் வன்புணர்வு

## வட்டுக்கோட்டை சங்கரத்தையில் நேற்று அதிகாலை பயங்கரம்

- பெண்ணின் அங்கங்களில் கத்திவெட்டு
- கணவனும் தாக்குதலில் படுகாயம்
- பணம், நகைகள் கொள்ளையடிப்பு

(யாழ்ப்பாணம்) வட்டுக்கோட்டை சங்கரத்தை பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நுழைந்த திருடர்கள் கணவனை கட்டிவைத்துவிட்டு கணவன் கண்முன்னே மனைவியை கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதுடன் வீட்டில் இருந்த நகைகள், பணம் என்பவற்றையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வட்டுக்கோட்டை சங்கரத்தை பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் திருடர்கள் இருவர் நுழைந்துள்ளார்கள். அந்த வீட்டினுள் கணவனும்மனைவியும்இருந்துள்ளனர்.

வீட்டினுள் நுழைந்த திருடர்கள் கணவனை கடுமையாக தாக்கியதுடன் அவரின் வாய் கைகளை கட்டி கதிரையுடன் சேர்த்து கட்டி வைத்துள்ளார்கள். பின்னர் மனைவியை தாக்கி அவர் அணிந்திருந்த நகைகளை பறித்ததுடன் அங்கிருந்த ஒரு தொகை பணத்தையும் அபகரித்துள்ளார்கள்.

பின்னர் மனைவியின் வாயை கட்டி வைத்து அவரை மிகவும் கொடூரமான முறையில் துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள். குறித்த பெண்ணின் உடல் உறுப்புக்கள் அனைத்திலும் கத்தியால் வெட்டி காயப்படுத்தியதுடன் வாய், தலை என்பவற்றில் பலமாக தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளார்கள். 15

## வீட்டிற்கு முன்னால் நின்ற இளைஞர் மீது வாள்வெட்டு

### கரணவாயில் நேற்று சம்பவம்

(கரணவாய்)

வீட்டிற்கு முன்னால் நின்ற இளைஞரை முச்சக்கரவண்டியில் வந்தவர்கள் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் கரணவாய் முதலைக்குழி பகுதியில் இடம்பெற்ற இவ்வாள் வெட்டு சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த ரிசிகரன் ரேகன் (வயது-22) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

மேற்படி இளைஞர் 16

## ஒட்டுசுட்டானில் கிளைமோர் மீட்பு; கைதானவருக்கு சுவிஸிலிருந்து பணம்

### பொலிஸ் தகவலில் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டானில் கிளைமோர், விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை, புலிக்கொடி என்பவையுடன் முச்சக்கர வண்டி ஒன்று கைப்பற்றப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் தொடர்புடைய ஒருவர் தலைமறைவாகியுள்ளார். அவரைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன ' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களில் ஒருவரின் வங்கிக் கணக்குக்கும் சுவிஸிலிருந்து தொடர்ச்சியாக பணம் அனுப்பப்பட்டு வந்துள்ளது. அவர் கொள்வனவு செய்யும் வாகனங்களை தலைமறைவாகியுள்ள சந்தேகநபரின் பெயரிலேயே பதிவு செய் 15

## தேநீர், உணவுப்பொதி விலைகள் குறைப்பு



(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை குறைப்பு காரணமாக, 16

## வடக்கில் இடம்பெறும் வன்முறை தொடர்பில்

### விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்கில், வடமாகாண ஆளுநர் 16

### கருணாவுக்கு எதிராக

## ஐ.நா பேரவையில் யுத்தக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையில் முதல் முறையாக, முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பின் கட்டளை தளபதி 15

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஏற்கெனவே பழக்கப்பட்டுள்ளேன்

### பதவி விலகல் கோரிக்கைக்கு முதல்வர் பதில்

(யாழ்ப்பாணம்)

நம்பிக்கையில்லா பிரேரணை மூலமே என்னை பதவி விலக செய்ய முடியும் என தெரிவித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் அதற்கு தான் ஏற்கெனவே பழக்கப்பட்டுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்த கருத்து தொடர்பில் முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு 15



### ரெஜினா படுகொலை

## பிரதான சந்தேகநபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சுழிபுரத்தில் ஆறு வயது சிறுமியான ரெஜினா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்ய 16

## கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைவது தொடர்பில்

### 15பேர் கொண்ட குழு இன்று முக்கிய கூட்டம்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பது தொட 15

## அரசிலிருந்து 10 சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் விலக தீர்மானம்

### ஆட்டங்காணும் நல்லாட்சி அரசு

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகித்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 23 உறுப்பினர்களில் 10 பேர் பதவிகளை கைவிடத் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தில் இருந்து விலகும் இவர்கள் கூட்டு எதிர்க்கட்சியினருடன் இணைந்து கொள்ள உள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இவர்கள், அரசாங்கத்தில் இருந்து அண்மையில் வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பேர் அணியுடன் சில

## மாகாண சபை தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம்

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல் எந்தவிதத்தில் நடத்தப்பட்டாலும், அதில் தமது அணி வெற்றி பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் - மாவத் 16



## வடக்கில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை

### பாதுகாப்பு அமைச்சர் ருவன் விஜேயவர்த்தன

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்கப் போவதில்லை என்று பாதுகாப்பு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 30-06-2018
சீட்டிழுப்பு இலக்கம் 852

ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 8 6 8 4 3 6

தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**

திகதி 2018/06/30
சீட்டிழுப்பு இலக்கம் 1338

எழுத்து: 03
வெற்றி இலக்கம்: 18 39 41 69
05 28

தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

திகதி 2018.06.30
சீட்டிழுப்பு இலக்கம் 1806

ஆங்கில எழுத்து: T
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 51 72 73 75

தேசிய லொத்தர் சபை

**செவன**

திகதி 2018/06/30
சீட்டிழுப்பு இலக்கம் 96

ஆங்கில எழுத்து: D
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 13 42 50

தேசிய லொத்தர் சபை

**வேலையாட்கள் தேவை**

நல்லூரில் இயங்கும் பான்சி கடைக்கு பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகர மான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு 0776184353** (4754)

**காணி விற்பனை**

யாழ்.நகர் ஸ்ரான்லிவீதி அத்தி யடி வீதி முன்பக்கத்தில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு:

**0778730129** (4755)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**கனகசபை நற்குணசிங்கம்**

எமது பாடசாலை ஆசிரியர்
திரு.ப.பாலமுரளீதரனின் மாமனார்
கனகசபை நற்குணசிங்கம்
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யாழ்/ஆனைப்பந்தி மெதடிஸ்மிஷன் வித்தியாலயம். (4748)

# மரண அறிவித்தல்

## கந்தப்பு நாகேந்திரம் பத்மநாதன் (JP)

(முன்னாள் வவுனியா நகர சபை உறுப்பினர்)

மலர்வு 24 - 03 - 1938



உதிர்வு 30 - 06 - 2018

புங்குடுதீவு எட்டாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வவுனியா சூசைப் பிள்ளையார் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு நாகேந்திரம் பத்மநாதன் அவர்கள் நேற்று (30.06.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம்-தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அரியரெட்ணம்-அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் அஞ்சலாதேவியின் அன்புக்கணவரும் பத்மலோஜினி (சசி) (Australia) ஸ்ரீநந்தினி (Canada), தயாபரன் (A Group Construction-Director) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஜெயநந்தன் (Engineer), கந்தவேள் ( Engineer), ராஜேஸ்கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், இலட்சுமணன், சிவலிங்கம், மகாலிங்கம், ஜெயலட்சுமி, இரத்தினாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், தம்பிராசா, பற்குணன் ஆகியோரின் அன்பு சகோதரரும் கிருசிகன், வைசாலி, சஞ்சுதா, சஞ்ஜீவன், நேகா, சரிகா, ராதேயன், அபிமன்யு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2018) பிற்பகல் 3.00 மணியள வில் வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இறம்பைக்குளம் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-பத்மநாதன் தயாபரன் (மகன்)**
(A Group Construction-Director)
0777326294

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி முரளீஸ்வரன் (ஈசன்)

தோற்றம் 12 - 11 - 1979



மறைவு 27 - 06 - 2018

திக்கரை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும் இல.764, தட்டாதெரு சந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் லண்டனை தற்போதைய வதி விடமாகவும் கொண்ட கந்தசாமி முரளீஸ்வரன் (ஈசன்) கடந்த 27.06.2018 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தசாமி (ஓய்வுபெற்ற முன்னாள் வட கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்) -அமரர் மங்கையர்கரசி தம்பதிகளின் அன்பு மகனும், திருமகள் (லண்டன்), தவராசா (லண்டன்), சிற்சபேசன் (லண்டன்), கிருஷ்ணஜெயந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரனும், நல்லைநாதன் (லண்டன்), ஈஸ்வரன் (அவுஸ்திரேலியா), குலதேவி (லண்டன்), ஜனனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நாளை (02.07.2018) திங்கட்கிழமை இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**00442488373658, 00442084298211**

**தகவல்:- சகோதரர்கள்** (4756)

## செல்லையா தம்பிப்பிள்ளை

(Diploma in Printing, ஓய்வுநிலை உத்தியோகத்தர் அரசாங்க அச்சகம், முன்னாள் உத்தியோகத்தர் வீரகேசரி பத்திரிகை)

தோற்றம் 18 - 08 - 1939



மறைவு 28 - 06 - 2018

யாழ்.புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் இல14,யாழ்பாடி வீதி,பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிப் பிள்ளை அவர்கள் கடந்த (28-06-2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-காமாட்சி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா (முன்னாள் வர்த்தகர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், தெரணியகல)-பரமனாட்சி தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் பத்மராஜா (சிவா-கனடா), தமிழ்விழி (சுவாகா-கனடா), பத்மரூபன் (காண்டீபன்-கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் அரசபாலினி (கவிதா-கனடா), நகுலேந்திரன் (நகுலன்-கனடா), துஷ்யந்தி (துளசி-கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, மகேஸ்வரி, ஐயாத்துரை, அன்னம்மா, மாணிக்கம், தையல்நாயகி(நோனா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகாதேவன், பரமேஸ்வரன் (திராவிடதாசன்), விக்கினேஸ்வரன் (காந்தி), புவனேஸ்வரி, மங்கை யற்கரசி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, நமசிவாயம், சற்குணம், செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் அகரன், பிரவ்ன், அதினா, ஜர்ஷனா, ஹரிஷனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (01-07-2018)ஞாயிற்றுக்கிழமை பி.ப 03.00 மணி முதல் பி.ப 07.30 மணிவரை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (02-07-2018) திங்கட்கிழமை பி.ப 01.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வீட்டு முகவரி:இல.14, யாழ்பாடி வீதி,**
**பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.**

மகேஸ்வரி (மனைவி)-இலங்கை-0212229546
பரமேஸ்வரன் (மைத்துனர்)-0774765992
பத்மராஜா (சிவா-மகன்)-கனடா-14164549170
பத்மரூபன் (காண்டீபன்)-கனடா-14169704189

**தகவல்:-குடும்பத்தினர்**
**பரமேஸ்வரன் (மைத்துனர்)**
**விக்கினேஸ்வரன் (மைத்துனர்)**
தமிழ்விழி (சுவாகா-மகள்)-கனடா-14162585620 (4749)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துஷ்பிரயோக குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்

## றெஜினாவுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் நேற்று போராட்டம்









(ஏறாவூர்)

மட்டக்களப்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களுக்கு உச்சபட்ச தண்டனையாக மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிறுமி றெஜினாவின் படுகொலையினை கண்டித்து செங்கலடியில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முற்போக்கு இளைஞர் அமைப்பு மற்றும் பெண்கள் அமைப்புகள், மாணவர்கள் ஆகியோரின் இணைவில் மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்வியாழேந்திரனும்இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நான் அருகில் இருக்கும் போதே ஒருவரை சுட்டுக்கொல்லுமாறு கோத்தபாய கூறினார்-மேர்வின்

(கொழும்பு)

ராஜபக்ஷவினர் பணத்தை பெற்றுக்கொண்டுள்ளதை எவரும் மறுக்க முடியாது என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

டி.ஏ.ராஜபக்ஷ, டி.என். ராஜபக்ஷவினர் எவரிடமும் பணத்தை பெற்றிருக்க மாட்டார்கள். ஆனால் தற்போதுள்ள ராஜபக்ஷவினர் பணத்தை பெற்றுக்கொள்ளவில்லை என்று எண்ணினாலும் அல்லது கூறினாலும் அது உண்மையல்ல.

ராஜபக்ஷவினர் பணத்தை பெற்றுக்கொள்ளவில்லை என்றால், கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதிக்கும். பணத்தை கையாளும் பொறுப்பு பசில் ராஜபக்ஷவிடம் இருந்தது. பசில் ராஜபக்ஷ கொமிஸன் பெற்றுக் கொள்வார் என்பது முழு உலகத்திற்கும் தெரியும்.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை புகழ்பெற்ற பத்திரிகை, ராஜபக்ஷவினர் குற்றமற்றவர்கள் என்றால், அமெரிக்காவின் தூதரகம் இலங்கையில் இருக்கின்றது. அதன் ஊடாக அந்தப் பத்திரிகைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

அப்படி எதுவும் நடக்கவில்லை என்று சீன அரசாங்கம்கூறவேண்டும். அதனை விடுத்து. நாடாளுமன்றத்தில் இருப்பவர்களும் என்னை போன்றவர்களும்மகிந்த ராஜபக்ஷ பணத்தை பெற்றார் எனக் கூறினால், அவர்கள் விரோதம் காரணமாக கூறுகின்றனர் என்பார்கள்.

பணத்தை பெறவில்லை என்று கூறினால், மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றுவதற்காக கூறுகின்றனர் என்பார்கள். இந்த குற்றச்சாட்டுக்கான சிறந்த பதில் மகிந்த ராஜபக்ஷவிடமே இருக்கின்றது.

அடுத்த பதில் சீன அரசாங்கத்திடம் இருக்கின்றது. அடுத்தது நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதையே செய்ய வேண்டும். இவற்றை செய்யவில்லை என்றால் பணத்தை பெற்றுக்கொண்டனர் என்றே அர்த்தம்.

அதில் எந்த மாற்றமும் இல்லை. அதனை அவர் மறுக்கவும் முடியாது. உண்மையை கூறவும் தரையில் அமரவும் எவருடைய அனுமதியும் தேவையில்லை. நான் நக்சலைட் என்ற குற்றச்சாட்டில் சிறைக்கு சென்றவன். அரசியலில் ஈடுபட்டு குடும்பத்தை சேர்ந்த மூன்று பேரை இழந்தவன்.

அவன்கார்ட் பற்றி எனக்கு விபரங்கள் தெரியும், அந்த நிறுவனத்தின் மூலம் பல பில்லியன் பணம் கொள்ளையிடப்பட்டது. கடற்படை வர வேண்டிய பணம், கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில், திருட்டு வழியில் வெளியில் சென்றது.

இவற்றை கூற நான் அச்சப்படமாட்டேன். இதுவரை அதுபற்றி விசாரணைகள் நடக்கவில்லை. அதேவேளை நாட்டில் ராஜபக்ஷ ஒருவர் மீண்டும் ஜனாதிபதியாக வரமாட்டார். கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளர் எனக்கூறி சிலர் அவருக்கு ஆசை தூண்டி விட்டுள்ளனர்.

இதனால், அவர் தற்போது ஜனாதிபதி என்ற நினைப்பில் நடக்கின்றார். ஜனாதிபதியாகவே மூச்சு விடுகின்றார். ஜனாதிபதி என்ற எண்ணத்திலேயே சிரிக்கின்றார்.

சாப்பிடுவதும் ஜனாதிபதியை போல் வீட்டிலும் ஜனாதிபதி என்ற நினைப்பிலேயே வாழ்கின்றார் என்றே நான் நினைக்கின்றேன். உறங்குவதும் அப்படியாகவே இருக்கும். அப்படி எதுவும் நடக்கப் போவதில்லை. கோத்தபாய என்றுமே நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியாது.

நாட்டில் போர் நடக்கும் போது தனது இராணுவத்தையும், இராணுவத்தில் இருந்தவர்களையும் கைவிட்டு, அமெரிக்காவுக்கு தப்பிச் சென்ற கோழைக்கு நாடு ஒன்றை ஆட்சி செய்ய முடியுமா?.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டு சகோதரர்கள் செய்த நடவடிக்கைகளை கண்டு கொள்ளவில்லை. அவர்கள் தவறுகளை செய்தனர். எந்த நீதிமன்றத்திலும் கூற நான் தயாராக இருக்கின்றேன்.

நான் அருகில் இருக்கும் போதே ஒருவரை சுட்டுக் கொல்லுமாறு கோத்தபாய கூறினார். அநுராதபுரத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. ஆமாம், பிரச்சினையில்லை அவரை சுட்டுக் கொல்லுங்கள் என்று கோத்தபாய கூறினார்.

இன்னும்என்னகூறவேண்டியுள்ளது. அச்சம் காரணமாக இவற்றைக் கூற எவரும் முன்வர மாட்டார்கள். நான் உருணையை சேர்ந்த சிங்கள பௌத்தன். நான் யாருக்கும் பயப்படமாட்டேன் என மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

### உடுப்பிட்டியில் 60இலட்சம்;

# கொள்ளையர்கள் இருவர் கைது

(கரணவாய்)

உடுப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை உடுப்பிட்டி யாழ்.வீதியிலுள்ள வீடு ஒன்றில் ஓடு கழற்றி வீட்டுக்குள் இறங்கி இரண்டு வயோதிபப் பெண்களை கத்தி முனையில் மிரட்டி அவர்களிடம் காணி விற்கப்பட்டு பெறப்பட்ட பணத்தை கொள்ளையிட்டிருந்தனர்.

கொள்ளை நடைபெற்ற அதிகாலை நேரம் அவ்வீதியால் வல்வெட்டித்துறை பொலிஸாரின் ஜீப் வண்டி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. அதில் பொலிஸ் பரிசோதகர் விமலவீரா சென்றிருந்தார்.

ஜீப் வண்டியின் சத்தத்தை கேட்டதும் கொள்ளையர்கள் கொள்ளையடித்த பணத்துடன் தப்பிக்க முயற்சித்தனர். வயோதிபப் பெண் ஒருவர் ஓடி வந்து பொலிஸ் ஜீப்பை மறித்து விடயத்தை கூறினார்.

உடனே வீட்டை பொலிஸார்சுற்றிவளைத்தபோதுகொள்ளையர்கள் அங்கு கொள்ளையடித்த 35 இலட்சம் ரூபா பணம், 31 பவுண் நகை என்பவற்றை வீசிவிட்டு சென்றனர். அவற்றை மீட்ட பொலிஸார் வங்கியில் வைப்பிலிட்டனர்.

இதேவேளை மேலதிக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் அதே இடத்தை சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்தனர். அவர்களிடம் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-60)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா கோரவில்லையாம்-பிரதமர்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கை பலவந்தப்படுத்தப்பட்டதாக அண்மையில் நியூயோர்க் டைம்ஸில் வெளியான செய்தியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார்.

தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சமன் கெலேகம ஞாபகார்த்த மாநாட்டில் கலந்து கொண்ட போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

'இவ்விடயத்துக்காக நாம் எவ்வாறு பலவந்தப்படுத்தப்பட்டோம் என்பது தொடர்பில் நிறைய எழுதப்பட்டுள்ள போதும், இதில் எமது தேவைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவே நான் எப்போதும் நினைத்துக்கொள்கிறேன்.

இப் பேச்சுவார்த்தைக்கு நான் பொறுப்பாக இருந்த போது,அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் என்னுடன் இருந்தார். நாம் சீனப் பிரதமர் லீ மற்றும் ஜனாதிபதி ஜி ஆகியோருடன் கலந்துரையாடினோம். இது மிகவும் கடுமையானதொரு ஒப்பந்தம் என்றபோதும் இரு தரப்புமே இதில் ஏதோவொரு பயனையடையக்கூடிய வகையிலான இணக்கப்பாட்டுக்கு வரமுடிந்துள்ளது' என்றும் பிரதமர் தெரிவித்தார்.

அத்துடன் இதன்மூலம் கிடைக்கும் பயன்களை நேரில் பார்வையிடுவதற்காக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்றும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.மேலும் இந்த ஒப்பந்தம் வெற்றி பெற்றமைக்காக சீன ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இலங்கை குழு உள்ளிட்ட பலருக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

நாம் இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்றபோது இங்கிருந்த மிகப்பெரிய நீச்சல் தடாகமாக அம்பாந்தோட்டை துறைமுகம் விளங்கியது.

எனினும் அடுத்த வருடம் முதல் இதற்குள் கப்பல் வந்து செல்வதைக் காண முடியும். வெள்ளை யானைகளை நாம் பச்சையாக மாற்றி வருகின்றோம் என்றும் பிரதமர் தெரிவித்தார். (இ-7)

# புலிகள் மீதான தடைக்கு எதிராக பிரிட்டனில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்காக பிரித்தானிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,"விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவதற்காக பிரித்தானிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சட்டத்தரணி லதன் சுந்தரலிங்கம் மற்றும் சட்டத்தரணி ரஜீவன் சிறீதரன் ஆகிய இருவரும் இணைந்து இதற்கான சட்டரீதியான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த இருவரும் ஐரோப்பா நீதிமன்றத்திலிருந்து விடுதலைப் புலிகளின் தடையை நீக்கி வெற்றியை பெற்றுத் தந்தவர்கள்" என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 16உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்தாலும் சு.கட்சியின் பதவிகளில் இருந்து விலகவில்லை

## சரத் அமுனுகம சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகிய 16 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமர்ந்தாலும் இன்னும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதவிகளில் இருந்து விலகவில்லை என்று அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தம்முடன் இணைவதாயின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் வகிக்கும் பதவிகளில் இருந்து விலகிவிட்டு வர வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அந்த 16 பேரிடமும் கூறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்த உறுப்பினர்கள் பதவிகளை துறந்து நிர்வாணமாக தமது கட்சிக்கு வருமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூறியுள்ளதாக ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பின்னி எடுத்தது பிரான்ஸ்

## காலிறுதிக்கும் நுழைந்து அசத்தல்

உலக கிண்ணத் தொடரின் விறுவிறுப்பான 'ரவுண்ட் 16' போட்டியில் பிரான்ஸ் அணி, ஆர்ஜென்ரீனாவை 4-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன்மூலம் காலிறுதிக்கு முதல் அணியாக முன்னேறியது. பிரான்ஸ் இளம் வீரர் மபே 2 கோல் அடித்து அசத்தினார்.

ரஷ்யாவில் 21ஆவது உலக கிண்ண தொடர் நடக்கிறது. லீக் சுற்று முடிந்து 16 அணிகள் நாடு திரும்ப நேற்று முதல் 'ரவுண்ட் 16' போட்டிகள் தொடங்கின. முதல் போட்டியில் மெஸ்சியின் ஆர்ஜென்ரீனா அணி, பிரான்ஸை சந்தித்தது.

போட்டி தொடங்கிய 7 ஆவது நிமிடம் ஆர்ஜென்ரீனாவின் 'சீனியர்' வீரர் மஸ்செரானோ, மபேவை 'பவுல்' செய்ய, பிரான்ஸ் அணிக்கு 'பிரீ கிக்' கிடைத்தது. இதில் கிரீஸமன் அடித்த பந்து கோல போஸ்ட் மேல் பகுதியில் பட்டு திரும்பியது. அடுத்த சில நிமிடத்தில் மபேவை, ரோஜோ தள்ளிவிட, பிரான்ஸ் அணிக்கு 'பெனால்டி' வாய்ப்பு கிடைத்தது. இதில் கிரீஸ் மன் (13ஆவது நிமிடம்) கோல் அடிக்க, ஆர்ஜென்ரீனா அணி 1-0 என பின் தங்கியது. 1998க்குப் பின் 'நொக் அவுட்' போட்டி களில் இப்போது தான் முதன முறையாக மெஸ்சி அணி 'பெனால்டி' விட்டுக் கொடுத்தது.

**'ஏஞ்சல்' மரியா**

இதற்கு எப்படியும் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆர்ஜென்ரீனா வீரர்கள் களமாடினர். இதனால் பிரான்ஸ் வீரர்கள் எளிதாக ஆர்ஜென்ரீனா கோல ஏரியாவை முற்றுகையிட்டனர். இதனிடையே 41 ஆவது நிமிடம் சக வீரரிடம் இருந்து பந்தை வாங்கினார் ஏஞ்சல் டி மரியா. 27.5 மீ., துாரத்தில் இருந்த போதும் கோல் போஸ்டை நோக்கி, தனது இடது காலால் மின்னல் வேகத்தில் அடித்தார். இது பிரான்ஸ் கோல் காப்பாளர் ஹிகோ லோரிஸ் மேல் இடது பக்கமாக சென்று கோலாக மாறியது. இதனால் ஸ்கோர் 1-1 என ஆனது. இத்தொடரில் நீண்ட தொலைவில் இருந்து அடிக்கப்பட்ட கோல்களில் இதுதான் 'நம்பர் 1'.

**இரண்டு கோல்**

இரண்டாவது பாதியில் ஆர்ஜென்ரீனா அணிக்கு 'பிரீ கிக்' கிடைத்தது. இந்த பந்து நேராக மெஸ்சியிடம் சென்றது. வழக்கமான 'ஸ்டைலில்' தனது இடது காலால் இவர் அடித்த பந்து, அருகில் இருந்த மெர்காடோ (48ஆவது) இடது காலில் பட்டு கோலாக மாறியது. ஆர்ஜென்ரீனா 2-1 என முன்னிலை பெற்றது. இந்நிலையில் பிரான்சின் பவார்ட் (57ஆவது), மபே (64ஆவது) என அடுத்தடுத்து கோல் அடித்து மிரட்டினர். இதனால் ஒரு கட்டத்தில் 2-1 என முன்னிலையில் இருந்த ஆர்ஜென்ரீனா, 2-3 என பின் தங்கியது. இதை சமன் செய்ய முயற்சித்த நேரத்தில் அடுத்த நான்காவது நிமிடம் மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது. போட்டியின் 68 ஆவது நிமிடம் மீண்டும் அசத்திய மபே, இப்போட்டியில் இரண்டாவது கோல் அடித்து மிரட்டினார்.

இதனால ஆர்ஜென்ரீனா அணி (2-4) மீள முடியாத சோகத்துக்கு சென்றது.

85ஆவது நிமிடம் மெஸ்சி அடித்த பந்து கோல் காப்பாளர் கைக ளில் தஞ்சம் அடைய ஆர்ஜென்ரீனா தோல்வி உறுதியானது. 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தில் (90+3வது) அகுயரோ ஒரு கோல் அடித்த போதும் வெற்றிக்கு போதவில்லை. முடிவில் பிரான்ஸ் அணி 4-3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அணி காலிறுதிக்கு ஜோராக முன்னேறியது. இதில் (ஜூலை 6) போர்த்துக்கல் அல்லது உருகுவேயை சந்திக் கும்.

**என்னதான் நடந்தது?**

| பிரான்ஸ் 4 | | 3 ஆர்ஜென்ரீனா |
|---|---|---|
| 7 | தரவரிசை | 5 |
| 0 | கோர்னர் கிக் | 4 |
| 9 | கோல் முயற்சி | 10 |
| 39 | பந்து வசம் | 39 |
| 03 | மஞ்சள் அட்டை | 05 |
| 0 | சிவப்பு அட்டை | 0 |
| 0 | ஓவ் சைட் | 1 |
| 21 | தவறு | 15 |



இரு கோல்களை அசத்தலாக அடித்த மபே

**பீலேவுக்கு அடுத்து...**

உலக கிண்ணத் தொடரில் 1958ல் சுவீடனுக்கு எதிராக பீலே இரண்டு கோல் அடித்தார். இவருக்குப் பின் 'டீன் ஏஜ்' வயதில், ஒரு போட்டியில் இரண்டு கோல் அடித்த முதல வீரரானார் பிரானஸின் மபே (வயது-19)

**8**

உலக கிண்ணத் தொடரில் 8வது முறையாக காலிறுதிக்கு முன்னேறியது பிரான்ஸ் அணி. இதில் 1998ல் மட்டும் சம்பியன் ஆனது.

# வெறுங்கையுடன் திரும்பும் மெஸ்சி

பிரான்ஸ் அணிக்கு எதிரான 'ரவுண்ட் 16' சுற்றுப்போட்டியில் ஆர்ஜென்ரீனா தோல்வியடைந்தது. இதன்மூலம், 2006, 10, 14 மற்றும் தற்போது என உலக கிண்ணத் தொடரிலிருந்து வெறுங்கையுடன் திரும்பியது. இதனால் அணித் தலைவர் மெஸ்சி சோகத்தில் உறைந்தார்.

**1986க்குப் பின்...**

ஆர்ஜென்ரீனா அணி 1986ல் உலக கிண்ணம் வென்ற பிறகு, ஏதாவது ஒரு ஐரோப்பிய அணியிடம் தோற்று வெளியேறிய இந்த அணி, இம்முறை பிரான்சிடம் வீழ்ந்தது.



**ராசியில்லா ராஜா**

கடந்த 2014 உலக கிண்ணத் தொடரில் சிலி அணி பயிற்சியாளராக இருந்தார் ஜோர்ஜ் சம்பாவோலி. 'ரவுண்ட் 16' சுற்றில் இந்த அணி, பிரேசிலிடம் 'பெனால்டியில்' தோற்றது. இம்முறை ஜோர்ஜ் பயிற்சியில் களமிறங்கிய ஆர்ஜென்ரீனா, 'ரவுண்ட் 16' போட்டியில் பிரான்சிடம் தோற்றது.

**5**

கடந்த 1986 முதல் 'ரவுண்ட் 16' சுற்று அறிமுகம் ஆனது. அன்று முதல் பிரான்ஸ் அணி கடைசியாக பங்கேற்ற ஐந்து போட்டிகளிலும் 'நொக் அவுட்' (1986, 1998, 2006, 2014, 2018) போட்டிகளிலும் வெற்றி பெற்று அசத்தியது.

**3**

இரு அணிகள் மோதிய 12 போட்டிகளில் ஆர்ஜென்ரீனா 6, பிரான்ஸ் 2ல் வெல்ல 4 போட்டி 'சமன்' ஆனது. நேற்று சாதித்த பிரான்ஸ் அணி, 3ஆவது வெற்றியை பதிவு செய்தது. ஆர்ஜென்ரீனா அணிக்கு எதிரான உலக கிண்ண போட்டியில் முதல் வெற்றி பெற்றது. இதற்கு முன் 1930, 1950ல் தோற்று இருந்தது.

**'மெச்டா' பந்து**

ரஷ்ய உலக கிண்ண தொடரில் லீக் சுற்றில் இருந்த நீல நிற 'டெல்ஸ்டார்' பந்து பயன்படுத்தினர். 'நொக் அவுட்' சுற்று ஒவ்வொரு அணிகளுக்கும் கடைசி வாய்ப்பு என்பதால், இதில் சாதிக்க வேண்டும் என்ற பொருள் படும் வகையில் சிவப்பு நிற 'டெச்டா' பந்து பயன்படுததப்படுகிறது. ரஷ்ய மொழியில் இதற்கு கனவு, லட்சியம், விருப்பம் என அர்த்தம்.

# காலிறுதிக் கனவில் ஸ்பெய்ன்

உலக கிண்ண தொடரின் இன்றைய 'ரவுண்டு 16' சுற்றுப்போட்டியில் ஸ்பெயின், ரஷ்ய அணிகள் மோதுகின்றன. ஸ்பெயின் அணி ஆர்ப்பரித்தால் காலிறுதிக்கு முன்னேறலாம்.

ஸபெயின் அணி 'பி பிரிவு புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து, 'ரவுண்ட் 16' சுற்றுக்கு முன்னேறி உள்ளது. ஆனால், ஒரு உலக சம்பியனுக்குரிய (2010) முறையில் விளையாடியதாக தெரியவில்லை. போர்த்துக்கல், மொராக்கோவுக்கு எதிராக வெற்றியை நழுவவிட்டது. ஈரானுக்கு எதிராக போராடி வெற்றி பெற்றது. இதற்கு, தொடர் தொடங்கும் ஒரு நாளுக்கு முன் பயிற்சியாளர் மாற்றப்பட்டதும் ஒரு காரணம்.

**ஏமாற்றும் சீனியர்கள்**

தற்போதைய, பயிற்சியாளரான பெர்னாண்டோ வின வியூகம சற்று பின்னடைவை ஏற்படுத்துகிறது. இனியஸ்டா, பிக்கே, செர் ஜியோ ரமோஸ் என அனுபவ வீரர்கள் இருப்பது பலம். இது வரை 130 போட்டியில் விளையாடி உள்ள இனியஸ்டா, நடப்பு தொடரில் ஒரு கோல் கூட அடிக்கவில்லை.

ஸ்பெயின் ரசிகர் களின் நம்பிக்கைநாயகனாக கோஸ்டா திகழ்கி றார். 3 போட்டியில் 3 கோல் அடித்துள்ள இவரின் துல்லியமான ஆட்டம் இன்றும் தேவை. இஸ்கோ, இயகோ உள்ளிட்டோர் இருப்பதால் காலிறுதிக்கு முன் னேற அதிக வாய்ப்பு உள் ளது.

# மரண அறிவித்தல்



## சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம்

(சிவலிங்கம் மோட்டோஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்)

தோற்றம் 1938.04.28 | மறைவு 2018.06.30

இல.77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சி.ம.கணபதிப்பிள்ளை சிவலிங்கம் அவர்கள் நேற்று (30.06.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4756)

021 222 3212

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி றெஜினா படுகொலை; சர்வமதப் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் காட்டுப்புலத்தைச் சேர்ந்த மாணவி றெஜினா கொலை செய்யப்பட்டமை கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

பச்சிளம் பிஞ்சுகளை பரிதாபகரமான முறையில் கொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் பாடசாலை மாணவர், மாணவியரின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடி மகனுக்கும் உண்டு.

யாழ் மாவட்டத்தையே சோகத்தில்உறையவைத்த றெஜினாவின் படுகொலையினை யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான சிறுவர்களின் மரணத்திற்கான பின்புலங்களை அறிந்து செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பு சம்பந்தப்பட்ட நீதித் துறையினருக்கு உண்டு (பாதுகாப்புத்துறை).

பாதுகாப்புத்துறை இன்று போதை வஸ்துப் பாவனை மனிதனைக் காட்டுமிராண்டியாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

அதற்கான சூத்திரதாரிகளைக் கண்டறிய வேண்டும். அடிப்படை மனித விழுமிய பண்புகளான அன்பு, தர்மம், சாந்தி, அஹிம்சை, சமாதானம் என்பன தொடர்பான விழிப்புணர்வு வழங்க வேண்டும்.

சின்னஞ்சிறிய குழந்தையின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

றெஜினாவின் பிரிவினால் துயருற்றிருக் கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதுடன் இவ்வாறான மனிதாபிமான மற்றவர்களின் செயலை யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையினராகிய நாம் வன்மையாகக் கண்டிக் கிறோம் என் அந்த அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தபால் ஊழியர்கள் மேலதிக சேவையில்

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் முன்னெடுத்த பணிப்புறக் கணிப்பினால் அதிகளவான கடிதங்கள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் இவைகளை விநியோகம் செய்வதற்கு,தபால் ஊழியர்களை மேலதிகசேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தேங்கிக் கிடக்கும் கடிதங்களை 2 தினங்களில் விநியோகித்து முடிப்பதற்காகவே இந்த் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இக்கடிதங்களை விநியோகிப்பதற்காக மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் மேலதிகக்கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

தபால் ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பினால் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1947.08.10 இறப்பு: 2017.08.11

அமரர்.

## கனகு தர்மலிங்கம்



எம் குடும்ப விருட்சத்திற்கு
நீராகி வேராகி
நின்று நிழல் பரப்பி
நாம் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டிய
எம் அன்பின் திருவுருவே,
ஓடி உருண்டது
உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகிறோம்
உமைப்பிரிந்து
எண்ணி நிதம்...

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்...

(4682)

சரஸ்வதி வாசம்.
வட்டு கிழக்கு, சித்தன்கேணி.

குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு-25.08.1939
உதிர்வு-03.06.2018

அமரர். திருமதி.

## துளசிநாதன் பரமேஸ்வரி



குமாரகோவிலடி,
காங்கேசன்துறையை
பிறப்பிடமாகவும் பத்தமேனி
கிளாக்கர் லேன், அச்சுவேலியை
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர். திருமதி.
துளசிநாதன் பரமேஸ்வரி
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
அந்தியேட்டி கிரியைகள்
எதிர்வரும் 01.07.2018 இன்று
ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை
புனித தீர்த்தக் கரையில்
இடம்பெற்று பின்னர்
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
03.07.2018 செவ்வாய்க்கிழமை
நண்பகல் 12.00 மணியளவில்
பத்தமேனி அச்சுவேலி இல்லத்தில்
நடைபெறவுள்ளதால்

அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

(4730)

பத்தமேனி,
கிளாக்கர் லேன், அச்சுவேலி.
தொ.இல:077 312 1528

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

**மீனம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** மனக் குழப்பங்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| | இராசி பலன் | | ராகு, சுக், புத |
| கேது, செவ், சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை, புனர்பூசம் | | |
| சனி | | குரு | |

01.07.2018
ஆனி 17, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
திருதியை பிற்பகல் 4.30 மணிவரை
திருவோணம் முன்னிரவு 8.40 மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

**கடகம்:** வராத உறவுகள் திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்நாள், இனத்தவர் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.


**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** வீட்டைச் சீரமைப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கம்பன் விழா நல்லூரில் ஆரம்பம்



அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ்.கம்பன் விழா நேற்று முன்தினம் நல்லூர் கம்பன் கோட்டம், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் ஆரம்பமானது. (படங்கள்:-பொ.சோபிகா)

## பேராசிரியர் சரத் சந்திரஜீவாவின் ஓவியக் காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக்கூடத்தின் ஏற்பாட்டில் கொழும்புகட்புல, ஆற்றுகைக்கலைகள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், இலங்கையின் புகழ்பெற்ற சிற்பக்கலைஞரும், ஓவியருமான பேராசிரியர் சரத் சந்திரஜீவாவின் யாழ்ப்பாணம் தொடர்பான ஓவியங்களைக் கொண்ட ஓவியக் காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, இல15, றக்காவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக்கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ);

## பரிசளிப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு தினம் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வித்தியாலய அரங்கில் பாடசாலை அதிபர் காசிநாதர் குணசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந்து கொள்வர். (7)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி கோவில் கும்பாபிஷேகதினத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். தொடர்ந்து 4 தினங்கள் பூசை வழிபாடுகள் இடம்பெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை வைரவர் பொங்கலுடன் நிறைவு பெறும். (7)

# றெஜினா கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைப் பாலகி றெஜினா கொலைசெய்யப்பட்டது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் பாடசாலை மாணவி கொலைசெய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு கொலைக்கு காரணமானவர்களுக்கு அதிஉச்ச தண்டனை வழங்க வேண்டும் என நீதித்துறையைக் கேட்டுக்கொள்கிள்றோம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அச்சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

பாடசாலை மாணவர்கள் கொலை செய்யப்படுவதும், பாலியல் வன்புணர்வு செய்யப்படுவதும் தொடர் கதையாக உள்ளது. இதற்கு இந்நாட்டில் இதுவரையில் உடனடித்தண்டனைகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆகையால் இத்தகைய செயல்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

இவற்றை இல்லாதொழிக்க குற்றவாளிகளுக்கு உடனடியாக மிகவும் உச்ச தண்டனை வழங்க வேண்டும்.

குற்றவாளிகளுக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு அவை மறந்துபோகும் அளவுக்கு எம்நாட்டின் நீதி நடவடிக்கைகள் உள்ளன.

பாடசாலைப் பாலகிகள் தொடர்ந்து கொல்லப்படுவதும், பாலியல்ரீதியாக துன்புறுத்தப்படுவதையும் அடியோடு இல்லாதொழிக்க சட்டத்துறை சார்ந்தவர்கள் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக உடனடித் தீர்ப்பு வழங்க வேண் டும்.

அவ்வாறு வழங்கினால் தான் ஏனையவர்களுக்கும் அதுவொரு பாடமாக அமையும். இதனையே மக்களும் ஒவ்வொரு சம்பவத்தின் பின்னரும் பேசிக்கொள்கின்றனர்.

அதுமட்டுமன்றி முன்பொரு காலத்தில் இத்தகையவர்களுக்கு எவ்வகைத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதனையும் மக்கள் ஞாபகப்படுத்தி வருகின்றனர்.

ஆகையால் இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு உரிய அதிக தண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதி உத்தரவிட வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம் என அச்சங்கத்தின் அறிக்கையில் மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)



கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அச்சுவேலி மேற்கு ஜே/287 கிராமத்தில் CCH மற்றும் KNH இன் அனுசரணையுடன் நேற்று முன்தினம் சிறுவர் நட்புறவு வெளியில் வாசிப்பு மூலை ஆரம்பிக்கப்பட்டதுடன் துளிர்கள் சிறுவர் இல்லத்தின் புதிய நிர்வாக தெரிவும் நேற்று இடம்பெற்றது. இந் நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் கிராம சேவையாளர் சமுர்த்தி உத்தியோகத்தர் சி.சி.எச்.நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்கள் தொண்டர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



யாழ்/கரம்பொன் சிறியபுஸ்பம் மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற உலக சுற்றாடல் தினம் மற்றும் சுற்றாடல் பதக்கமளிப்பு விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கான பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அல்லையூர் இணைய அறப்பணி குடும்பத்தினரின் அனுசரணையுடன் அல்லை இளைஞர் முன்னேற்றக் குழு ஒருங்கிணைப்பில் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டிதர் செல்லையா திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினர்களாக அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன், யாழ். அல்லைப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை அதிபர் வி.என்.பத்மநாதன் அல்லையூர் இணையத்தள இயக்குநர்செ.ஆனந்தக்கரசு, கௌரவ விருந்தினர்களாக கடற்றொழில்சங்கத்தலைவர்ப.றொபேட் பெலிக்ஸ் விவசாய சம்மேளனத் தலைவர் சபா.விநாயகமூர்த்தி, சமூக நலன் விரும்பி த.கேதாரநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)


## வேலை ஆட்கள் தேவை

கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கும் பல் பொருள் விற்பனை நிலையத்திற்கு பொதி செய்வதற்கு (Packing) பெண் பிள்ளைகள் (25 வயதிற்கு குறைந்தவர்கள்) தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொ.இல: 077 930 9738 (4710)

## மணமகள் தேவை

04.11.1978இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற பொறுப்புக்கள் இல்லாத கம்பீரமான படித்த நல்ல பதவியிலுள்ள பிரான்ஸ் பிரஜைக்கு இலங்கைத் தமிழ் பெற்றோர் பொருத்தமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றனர்.
மணமகன் :
கேட்டை, விருச்சிகம், பாவம்:38

25.04.1982 இல் பிறந்த படித்த பிரான்ஸ் பிரஜைக்கு இலங்கைத் தமிழ் பெற்றோர் பொருத்தமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றனர்.
மணமகன்:
கார்த்திகை, இடபம்

email: muruga46@hotmail.com.
தொடர்பு:Kumaramurugan@yahoo.co.in

ஜூலை 14 வரை இலங்கை
(076 534 7523),
ஜூலை 19இன் பின் பிரான்ஸ்
(0033 6521 46227)

## மணமக்கள் தேவை

1993 பாவம் குறைந்த உத்தராடம், உயரம்-170cm, படித்த மணமகன் தேவை.
1994 பாவம் கூடிய(60), யூனிவேசிற்றி படித்த மணமகன் தேவை.
1986 பரணி பாவம்(80) 8 இல் செவ்வாய், படித்த மணமகள் தேவை.
1981 கேட்டை, வெளிநாடு. மிக பாவம் குறைந்த படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 535 3289,
076 178 7848,
075 568 5766.
(4742)




## அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ
மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் -05.07.2018

| கர்மாரம்பம் | கும்பாபிஷேகம் |
|---|---|
| 01.07.2018 | 05.07.2018 |
| ஞாயிறு காலை 9.15-11.18 | வியாழன் காலை 9.03-11.05 |

அனுசரணை - ஸ்ரீகௌதமன் ஹாட்வெயர், புத்தூர்
(4720)

## விற்பனையாகிறது

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு



Rs. 700/-

**பூமாலை**

15 ஆசிரியர்களின்
15 மாதிரி வினாத்தாள்கள் (சி-3053)

யுனிலிங்காஸ் பப்ளிக்கேஷன் 077 6258778

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 6 வருடங்களுக்கு முன்பு விவாகரத்துப் பெற்றவர். வயது 48. மிக வசதியான நற்பண்புடைய மணமகனுக்கு நற்குணமுள்ள அழகான 40 வயதிற்கும் குறைவான பெண்ணை அவரது தாயார் தேடுகிறார். ஜாதகம், போட்டோவினை கீழே உள்ள நம்பர் Viber/Whatsappக்கு அனுப்பவும். மணமகன் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் சொந்த வீட்டுடன் சொந்தத் தொழில் புரிகின்றார்.

077 711 1256,
077 711 1257
(சி-3071)


## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்



## யாழ். கம்பன் விழா–2018

2018 ஜூன் 29, 30, ஜூலை 1 ஆகிய திகதிகளில்
நல்லூர் கம்பன் கோட்டம்,நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபம்.

### 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை 3ஆம் நாள் அமர்வு

**மங்கல விளக்கேற்றல்:**
**திரு.ஆறு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

**கடவுள் வாழ்த்து: திரு.ஆர்.சுரசாகித்தியன்**

**தலைமையுரை:**
**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை** (முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

**தொடக்கவுரை:**
**திரு.ஏ.பி.ஜெயராஜா** (அதிபர், வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலறி)

**எழிலுரை:**
**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**பொருள்: "வியப்பன் கம்பன்"**
**கவிநய அரங்கு** **நடுவர்: "கம்பவாரிதி" இ.ஜெயராஜ்**
பொருள்: **"கம்பநாடன் கவி"**
தீங் கவி-**இரா.செல்வவடிவேல்**, சான்றோர் கவி-**தி.திருநந்தகுமார்**
செஞ்சொற் கவி-**ந.விஜயசுந்தரம்**, தெய்வமாக்கவி-**ஆறு.திருமுருகன்**
புன் கவி-**ஸ்ரீ.பிரசாந்தன்**

### 01.07.2018 ஞாயிறு மாலை 4.30 மணி

**மங்கல இசை: திரு.பி.ரஜீந்திரன் குழுவினர்**
**மங்கல விளக்கேற்றல்:**
**திரு.முருகேசு குணரட்ணம் தம்பதியர்** (அதிபர், எஸ்.வி.முருகேசு நிறுவனம்)

**கடவுள் வாழ்த்து: திருமதி.அ.சுகன்யா**

**தலைமையுரை:**
**கௌரவ எஸ். பாலச்சந்திரன்** (துணைத்தூதர், இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்)

**தொடக்கவுரை: கௌரவ இமானுவேல் ஆனோல்ட்** (யாழ். மாநகர மேயர்)

**நாடக அரங்கம்**
**தலைவர்:பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

பொருள்: **"இவர்கள் சந்தித்தால்..."**
விசுவாமித்திரரும் நவீன ஆசிரியரும்- **லோ.துஷிகரன், ச.கஜன்**
இலக்குவனும் நவீன இளைஞனும்- **ந.ஐங்கரன், இ.சர்வேஸ்வரா**
அனுமனும் நவீன அமைச்சரும்- **ஜெ.ஜெய்ராம், செ.சொபிசன்**

**வழக்காடு மன்றம்**
நீதியரசர்: **கம்பவாரிதி இ.ஜெயராஜ்**
பொருள்: **"சீதையைத் தேடிச் சென்ற அனுமன் மனம் மொழிகளால் குற்றமிழைத்தது தவறு"**
வாதிகள்!- **தி.திருநந்தகுமார், ந.விஜயசுந்தரம்**
பிரதிவாதிகள்- **இரா.செல்வவடிவேல், தி.வேல்நம்பி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அகில இலங்கைக் கம்பன் கழகம்


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2 ஆம் பாதம்<br>கி.பா:20 செவ் 2 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:A/L அரசதொழில்<br>தொ.இ: B/8153 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4 ஆம் பாதம்<br>கி.பா: 37 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:G.A.Q டிப்ளோமா அரசதொழில்<br>தொ.இ: G/8225 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2 ஆம் பாதம்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSC Eng.அரசதொழில்<br>தொ.இ: B/7796 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 33 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: கனடா மட்டும்<br>தொ.இ: G/8226 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4 ஆம் பாதம்<br>கி.பா: 24 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7797 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4 ஆம் பாதம்<br>கி.பா: 61 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8229 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1 ஆம் பாதம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:CIMA தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7798 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8231 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைமுறி மோசடியை மறைப்பதற்கே நியூயோர்க் ரைம்ஸ் செய்தி தொடர்பில் நிதி மோசடி விசாரணைப்பிரிவில் முறைப்பாடு

(கொழும்பு)

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி போன்றதொரு செய்தி 2015 ஆம் ஆண்டு ரொய்டர்ஸ் இணையத்தளமும் வெளியிட்டிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார் .



2015 ஆம் ஆண்டு ரொய்டர்ஸ் செய்தி வெளியிட்டதன் பின்னர் இது தொடர்பில் அனைவரையும் அழைத்து பொலிஸ் நிதி மோசடி பிரிவினர் விசாரணை செய்திருந்ததாகவும், அதன்போது கொழும்பு துறைமுக கட்டுமான பணிகள் மற்றும் அம்பாந்தோட்டைதுறைமுகநடவடிக்கைகள் என்பவற்றின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஒன்றரை ஆண்டுகள் விசாரணை இடம்பெற்றதன் பின்னர் அவற்றின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மற்றொரு தடவை சீனத் துறைமுக நிறுவனம் மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தல் நடவடிக்கைக்காக நிதி வழங்கியதாக கூறப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது முற்றாக பொய்யானது என்றும் பிணைமுறி மோசடியை மறைப்பதற்காக இது தொடர்பில் சட்டரீதியற்ற முறையில் இயங்கும் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். (7)

# 6வகைப் பயிர்களுக்கு இலவசக் காப்புறுதி

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இந்த ஆண்டு முதல் ஆறு வகையான பயிர்ச்செய்கைக்கு எவ்வித பங்களிப்பு கட்டணமும் இன்றி இலவசமாக விவசாயக் காப்புறுதி வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி நெல், பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, சோளம், சோயா அவரை மற்றும் பச்சை மிளகாய் ஆகிய பயிர்களுக்கு இவ்வாறு இலவசமாக காப்புறுதி வழங்கப்படும்.

ஒரு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா வீதமும், ஒரு ஹெக்டெயர் நிலப்பரப்பிற்கு ஒரு இலட்சம் ரூபா வீதமும் காப்புறுதி வழங்கப்படும்.

இலங்கை விவசாய மற்றும் கமநல சபையின் ஊடாக இந்தக்காப்புறுதிகள் வழங்கப்படும்.

எனவே, இந்தப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்கான கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (7)

# சீன நிறுவனத்திடம் பணத்தை பெற்றுக்கொண்டது பொய்யாயின் மகிந்த மானநஷ்டஈடு கோரட்டும்

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு சீன துறைமுக அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றிடமிருந்து 7.9 மில்லியன் டொலர் பணத்தைப் பெற்றுள்ளதாக கூறப்படுவது பொய்யாயின் அந்த தகவலை வழங்கிய அமெரிக்காவின் பிரபல பத்திரிகைக்கு எதிராக, மான நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யட்டும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

சீனத் துறைமுக அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனத்தின் (சய்னா ஹார்பர்) ஊடாகவே இந்த பணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்துடன் பௌத்த பிக்கு ஒருவரும் தொடர்புபட்டுள்ளார்.

எனவே, அமெரிக்க ஊடகம் வெளியிட்ட குறித்த தகவல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உடன் நாட்டு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(7)

# எரிபொருள் விநியோகத்தில் எந்தவித தடையும் இல்லை

## அனோமா கமகே தெரிவிப்பு



(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்தில்எந்தவித தடையும் இல்லை என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனோமா கமகே தெரிவித்துள்ளார்.

இதனால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனோமா கமகே கூறினார்.

எரிபொருள் விநியோகஸ்தர்கள் மத்தியில் தேவையில்லா பிரச்சினை ஒன்றை ஏற்படுத்த சில முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், பௌஸர்கள் மூலம் அவசியமான எரிபொருள் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (7)

# திடீரென தீப்பற்றிய ஆட்டோ

(கொழும்பு)

தெஹிவளை காலி வீதியில் வில்லியம்ஸ் எதிரே ஆட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் நேற்று முன்தினம பிற்பகல் இடம் பெற்றுள்ளது.



குறித்தவிபத்திற்கான காரணங்கள்தெரியவராத நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விபத்தில் எந்தவொரு உயிர்ச்சேதமும்ஏற்படவில்லைஎனவும் தெரிவிக்கப்படுகின்றது. (7)




நிகழ்வுகள்

❖ 1825 - ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கபட்டன.

❖1837 - இங்கிலாந்து, மற்றும் வேல்சில் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு நடைமுறைக்கு வந்தது.

❖1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கெட்டிசுபெர்க்கு சண்டை ஆரம்பமானது.

❖1873 - இளவரசர் எட்வர்ட் தீவு கனடா கூட்டமைப்பில் இணைந்தது.

❖1874 - முதலாவது வர்த்தகரீதியிலான தட்டச்சுக் கருவி விற்பனைக்கு வந்தது.

❖ 1990 - செருமானிய மீளிணைவு: ஜெர்மன் சனநாயகக் குடியரசு டொச்சு மார்க்கைத் தனது நாணயமாக ஏற்றுக் கொண்டது.

❖ 1991 - வார்சா உடன்பாடு பிராகா நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

❖ 1997 - ஆங்காங்கின் அதிகாரத்தை சீனா பொறுப்பெடுத்துக் கொண்டதன் மூலம் 156 ஆண்டுகால பிரித்தானியக் காலனித்துவ அரசு முடிவுக்கு வந்தது.

❖2002 - அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

❖2002 - தெற்கு செருமனியில் இரண்டு விமானங்கள் நடுவானில் மோதியதில் 71 பேர் உயிரிழந்தனர்.

பிறப்புகள்

❖1646 - கோட்பிரீட் லைப்னிட்ஸ், செருமானியக் கணிதவியலாளர், மெய்யியலாளர் (இ. 1716)

❖1794 - இவான் சீமொனொவ், உருசிய வானியலாளர் (இ. 1855)

❖1847 - வில்லியம் ஸ்கேன், ஆங்கிலேய-இலங்கை நூலாசிரியர் (இ. 1903)

❖ 1906 - புலவர் குழந்தை, தமிழகத் தமிழறிஞர், புலவர் (இ. 1972)

❖ 1914 - பொன். கந்தையா, இலங்கை அரசியல்வாதி (இ. 1960)

❖1924 -தி. ச. வரதராசன், ஈழத்து எழுததாளர் (இ. 2006)

❖ 1961 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (இ. 2003)

❖1961 - டயானா, வேல்ஸ் இளவரசி (இ. 1997)

❖1977 - லிவ் டைலர், அமெரிக்க நடிகை

இறப்புகள்

❖1824 - லக்லான் மக்குவாரி, பிரித்தானிய இராணுவ வீரர், காலனித்துவ நிர்வாகி (பி. 1762)

❖1971 - வில்லியம் லாரன்ஸ் பிராக், நோபல் பரிசு பெற்ற ஆத்திரேலிய-ஆங்கிலேய இயற்பியலாளர் (பி. 1890)

❖1983 - பக்மினிசிட்டர் ஃபுல்லர், அமெரிக்கக் கட்டிடக்கலைஞர் (பி. 1895)

1991 - கா. கோவிந்தன், தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர் (பி. 1915)

❖2003 - செமியோன் யாகோவிச் பிரவுதே, உக்ரைனிய இயற்பியலாளர், வானியலாளர் (பி. 1911)

சிறப்பு நாள்

❖படைத்துறையினரின் நாள் (சிங்கப்பூர்)

❖கனடா நாள்

❖குழந்தைகள் நாள் (பாக்கித்தான்)

❖மருத்துவர்கள் நாள் (இந்தியா)

❖[illegible]

❖குடியரசு நாள் (கானா)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 110 | 120 | 140 | 130 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 430 | 500 | 600 | 360 |
| தக்காளி | 250 | 300 | 240 | 250 | 280 | 260 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 180 | 80 | 200 | 200 | 180 |
| கரட் | 250 | 350 | 220 | 280 | 400 | 280 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 30 | 30 |
| புடோல் | 80 | 120 | 120 | 120 | 120 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 30 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 100 | 150 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 120 | 120 | 110 |
| பாகற்காய் | 300 | 500 | 300 | 260 | 320 | 250 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 | 120 | 90 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 65 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 200 | 100 | 120 | 200 | 160 |
| லீக்ஸ் | 250 | 400 | 250 | 280 | 300 | 250 |
| பீற்றூட் | 160 | 200 | 80 | 200 | 120 | 150 |
| கறிமிளகாய் | 200 | 600 | 110 | 300 | 400 | 280 |
| முருங்கைக்காய் | 600 | 1000 | 460 | 700 | 600 | 650 |
| போஞ்சி | 320 | 400 | 200 | 250 | 320 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 20 | 50 | — | 80 | 70 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 35 | 50 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 50 | 65 | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-50 | 25-50 | 65 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 130 | 180 | 240 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 210 | 250 | 280 | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | 40 | 120 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 60 | 100 | 210 | 60 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி தேவஸ்தான

## பூர்வத்வார நூதன நவதள நவகலச சகித

## சிவமஹா இராஜகோபுர பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்-01.07.2018

01.07.2018 இன்று ஞாயிறு காலை 9.12 மணி முதல் 11.19 வரையான சுபமுகூர்த்த வேளையில் பூர்வார நூதன அதிசுந்தர நவதள நவகலச சகித இராஜகோபுரத்திற்கு மஹா கும்பாபிஷேகம்.

## அடியார்கள் வந்து கலந்து கொண்டு இறையருள் பெற அழைக்கின்றோம்



### ஆசிச்செய்தி

அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர பெருமானின் நெடுங்காலப் பிரயத்தனத்தின் பின் ஒன்பது தளம் 117 அடி உயரம் கொண்ட ஒன்பது கலசம் வைத்த இராஜகோபுரம் இன்று ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகம் காலை 9.12 மணிமுதல் 11.19 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருப்பாலித்துள்ளதையிட்டு நான் பெருமகிழ்வடைகிறேன். இந்த இராஜகோபுரத்தை பெருநிதி கொண்டு பெருமுயற்சியுடனும் எமது நாட்டிலும் இடம்பெயர்ந்து சகல நாடுகளிலும் வாழ்கின்ற அன்பர்களாலும் நகுலேஸ்வரப் பெருமானுடைய இராஜகோபுரம் இன்று மஹாகும்பாபி ஷேகம் காண்கிறது. முக்கியமாக லண்டன் மாநகரத்திலுள்ள கீரிமலை நகுலேஸ் வர சிவன் ஆலய கோபுர திருப்பணி அறக்கட்டளை மூலமாக சேகரிக்கப்பட்ட பெரும் நிதி கொண்டும் மற்றும் நாடுகளிலுமுள்ள பக்தர்களினதும் நிதி கொண்டு இவ் இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. இந்த இராஜகோபுர கும்பாபிஷேக நன்னாளிலே அனைத்து அடியவர்களும் "கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்" என்பதற்கிணங்க எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழவும் நினைக்கிற காரியங்கள் நிறைவேறவும் இத் திருநாளிலே வாழ்த்துகிறேன்.

இராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரச் சிவாச்சாரியார்
கீரிமலைநகுலேஸ்வர ஆதீனம்



### வாழ்த்துச் செய்தி

பஞ்ச ஈஸ்வர தலங்களில் தலையாய திருக்கோயிலாக விளங்குவது கீரிமலை நகுலேஸ்வர திருக்கோயில் நகுலாம்பாள் சமேத நகுலேஸ்வரப் பெருமானுக்கு 117 அடி உயரமான இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு கோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்து மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

நகுலேஸ்வர ஆதீன முதல்வர் இராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த கோபுரத்துக்கான அடிக்கல்லை நாட்டி கோபுரத்தை கட்டுவதற்கு அரும்பாடுபட்டார்கள். நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினால் இத்திருப்பணி பல்வேறு இடையூறுகளை சந்தித்து தாமதமாகியது. எனினும் தனது 94 ஆவது வயது நிறைவு பெறுகின்ற இந்த முதுமையிலும் அர்ப்பணிப்போடு பணி செய்து நகுலேஸ்வரப் பெருமானுக்கு வானுயர்ந்த கோபுரத்தை குருக்கள் அவர்கள் தன் முயற்சியினால் நிறை வேற்றியிருக்கின்றார்கள்.

நகுலேஸ்வரப் பெருமானுடைய கோபுரத்திருப்பணிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அன்பர்கள் உதவி செய்கிறார்கள். குறிப்பாக லண்டனில் வாழ்கின்ற கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானுடைய பக்தர்கள் ஒன்று சேர்ந்து பல்வேறு முயற்சிகளை செய்து குருக்களுக்கு உறுதுணையாக இருந்து திருப்பணியை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

எனவே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோவிலில் மிகப் பெரிய இராஜகோபுரம் கட்டப்பட்டு கண்கொள்ளாக் காட்சியாக காணுகின்ற வாய்ப்பு பக்தர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆலய கோபுரத்திருப்பணிக்காக அயராது உழைத்த குருக்கள் ஐயா அவர்களுக்கும் பக்தர்களுக்கும் இவ்வேளையிலே இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து எல்லாம் வல்ல கீரிமலை நகுலேஸ்வர பெருமானின் இராஜகோபுர கும்பாபிஷேகத்தோடு எம்மண்ணில் நீதி நிலைக்கவும் தர்மம் காக்கவும் பிரார்த்தித்து அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன். தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம் , தெல்லிப்பழை.

"கோபுர தரிசனம்
கோடி புண்ணியம்"

(சி-3083)

மலரமைப்பு:
எஸ்.ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்


















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்முறைகளை கட்டுப்படுத்தாவிட்டால் ஹிட்லருக்கான ஆதரவு அதிகரிக்கலாம்

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் வன்முறைச்சம்பவங்கள் குறித்து கவலை வெளியிட்டுள்ள மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் இதனை கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

பொலிஸ்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கொல்லப்பட்டமை, பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை உட்பட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் அதிகாரிகளால் வன்முறைகளை கட்டுப்படுத்தி குற்றவாளிகளை தண்டிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அளவுக்கதிகமான படைபலமும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளும் நடைமுறையில் இருந்த காலத்தில், இலங்கையின் அரசமைப்பில் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் மீறப்பட்ட காலத்தில் காணப்பட்ட நிலையை, இந்த சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன எனவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

சட்டவிதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும் உறுதியான நடவடிக்கைகள் இல்லாதபட்சத்தில் இலங்கை வன்முறைகளில் சிக்கிய தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் கலாசாரம் தீவிரமடையும் சமூகமாக மாறக்கூடும்.



அண்மையில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் பொலிஸார் மீது கைக்குண்டினை வீசிய வேளை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் கடந்த காலங்களில் பொலிஸ் காவலில் இடம்பெற்ற பல சம்பவங்களை நினைவுபடுத்துகின்றன என தெரிவித்துள்ள மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் பல தசாப்தகாலத்திற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றனஃ பொலிஸாரின் காவலில் இருந்தவர்கள் தப்பிச்செல்ல முயன்ற வேளை கொல்லப்பட்டனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் பாதாள உலகத்தவர்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதுடன் இனரீதியிலான வன்முறைகள் இலங்கையில் இடம்பெற்ற காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது இலங்கையில் சட்டமொழுங்கு அதிகாரிகளின் செயற்பாடுகளின் வலு குறித்து கேள்வி எழுப்பியுள்ளதாகவும், இவ்வாறான பின்னணியிலேயே முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவை அதிகாரத்திற்கு வந்து ஹிட்லர் பாணியில் ஆட்சி புரியுமாறு அஸ்கிரிய பீட பௌத்தமத குருவொருவர் கோரியுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான வேண்டுகோள்கள் இலங்கையில் சிவில் உரிமைகள் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் அலட்சியம் செய்யப்பட்ட இருண்ட காலங்களை அச்சத்துடன் நினைவுபடுத்துகின்றன எனவும் பௌத்த மதகுருவின் வேண்டுகோளை ஜனாதிபதியும் பிரதமரும் கண்டித்துள்ளமை வரவேற்கப்படவேண்டிய விடயம். எனினும் இந்த தருணத்தில் சட்டமொழுங்கு குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் எதேச்சதிகாரத்திற்கான ஆதரிக்கும் உணர்வுகளும் வேண்டுகோள்களும் அதிகரிக்கலாம்.

உரிமை மற்றும் சுதந்திரத்தினை விட தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கும் தரப்பினர் மத்தியில் இந்த உணர்வு அதிகரிக்கலாம் என மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)



# மகிந்தவுக்கே பயப்படாத நாம் கோத்தாவுக்கு பயப்படுவோமா?

## அமைச்சர் ஹரிசன் கேள்வி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே பயப்படாத நாம் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு பயப்படுவோமா? என்று அமைச்சர் பி. ஹரிசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.


அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்கு "கோத்தா பயம்" பீடித்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் சிலர் தெரிவிக்கலாம். எனினும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நாம் அஞ்சப் போவதில்லை.

காரணம் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதிக்கு பயப்படாது தேர்தல் எதிர்கொண்டு வெற்றிபெற்றோம்.

ஆகவே மகிந்த ராஜபக்ஷவுக்கே பயப்படாத நாம் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு பயப்படுவோமா.

மேலும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து முதலில் அமெரிக்காவே தீர்மானிக்க வேண்டும் என தெரிவித்தார். (7)



யாழ்ப்பாணம்-ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவில் 2ஆம் திருவிழா நேற்று முன்தினம் மாலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டமும் அங்குரார்ப்பண நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை வட்டார ஒருங்கிணைப்பு குழுக்கூட்டமும் அபிவிருத்திக் குழுக்களின் அங்குரார்ப்பணமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ள நல்லூர் பிரதேசத்தில் உள்ள அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் அறிவித்துள்ளார். (7-9)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு ஜூலை 23ம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

அமைச்சராக இருக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விபரக் கூற்றை சமர்ப்பிக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று வழக்குகளின் விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 23ம் திகதிக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அன்றைய தினம் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி இதன்போது உத்தரவிட்டார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சராக இருந்த போது 2010 முதல் 2013ஆம் ஆண்டு வரையான காலத்துக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விபரக் கூற்றை சமர்ப்பிக்கவில்லை என்று குற்றம் சுமத்தி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (7)

# மும்மொழி பயிலுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2016/2017 கல்வி ஆண்டில் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த (சிங்களம், ஆங்கிலம், தமிழ்) மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 07.07.2018 காலை 9.30 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

குறித்த தினத்தில் நடைபெறும் வைபவத்தில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தமது பதிவுகளை 03.07.2018 இற்கு முன்னர் எமது நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்மூளாய்ஆதிபராசக்தி அலங்கார நாயகி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷே கம் நாளை ஞாயி ற்றுக்கிழமை காலை 9.11மணியளவில் விநாயகர்வழிபாடுடன் ஆரம்பமாகும்.இ

# ஓராண்டு நினைவுநாள்



மலர்வு
12
08
1953

உதிர்வு
13
07
2017



(சி-3079)

கடந்த 2017.07.13 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது அன்புத் தாயார்

## அமரர் இராசகுலசிங்கம் சந்திரமலர்

அவர்களின் ஓராண்டு நினைவுநாள் இன்று 2018.07.01 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



ஆண்டொன்று ஆனாலும் அகலவில்லை உன் நினைவு
அரவணைக்க யாருமின்றி அகம் நெகிழ்ந்து இவ்வுலகில்
நிழல் தரு விருட்சமாய் நின்றிருந்த அன்னையே
ஏங்குகிறோம் உந்தன் பாசமென்றபத்திக்கு...

இல.18, சிவநகர், உருத்திரபுரம். குடும்பத்தினர்.

## திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழா நிகழ்வுகளில் ஒன்றான

## முத்தமிழ் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

காலம்: 01.07.2018 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: பி.ப. 4.00 மணி
இடம்: திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானம்.



♦ **தலைவர்**
திருவாளர் க.சுதேஸ்
(உபதலைவர், திக்கம் மத்திய சனசமூக நிலையம்)

♦ **முதன்மை விருந்தினர்**
**கௌரவ நீதியரசர்.க.வி.விக்னேஸ்வரன்**
(முதலமைச்சர், வடக்கு மாகாணம்)

♦ **சிறப்பு விருந்தினர்கள்**
**திருவாளர். ச.சுகிர்தன்** (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
**திருவாளர்.வே.சிவயோகன்** (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
**திருவாளர்.க.தர்மலிங்கம்** (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
**திருவாளர்.எம்.கே.சிவாஜிலிங்கம்** (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
**திருவாளர்.த.ஐங்கரன்** (தவிசாளர்.வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை)
**திருவாளர்.அ.சா.அரியகுமார்** (தவிசாளர்.பருத்தித்துறை பிரதேச சபை)
**திருவாளர்.கு.தினேஸ்** (உப தவிசாளர்.பருத்தித்துறை பிரதேச சபை)

♦ **கௌரவ விருந்தினர்கள்**
**திருவாளர்.க.கிருஸ்ணகுமார்** (அதிபர். யா/நெல்லியடி மத்திய கல்லூரி)
**திருவாளர்.க.ஜெயக்குமார்**
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர். பருத்தித்துறை பிரதேச செயலகம்)
**திருவாளர்.பி.ஆர்.சமன் ஜெயலத்**
(தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி. பருத்தித்துறை பொலிஸ் நிலையம்)


♦ **சிறப்பு நிகழ்வாக**
யாழ்ப்பாண தமிழ் சங்கம் வழங்கும் சிறப்பு பட்டிமன்றமும் இசை நிகழ்வாக கொழும்பு (Beat Breaker) இசைக்குழு வழங்கும் இன்னிசை கானமும் இடம் பெறும்.

(சி-3080)


**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

விழா சிறப்புற வாழ்த்துவோர்: றெயின்போ ரைல்ஸ், மந்திகை

## கன்பொல்லை மக்கள் ஒன்றியம் 2018 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர் கௌரவிப்பும் முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பும் மறைந்த கலைஞர்களான நாடக திலகம் K.V. நற்குணம்- V. தங்கமணி ஞாபகார்த்த மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும்



கலைச்சுடர்
மாணிக்கம் கந்தப்பு



கலைச்சுடர்
சின்னவன் சின்னராசா




கலைச்சுடர்
கந்தசாமி சிவசோதி



கலைச்சுடர்
சூரர் செல்வராசா



கலைச்சுடர்
தம்பு பழனி



கலைச்சுடர்
ஆழ்வான் தங்கராசா



கலைச்சுடர்
சின்னவன் காசியன்



கலைச்சுடர்
கதிரவேலு தனபாலசிங்கம்



கலைச்சுடர்
தம்பு செல்வரத்தினம்




கலைச்சுடர்
ஆறன் கந்தப்பு



கலைச்சுடர்
சண்முகம் ஆள்வாப்பிள்ளை



கல்விச்சுடர்
கந்தன் இராசரத்தினம்



கலைச்சுடர்
கந்தையா முருகுப்பிள்ளை

காலம்:- 01.07.2018 ஞாயிறு பிற்பகல் 2.00 மணி

இடம்:- ஸ்ரீநாரதா பாடசாலை மைதானம்

இலை மறை காயாக இருந்து வரும் எமது கலைகளை இன்றுவரை வளர்க்கப் பாடுபடும் எமது மூத்த கலைஞர்களை கௌரவிப்பதில் கன்பொல்லை மக்கள் ஒன்றியத்தினராக நாம் பெருமகிழ் வடைகின்றோம். இவர்கள் கலை வளர எமது வாழ்த்துக்கள். வாழ்க தமிழ்-வாழ்க கலை.

கன்பொல்லை மக்கள் ஒன்றியம் (பிரான்ஸ்)
கன்பொல்லை மக்கள் ஒன்றியம் (இலங்கை)
நிர்வாகம்

(சி-3081)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'மூங்கிலை வளர்ப்போம்; எமது வாழ்வாதாரத்தை பாதுகாப்போம்'

## வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி; மகஜர் கையளிப்பு





(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்திலிருந்து விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகி மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்து மேலதிக அரசாங்க அதிபர் ரி.திரேஸ்குமாரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மூங்கிலை வளர்ப்போம் எமது வாழ்வாதாரத்தைப் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் சமூக ஆர்வலர்கள், விவசாயிகள், கிராமங்களின் பொது அமைப்புக்கள் ஆகியவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வுப் பேரணியானது பழைய பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகி பிரதான கண்டி வீதி வழியாக மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது.

மூங்கிலினால் மண் வளம், நீர்வளம் பாதிக்கப் படுவதாக இருந்தால் விஞ்ஞான ரீதியில் ஆதாரங்களைமுன்வையுங்கள். அவ்வாறு தைரியமிருந்தால் பகிரங்க விவாதத்திற்கு வருவதற்கு தயாராகுங்கள். மூங்கில் நீர்வளம், மண்வளம் ஆகியவற்றை பாதிப்பதாக கூறும் மூங்கில் எதிர்ப்பாளர்கள் ஒன்றை மறந்து விட்டனர். பார்த்தீனியச் செடி ஒழிப்பு என்று ஆரம்பித்தனர். அதுமட்டுமல்ல பார்த்தீனியத்திற்கு நீதிமன்ற தடைசட்டம்கூட உள்ளது குற்றப்பணம் கூட அறவிடப்படலாம். மூங்கில் செய்கை மூலம் உலகில் வல்லரசாகிய நாடுகள் எத்தனை என்பது தெரியுமா? மூங்கில் வளர்த்து விற்பனை செய்வதால் ஒரு பயனாளி குடும்பம் ஒரு மாதம் உழைக்கும் வருமானம் தெரியுமா? ஆகிய போன்ற வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரி. திரேஸ்குமாரிடம் பேரணியை மேற் கொண்டவர்களினால் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (2-281)

# துப்பாக்கி வெடித்துச் சிதறியதில் இளைஞர் பரிதாபமாக உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முள்ளியவளை கற்பூரப் புல்வெளி காட்டுப்பகுதியில் சட்டவிரோத துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.



இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை வேளை இடம்பெற்றது.

முள்ளியவளை முதலாம் வட்டாரம் ஈரான் பகுதியைச் சேர்ந்த மனோகரன் கஜிந்தன் (வயது - 20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, பிரஸ்தாப இளைஞன் வேட்டைக்காக சட்டவிரோதத் துப்பாக்கியுடன் கற்பூரப் புல்வெளி காட்டுப்பகுதிக்கு சென்றுள்ளார்.

அங்கு மிருக வேட்டைக்காக துப்பாக்கியை பயன்படுத்திய போது துப்பாக்கி வெடித்து சிதறியதில் இளைஞனின் முகப்பகுதி மற்றும் தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டு அவர் உயிரிழந்தார்.

இவரை நீண்டநேரமாகியும் காணாத உறவினர்கள் நண்பர்களுக்கு தகவல்கொடுத்ததையடுத்து முள்ளியவளை காட்டுப்பகுதிக்கு அருகில் இருப்பவர்கள் அவர்களுக்கு வெடிச்சத்தம் கேட்ட திசை தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் குறித்த காட்டுப்பகுதியில் இளைஞன் உயிரிழந்த நிலையில் இருப்பதை கண்ட நண்பர்கள் முள்ளியவளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து முள்ளிய வளை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் பதில் நீதிபதி ரி.பரஞ்சோதிக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அவர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற் கொண்டு சடலத்தை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விசாரணை நடைபெற்ற பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பணித்தார். (2-281)

# ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை பார்வையிட்டார் சுகாதார அமைச்சர்

(மன்னார்)

மாந்தை மேற்கு. பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் நேற்று முன்தினம் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

வெள்ளாங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாகவும், குறிப்பாக கடந்த சில தினங்களாக உரிய வைத்தியர் கடமையில் இருப்பதில்லை எனவும் மக்கள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் முறையிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வெள்ளாங்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கு திடீர் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தார்.

குறித்த பராமரிப்பு நிலையத்தில் கடமையில் இருக்க வேண்டிய வைத்தியர் கடமையில் இல்லாமை குறித்து விசாரணைகளைமேற்கொண்டதோடு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும் குறித்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திலுள்ள பல்வேறு குறைபாடுகள் தொடர்பாக கடமையாற்றுகின்ற பணியாளர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)





ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனினால் நாட்டிவைக்கப்பட்டது. முதல் கட்டமாக 15 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பிரதி மாகாண பணிப்பாளர்கள், பிரதேச பொறியியலாளர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வவுனியாவில் கசிப்புடன் குடும்பஸ்தர் கைதானார்

(குருமன்காடு)

வவுனியாஓமந்தைபொலிஸ் பிரிவில் ஐந்து சட்டவிரோத கசிப்பு 5 போத்தல்களைத் தனது உடைமையில் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரை வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்பு பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பொலிஸ் பிரிவிக்குட்பட்ட பாலமோட்டை, குஞ்சுக்குளம் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு விற்பனை நடவடிக்கை இடம் பெற்று வருவதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்று சோதனை நடவடிக்கை மேற்கொண்ட போது அப்பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய நபர் ஒருவர் தனது உடைமையில் ஐந்து போத்தல் சட்டவிரோத கசிப்பு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# கடமையில் சிறப்பாகச் செயற்பட்ட 12 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் தலைமையில் கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அண்மையில் ஒட்டுசுட்டான் பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்டு கைது செய்யப்பட்ட நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டவர்கள் என தெரிவித்த மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பன்னிரண்டு பேர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களால் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து பொலிஸ் உயர் மட்ட குழுவினரின் கலந்துரையாடல் இடம் பெற்றது. (2)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இதயநோய் சிகிச்சை கருவிகள் அன்பளிப்பு



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு 8.6 மில்லியன் ரூபா பெறுமதியான இதயநோய் சிகிச்சை கருவிகள் புலம்பெயர் உறவுகளால் அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளது.

அதி நவீன எக்கோ இயந்திரம், இதயநோய் சிகிச்சை இயந்திரங்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினரும், புலம்பெயர் உறவான வரதராஜன் என்பவரும் லண்டன் Assist RR அமைப்பும் இணைந்து 8 மில்லியன் பெறுமதியான உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனர்.

இதில் வரதராஜன் என்பவரின் நிதி உதவியில் அதி நவீன எக்கோ இயந்திரத்தினை ஆறு மில்லியன் ரூபாவுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் இதய நோய்பரிசோதனைகள்மற்றும் ஏனைய தேவைகளுக்கு கிளிநொச்சியிலிருந்து நோயாளிகள் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய வைத்தியசாலைகளுக்கே அனுப்பி வைக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய்க்குப் பார்த்து தாய்க்கு விட்டானாம்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழனைத் தமிழன் தோற்கடித்தால் வெற்றியோ!

வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியமை தவறானது.

மாகாண சபை அமைச்சர் ஒருவரின் பதவியை பறிப்பதாக இருந்தால் அந்த அதிகாரம் ஆளுநருக்கு மட்டுமே உண்டு.

மாறாக அந்த அதிகாரம் முதலமைச்சருக்கு கிடையாது என நீதிமன்றத் தீர்ப்புத் தெரிவித்துள்ளது.

பொதுவில் மாகாண சபை முறைமை என்பது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்டது.

எனினும் தமிழ் மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை இலங்கை முழுமைக்கும் உரியதாக ஆக்கப்பட்டது.

இங்கு மாகாண சபை அதிகாரத்தில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வு என்பது, தமிழ் மக்களுக்குரிய மாகாண சபைக்குப் பாதகமேயன்றி ஏனைய மாகாண சபைகளில் அவை எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

எனவே, மாகாண சபைக்கான அதிகாரம் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருப்பதுதான் ஏற்புடையது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழ் அரசிடம் இருக்க வேண்டிய அதிகாரத்தை நாங்களே அவர்களிடம் கொடுத்ததாக நிலைமை முடிந்து விட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் டெனீஸ்வரனின் அமைச்சுப் பதவியை வடக்கின் முதலமைச்சர் நீக்கியமை செல்லுபடியற்றது.

மாகாண அமைச்சர் ஒருவரைப் பதவி நீக்கம் செய்வதாக இருந்தால், அதனை ஆளுநரே செய்ய முடியும் என்பதை நீதிமன்றத்தினூடாக நிரூபித்ததன் மூலம்; தனி மனித வெற்றியைச் சாதித்ததாகக் கருதலாமேயன்றி,

அது எங்கள் தமிழினத்துக்குப் பாதகமானதென்பதே உண்மை.

அதாவது வடக்கு மாகாண சபை உறுப்பினர் டெனீஸ்வரன் தான் இழந்த அமைச்சுப் பதவிக்காக வழக்கு வைத்து அதில் வெற்றி பெற்றிருப்பதென்பது அவருக்குத் தனிப்பட்ட சாதகத் தன்மையைக் கொடுத்திருந்தாலும் ஒட்டுமொத்த தமிழ் இனத்தைப் பொறுத்தவரை, மாகாண சபைக்கென இருந்த ஒரு முக்கியமான அதிகாரம் ஆளுநருக்குக் கடத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இந்த நிலைமை தமிழ் மக்களுக்குப் பாதகமாக அமையும் என்பதோடு, எதிர்காலத்தில் தமிழர் அரசில் அமைச்சர்கள் யாராக இருக்க வேண்டும் என்பதையும் ஆளுநர் ஊடாக மத்திய அரசே தீர்மானிக்கப் போகிறது.

ஆக, தமிழ் மக்களுக்கு – தமிழர் அரசுக்கு இன்னும் அதிகாரம் தேவை என்று வழக்கு வைத்து வாதிட வேண்டியவர்கள்,

தங்களிடம் இருக்கின்ற அல்லது இருப்பதாக நிலைநிறுத்தக்கூடிய அதிகாரத்தையும் ஆளுநரிடம் ஒப்படைப்பதற்காக நீதிமன்றம் ஏறி தீர்ப்பை பெற்றனர் எனும்போது,

தமிழன் தமிழனைத் தோற்கடித்து பெருமிதம் கொள்வதாக நிலைமை மாறிவிட்டது.

எது எவ்வாறாயினும் இன்று மாகாண சபை உறுப்பினர் டெனீஸ்வரனுக்கு மீளக் கிடைத்த பதவி அவரைத் தனிப்பட்ட முறையில் ஆற்றுப்படுத்தினாலும் இந்த முடிவுக்காக என்றோ ஒரு காலத்தில் தமிழினம் நொந்து கொள்ளும் என்பது நிறுதிட்டமான உண்மை.

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவ

# நவோதயா மக்கள் முன்னணியால் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கம்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவும் அமைப்பு நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

நவோதய மக்கள் முன்னணி இந்த அமைப்பைத் தொடங்கி வைத்துள்ளது.

இந்த புதிய அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று சனிக்கிழமை கொழும்பிலுள்ள நவோதய அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவும் அமைப்பானது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கான பொருளாதார முன்னேற்றங்களுக்காக அவர்களுக்கு பொருளாதார உதவிகளை வழங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த கலந்துரையாடலில், நவோதய மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.கே.கிருஷ்ணா, அரசியல் செயற்குழுத் தலைவர் வேலணை வேணியன், நவோதய அமைப்புக்களின் பொதுச் செயலாளர் சந்திரன் இளையதம்பி, நவோதய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ரவி பிரகாஷ், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உதவும் அமைப்பின் தலைவர் வீரசிங்கம் ஜெயசங்கர் உட்பட அதன் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம)

# மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் – லக்ஷ்மன் பியதாச

மாகாண சபை தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்ற ஆவணத்தில் கைச்சாத்திட விருப்பம் வெளியிட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன் லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

கண்டி - கட்டுக்கலை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆவணத்தில் கைச்சாத்திட ஏனைய அரசியல் கட்சிகள் உரிய பதிலை வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது மாகாண சபை தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கான யோசனையையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே முன்வைத்ததாகவும் அதன் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச குறிப்பிட்டுள்ளார். (ம)

# உயர்தர மாணவர்களுக்கு இலவச டெப் கணினி

## பிரதமர் ரணில் தீர்மானம்

(கொழும்பு)

உயர்தர மாணவர்களுக்கு இலவசமாக டெப் கணினி வழங்கும் திட்டத்தினை ஸ்திரமாக நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதற்கமைவான ஆலோசனைகள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

டெப் கணினி வழங்கும் ஆலோசனையை முறைப்படுத்தப்பட்ட திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் தேர்தலின்போது உயர்தர மாணவர்களுக்கு இலவச டெப் கணினி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படும் என உறுதியளித்திருந்தது.

ஆனால் குறித்த திட்டத்தினை முன்னெடுப்பதில் தேசிய அரசாங்கத்தின் பங்காளிகளுக்குள் இணக்கப்பாடுகள் ஏற்படவில்லை.

இதன் பின்னர் பிரதமரின் நேரடி தலையீட்டின் கீழ் முறையானதொரு திட்டமாக முன்னெடுப்பதற்கு தீர்மானிகக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் கல்வி அமைச்சரின் தீர்மானத்தின் படி அடுத்த வருடம் முதல் உயர்தர மாணவர்களுக்கு இலவச டெப் கணினி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## மின்சார சபைக்கு கடந்த ஆண்டு ரூ.4923 கோடி நட்டம்

இலங்கை மின்சார சபைக்கு கடந்த வருடம் 4923 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டத்துடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 240 வீதம் அதிகமாகும் எனவும் நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு 1449 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதாகவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# வவுனியா புளியங்குளத்தில் மோ.சைக்கிள் விபத்து

## வயோதிபர் படுகாயம்

வவுனியா - புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று நண்பகல் 12.00 மணியளவில் புளியங்குளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் கடைக்குச் சென்ற வயோதிபர் ஒருவரை பின்னால் வந்த கார் மோதியுள்ளது.

இதில், படுகாயமடைந்த வயோதிபர் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த மைக்கல் டேவிட் (68) என்பவரே விபத்தில் படுகாயமடைந்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## மகா கும்பாபிஷேகம்

கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர சுவாமி தேவஸ்தான பூர்வத்வார நூதன நவதள நவகலச சகித சிவமகா இராஜ கோபுர பிரஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.12 மணி முதல் 11.19 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. 117 அடி உயரமான இவ் இராஜகோபுரம் ஒன்பது கலசம் வைக்கப்பட்டு ஒன்பது தளங்களில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-78)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**குத்துவிளக்கில் ஒளியேற்றுவதற்கு உரிய பலன்கள்?**

**கிழக்கு திசை :** துன்பம் நீங்கும், கிரக பீடை விலகும்.

**மேற்கு திசை :** கடன் தொல்லை, சனி பீடை, கிரகதோஷம், பங்காளிகள் பகை நீங்கும்.

**வடக்கு திசை :** திருமணத் தடை, சுபகாரியத் தடை, கல்வித் தடை, வேலைவாய்ப்புத் தடை நீங்கும். திரவியம் கிட்டும், சர்வ மங்களங்கள் உண்டாகும்.

**தெற்கு திசை :** பெரும்பாவம், அபசகுணம்

ஒரு முகம் - மத்திம பலன்

இரு முகம் - குடும்ப ஒற்றுமை

மூன்று முகம - புத்திர சுகம்

நான்கு முகம் - பசு, புத்திர செல்வம் கிட்டும்

ஐந்து முகம் - அனைத்து நலன்கள் கிட்டும் *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு பாதுகாப்பு வழங்கிய அதிகாரி குறித்து தகவல் இல்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கடற்படை அதிகாரி தொடர்பான அறிக்கை, இலங்கைக் கடற்படையிடம் இல்லையென, கடற்படைத் தளபதி குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் அறிவித்துள்ளார் என, சட்டமா அதிபர் நீதிமன்றிற்கு நேற்று முன்தினம் தெரியப்படுத்தியுள்ளார்.

ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் போது, சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில், சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க இந்தக் காரணங்களை நீதிமன்றில் முன்வைத்திருந்தார்.

இவ்வாறான நிலையில், கடற்படைத் தளபதியின் அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறாமையின் காரணமாக, வழக்கு விசாரணைகள் தாமதமாக காரணமாக அமைந்திருப்பதையிட்டும், இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார். (இ-7)

# சு.கட்சியுடன் இணையப் போவதில்லை மகிந்த அணியாகவே செயற்படுவோம்

## ஜோன் செனவிரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உள்ளிட்ட சகல குழுக் கூட்டங்களையும் நிராகரித்து தாம் மகிந்த ராஜபக்ஷவுடன் மாத்திரம் இணைந்து செயற்படவுள்ளோம். இனிமேல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியினர் இல்லை என அவ்வணியினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியினர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினரை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட பொதுஜன முன்னணி உறுப்பினர்களை சந்தித்தனர். இச் சந்திப்பு குறித்து வினவிய போதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவிக்கையில்,

இந்த ஆட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் எமக்கும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குமிடையில் விரிசல் நிலைமைகள் ஏற்பட்டன. பிரதான செயற்பாடுகளில் நாம் முரண்படக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. எனினும் இச் சந்திப்பின் மூலமாக எமது இரு தரப்பினரும் இணைந்து செயற்படக் கூடிய தும் அடுத்தகட்டப் பயணம் ஒன்றினை தெளிவாக முன்னெடுக்கவும் கூடியதாக அமைந்துள்ளது. அடுத்தகட்டமாக நாம் இரு தரப்பினரும் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் செயற்படத் தீர்மானம் எடுத்துள்ளோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து அரசாங்கத்திலிருந்த நேரத்தில் எமது இரு தரப்பினரையும் இணைக்கும் செயற்பாடுகளையும் அரசாங்கத்தை பலப்படுத்தி தீர்வுகளை உருவாக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தோம். எனினும் அவை இரண்டுமே முடியாமல் போயுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து எம்மால் ஒருபோதும் பயணிக்க முடியாது என்பது குறுகிய காலத்திலேயே தெரிந்துவிட்டது.

ஆகவே நாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிரணியில் இணைந்து கொண்டோம். நாம் எதிர்க்கட்சிக்கு வந்தவுடன் இரு தோணிகளில் கால் வைக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இரு கால்களையும் எதிர்க்கட்சியின் பக்கமே வைத்துக்கொண்டு செயற்படுகின்றோம். நாம் அந்தப்பக்கமும் உள்ளோம் இந்தப் பக்கமும் உள்ளோம் ஜனாதிபதியுடனும் செயற்படுகின்றோம் மகிந்த அணியுடனும் உள்ளோம் போன்ற கருத்துக்களை முன்வைப்பது தவறானது. நாம் இனி அந்தப் பக்கம் செல்லப் போவதில்லை. மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்தே அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்று கூறினார். (7)

# மாகாண சபைகள் அமைச்சருடன் ரோஹன ஹெட்டியாராச்சி சந்திப்பு

சிவில் சமூக அமைப்பு என்ற அடிப்படையில் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சரை எதிர்வரும் 5 ஆம் திகதி சந்திக்க தாம் எதிர்பார்ப்பதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர்ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போதுவரையான காலப்பகுதியில் குறித்த குழு பல்வேறு தரப்பினருடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் குறித்து இதன்போது அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்படவுள்ளது.

அத்துடன், அதற்காக குழு முன்வைக்கப்பட்ட எதிர்பார்க்கின்ற யோசனைகள் குறித்தும் அமைச்சருக்கு தெளிவுபடுத்தவும் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பான அறிக்கையை ஜூலை மாதம் 15 ஆம் திகதி அளவில் அமைச்சரிடம் கையளிக்க எதிர்பார்ப்பதாகவும்ரோஹன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (7)

# இரத்தினங்களுடன் வெளிநாட்டு பிரஜை கைதானார்

(கொழும்பு)

சுமார் 84 இலட்சம் ரூபா மதிப்புடைய இரத்தினக் கற்களை இலங்கைக்கு சட்டவிரோதமாக எடுத்து வந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் டுபாயில் இருந்து மாலைதீவு ஊடாக இலங்கைக்கு வந்துள்ளதாக விமான நிலைய சுங்கப் பிரிவு கூறியுள்ளது. சந்தேக நபரை சோதனையிட்ட போது அவரிடம் இருந்து 858 இரத்தினக் கற்கள் மீட்கப்பட்டுள்ளன.

63 வயதுடைய உகண்டா நாட்டுப் பிரஜை ஒருவரே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

# யானை முத்துக்களை விற்க முயன்ற ராணுவ வீரர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

யானை தந்தத்தில் இருந்து பெறப்பட்ட முத்துக்கள் மூன்றை விற்பனை செய்ய முற்பட்ட இராணுவ வீரர்கள் இருவர் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தங்கொட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்த சம்பவம் தொடர்பில் மூவரையும் தங்கொட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதவாச்சி - போகஹாவெவ 5 ஆம் படையணியை சேர்ந்த கோப்ரல் ஒருவரும் லான்ஸ் கோப்ரல் ஒருவரும் மற்றும் அநுராதபுரம் கெமுனுபுர சிவில் பாதுகாப்பு முகாமில் கடமையாற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கோப்ரல்கிரிஉள்ள - மொத கொள்ள பகுதியை சேர்ந்தவர் எனவும், லான்ஸ் கோப்ரல் மொரவெவ - மஹாதிவுள்வெவ பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர் மொரவெவ - மஹாதிவுள்வெவ பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் குறித்த முத்துக்களை எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள் என்ற விசாரணைகளை தங்கொட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

# ஆட்கடத்தலைத் தடுக்க நடவடிக்கை இலங்கைக்கு அமெரிக்கா பாராட்டு

(கொழும்பு)

ஆட் கடத்தலை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ள நாடுகளில் இலங்கை முன்னணியில் உள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஆட்கடத்தலை தடுப்பதற்காக இலங்கை மேற்கொண்டுள்ள செயற்பாடு குறித்து அமெரிக்கா பாராட்டு தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வருடாந்தம் வெளியிடும் ஆட்கடத்தல் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் கடந்த வருடம் முதல் இலங்கை அரசாங்கம் சிறப்பாக செயற்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பிரசார நடவடிக்கைகள், ஆட்கடத்தல் காரர்களை அடையாளம் காணுதல் மற்றும் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் ஆட்கடத்தல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சட்டரீதியாக மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என இந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# மாத்தறை நகைக் கடையில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளின் ஒரு பகுதி மீட்பு



(கொழும்பு)

மாத்தறை நகைக்கடையில் கொள்ளை அடிக்கப்பட்ட தங்க நகைகளின் ஒரு பகுதியை மீட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட முக்கிய புள்ளியாக கருதப்படும் ஹபரகட வசந்த நேற்று முன்தினம் அவரது வீட்டிற்கு வந்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில் அவருடைய வீட்டை சோதனை செய்ய சென்ற போது, அங்கு துப்பாக்கி ஒன்றும் ரவைகள் நான்கும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஹபரகட வசந்தவின் வீட்டில் இருந்த மூவரை கைது செய்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் ஹபரகட வசந்தவின் மனைவி எனவும், ஏனைய இருவரும் ஹபரகட வசந்தவின் பெற்றோர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஹபரகட வசந்தவின் தாயிடம் நடத்திய விசாரணைகளின் பின் மாத்தறையில் நகைக் கடையில் கொள்ளை அடிக்கப்பட்ட தங்க நகைகளின் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# இரத்த சுத்திகரிப்பு நிலையம் 15-ம் திகதி சாவகச்சேரியில் திறப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்திற்குள் அமைக்கப்பட்டு வந்த இரத்த சுத்திகரிப்பு நிலையத்தை எதிர் வரும் 15ஆம் திகதி திறந்து வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் தெரிவித்துள்ளார். இம்புதிய நிலையில் காணப்பட்ட குறித்த கட்டடப் பணிகள் தற்போது வைத்தியசாலை அத்தியட்சகரின் பெரு முயற்சியின் பயனாக திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் கிழக்கு ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில் அதிசுந்தரபஞ்சதளநூதன இராஜகோபுர திருக்குட திருமஞ்சன மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.56 மணிமுதல் முற்பகல் 10.56 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா பேரவையில்...

யும், முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா என அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரனுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டு 600 பொலிஸார் கொலை செய்யப்பட்டமையை மேற்கோள்காட்டி சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தவகையில், திருக்கோவில் பகுதியில் 600 பொலிஸார் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் தான் முரளிதரனுக்கு எதிராக, ஜெனிவா மனித உரிமை பேரவையில் சாட்சி வழங்க தயார் என புலம்பெயர்ந்தவரான கலாநிதி போல் நிவுமன் தெரிவித்துள்ளதாக அந்த பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11ஆம் திகதி 600 பொலிஸ் அதிகாரிகள் திருக்கோவில் பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

மேலும் இந்த சம்பவத்தின் போது மாவனெல்ல மற்றும் அம்பாறை பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் உயிர் தப்பியமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## கணவன் கண்முன்னே...

சுமார் 4 மணி நேரம் வரை கொடூரமான முறையில் சித்திரவதை செய்துவிட்டு அங்கிருந்து இருவரும் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்த கொடூரமான சம்பவத்தில் 59 வயதான பெண்ணே பாதிக்கப்பட்டுள்ளார். அவருடைய கணவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளார். சம்பவத்தை அறிந்த அயலவர்கள் குறித்த இருவரையும் மீட்டு நேற்று காலை 7 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

இக் கொடூர சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்ததுடன் இவ்வாறான செயற்பாடுகளுக்கு சட்டம் மற்றும் நீதி துறை உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளதுடன். தமக்கு பாதுகாப்பில்லை என்றும் உடனடியாக குற்றவாளிகள் கடுமையான முறையில் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர். இதற்கு சமய தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-9)

## வடக்கில் சட்டம்...

இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்கு எவ்வித இடையூறும் இல்லை என்றும், எனினும் வடக்கில் சட்டம் ஒழுங்கு தொடர்பில் பிரச்சினை இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அது தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன கூறியுள்ளார். (ம)

## அரசிலிருந்து 10 சுதந்திரக்...

சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்களில் 10 பேர் அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் இணையும் பட்சத்தில் கூட்டு எதிர்க்கட்சியின் பலம் 80 உறுப்பினர்களாக அதிகரிக்கும். அத்துடன் அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமும் குறைந்து போகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கூட்டு எதிர்க்கட்சி...

ர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று இன்று இடம்பெறவுள்ளதாக அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழு அறிவித்துள்ளது.

கூட்டு எதிர்க் கட்சியின் கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், இதில் கலந்துகொள்வதா? இல்லையா? என்பது குறித்து இன்றைய கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரி.பீ. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் நடுவில் இருந்து கொண்டு பயணிக்க முடியாது எனவும், ஏதாவது ஒரு கட்சியுடன் சேர்ந்தே பயணிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டு கூட்டு எதிர்க் கட்சியில் செயற்பட முடியாது என்ற கருத்து கூட்டு எதிர்க் கட்சிக்குள் எழுந்துள்ளதனால், 16 பேர் கொண்ட குழு இவ்வாறான ஒரு தீர்மானம் எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டு 'எதிர்க் கட்சியின் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதாயின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொறுப்புக்களிலிருந்து நீங்கிக் கொள்ள வேண்டும் என்பது 16 பேர் கொண்ட குழுவுக்கு கூட்டு எதிர்க் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## நம்பிக்கையில்லா...

தெரிவித்தார்.

இதன்போது, பா.டெனீஸ்வரனை நீக்கியமையை தடை செய்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

நீதிமன்ற தீர்மானத்தின் பிரதி கிடைக்கப்பெற்ற பின்னர் தான் அதுகுறித்து கருத்துத் தெரிவிக்க முடியும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும், நீதிமன்ற தீர்மானத்திற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

வட மாகாண முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்திருந்தார்.

இதுபற்றி வட மாகாண முதல்வரின் கருத்தைக் கேட்டபோது, தமக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவர முடியும் எனவும் தாம் அதற்குப் பழகியவர் எனவும் பதிலளித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப்பை அண்மையில் முதல்வர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகியமை ஏமாற்றமளிப்பதாகத் தெரிவித்ததாக சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

எனினும், பேரவையில் இருந்து தாம் விலகினாலும், இலங்கை தொடர்பான சகல விடயங்களையும் அவதானித்துக்கொண்டிருப்பதாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் கூறியதாக முதல்வர் தெரிவித்தார். (ம)

## ஒட்டுசுட்டானில் கிளை...

துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்பட 5 சந்தேகநபர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

தலைமறைவாகி உள்ளவர் தொடர்பில் அவரது சகோதரியிடம் விசாரணை நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்குரிய வசதி சகோதரனுக்கு இல்லை என தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை, கொடி மற்றும் 20 கிலோ கிராம் எடையுடைய கிளைமோர் குண்டு மற்றும் கிளைமோர் குண்டை மறைவிலிருந்து இயக்கும் ரிமோட் உள்ளிட்ட கருவிகளுடன் முச்சக்கர வண்டி ஒன்று கடந்த 22ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் ஒட்டுசுட்டான் பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யானை வேலிகளை நிர்மாணிக்க ஜனாதிபதி மைத்திரி பணிப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்படத் தேவையான 2500 கிலோ மீற்றர் தூரமுடைய யானை வேலிகளை நிர்மாணிக்கும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற யானை வேலிகள் பராமரிப்பு நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலின்போதே அவர் இந்த பணிப்புரையை விடுத்தார்.

இதன்போது, யானை வேலிகளை முறையாக பராமரிக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, குறைபாடுகளைக் கொண்ட மற்றும் செயற்படாமல் உள்ள மின்சார வேலிகளை உடனடியாக புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

யானை வேலிகளைப் பராமரிக்கும் நடவடிக்கைகளுக்கு சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 1860 பேர் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள சுமார் 4000 கிலோ மீற்றர் தூரத்திற்கான யானை வேலிகளை பராமரிப்பதற்கு இந்த எண்ணிக்கை போதுமானதல்ல என்று ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த கலந்துரையாடலில், பேண்தகு அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா, அந்த அமைச்சின் செயலாளர் ஏ.பி.ஜி.கித்சிறி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்யரத்ன, பாதுகாப்பு பணிக்குழாம் பிரதானி ரவீந்திர விஜயகுணரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். (ம)

# கடந்த அரசு செய்த தவறை தற்போதைய அரசு செய்ய வேண்டாம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் செய்த தவறுகளை மேற்கொள்ளாதிருக்குமாறு கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்ததாவது,

இந்த அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கம் என கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி வேட்பாளராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் பதவிக்காகவும் இணைந்து தேர்தலில் களமிறங்கியபோது, நாமும் இருவர் மீதும் இருந்த நம்பிக்கையின் பிரகாரம் ஆதரவு வழங்கினேன். எனினும், சில விடயங்களைப் பார்க்கின்றபோது எமக்கு கவலையாக இருக்கின்றது. இருவரும் தமது கட்சி தொடர்பில் சிந்திக்கின்றனர். எனினும், நாடு தொடர்பில் சிந்திப்பதில்லை. கடந்த அரசாங்கம் செய்த தவறுகளை நீங்கள் இருவரும் செய்ய வேண்டாம். அப்பாவி மக்களின் பொருளாதாரத்தினை அழிக்க வேண்டாம் என இந்த இரண்டு தலைவர்களுக்கும் நான் கூற விரும்புகின்றேன். (ம)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 02 - 1957

மறைவு 12 - 07 - 2017

அமரர்

**நந்தகுமார் பூரணலட்சுமியம்மா**

ஓராண்டு ஆனாலும்
அழியாத உங்கள் நினைவுகள்
என்றென்றும் எங்கள் நெஞ்சோடு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(C-3088)

ஊறணி, வல்வெட்டித்துறை

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டிற்கு முன்னா...

தம து வீட்டிற்கு முன்னால் நின்றிருந்த போது பச்சை நிற முச்சக்கரவண்டியில் வந்த சிலர் இளைஞனை வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் தலைப் பகுதியில் வெட்டுக் காயங் களுடன் இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிரமான விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். அண்மைக்காலமாக யாழ் குடாநாட்டில் வாள் வெட்டு சம்பவங்கள் அதிகரித்துக் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-60)

## தேநீர், உணவுப்...

ஒரு கோப்பை தேநீரின் விலை 5 ரூபா யால் குறைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை உணவக உரிமையா ளர்கள் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையா ற்றிய அதன் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த விலைக்குறைப்பு இன்று முதல் அமுலுக்கும் வரும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இதற்கமைய இன்று முதல் தேநீர் ஒன்றின் விலை 15 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படும் என அகில இலங்கை உண வக உரிமையாளர்கள் சங்க தேசிய அமை ப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

மேலும் உணவுப் பொதியொன்றின் விலையை 10 ரூபாயினால் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்துள் ளது. (ம)

## வடக்கில் இடம்...

தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கி ன்றன.

அனைத்துத் தரப்பினரையும் உள்ளட க்கியதாக இந்த கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவு ள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய பொலிஸார், முப்படை பிரதா னிகள், சமூக சேவை திணைக்கள அதிகாரி கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பலர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள் ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் உள் ளிட்ட வட மாகாண பிரதேசங்களில் வன்மு றைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ம)

## பிரதான சந்தேக...

ப்பட்ட மேலும் இரு சந்தேகநபர்கள் அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் நீதவான் முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

குறித்த படுகொலை தொடர்பில் கடந்த 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிறுமியின் உறவினரான 22 வயதான இளைஞனும் இம்மாதம் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்த க்கது.

## மாகாண சபை...

தகம பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் இதனை குறி ப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ ல ங் கா சுதந்திர கட்சியின் 16 பேர் கொண்ட குழு என்ற ஒன்று தற்போது இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (ம)


### காணி விற்பனைக்கு

சங்கரத்தை-வட்டுக்கோட்டை வீதி யில், சங்கரத்தைக் குளம் சனசமூக நிலையம், சின்னம்மா வித்தியாசா லைக்கு அருகாமையில் 5 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:- 077 251 6439 Viber, What's app

(4747)

### காணி விற்பனைக்கு

நாவற்குழி கேரதீவு வீதியில், நாவற்குழி புகையிரத நிலையத்தி ற்கும் A9 வீதிக்கும் அருகாமையில் 45பரப்பு காணி உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:- 077 251 6439 Viber, What's app

(4747)

### இந்து நாகரிகம் இறுதிக்கருத்தரங்கு

D.C.M யாழ்நகர்

02.07.2018

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு பிரபல ஆசிரியர்கள். -நிர்வாகி

(4719)

### Biology உயிரியல் வகுப்புக்கள் A/L

Group and Personal Classes

Tamil and English medium

2019 A/L - Unit -05 | 2020 A/L - Unit -03

Commences on 01.07.2018

K.Kalaivanan B.Sc (Hons) (071 343 8442)

3rd mile post lane, K.K.S Road
kokuvil east, kokuvil. Jaffna

(4744)

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

### CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

(C-3060)

### உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனமானது புதிய கிளைகளை ஆரம்பிக்க உள்ளதால் அதற்கான பதவி வெற்றிடமாக முகாமையாளர்கள், உதவி முகா மையாளர்கள் மற்றும் பணியாளர்கள் இணைக்கப்படவுள்ளனர். A/L, O/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏனை யவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி நெறியுடன் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

புதிய கிளைகள் ஆரம்பிக்கவுள்ள இடங்கள்:-
- யாழ்ப்பாணம்
- வவுனியா (செட்டிகுளம், வவுனியா)
- கிளிநொச்சி (பரந்தன், கிளிநொச்சி)
- மன்னார் (பேசாலை, மன்னார்)
- முல்லைத்தீவு (மாங்குளம்)

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் EPF, ETF மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வசதிகள், மருத்துவ வசதிகள் பெற்றுத்தரப்படும்.

(4757) தொடர்புகளுக்கு:- 076 898 4030, 076 655 4030

### SHRIHAR Construction

SHRIHAR Constructions

ஸ்ரீகர் கட்டடப்பொருள் வாணிபம்

காட்டுக்கல், சல்லிக் கல், மணல், சீமெந்துக் கல் வகைகள், அலங்காரிப்புக் கல் போன்ற அனைத்து கட்டடப் பொருட்களையும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-3062)

21/4, இருபாலை வீதி, யாழ்ப்பாணம். T.P:0778661605

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



(C-3065)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

### வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-3059)

### ஸ்ரீ மூத்தநயினார் திருக்கோயில் ஆனைக்கோட்டை



4ம் திருவிழா

வாணவேடிக்கை நிகழ்ச்சி

இன்று ஞாயிற்றுக்கிழமை (01.07.2018) இரவு முருகப்பெருமான் முத்துச் சப்புறத்தில் வீதி உலா வரும்போது கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட கண்ணுக்கு குளிர்ச்சியான மிகவும் நுட்பமான முறையில் தயாரிக்கப்பட்ட வாணவேடிக்கை நிகழ்ச்சியைக் கண்டு இரசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4-ம் திருவிழா உபயகாரர்

(4762)

### உடன் தேவை

யாழ். பிரபல கல்வி நிறுவனத்தில் இயங்கிவரும் சிற்றுண்டிச்சாலைக்கு பெண் உதவியாளர் உடன் தேவை.

நேரில் வருகை தரவும் அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு
077 786 3006
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(4745)

### மருந்தாளர் தேவை

முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக இருக்கும் தனியார் மருந்தகத்திற்கு (Jathu Pharmacy) மருந்தாளர் தேவைப்படுவதனால் தகைமையுள்ள மருந்தா ளர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 350 4003

முகவரி:- மாவட்ட பொது வைத்தியசாலை முன்பாக தண்ணீரூற்று, முல்லைத்தீவு.

(B-3090)

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாயப்பண் ணைக்கு அருகில் நிலப்பரப்பு 5 குளி 0.50 விஸ் தீரணமுடைய காணி கட்டிடத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகள்:- 076 702 3565

குறிப்பு:- திருமண மண்டபம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு உகந்த இடம்.

(4751)

### ParcelLk மகாராஜா பொதிகள் சேவை GTV Express

நாம் மேலும் பின்வரும் தரமான சேவையை வழங்கிவருகின்றோம்

*வெளிநாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை.

*365 நாள் வாடிக்கையாளர் சேவை.

*குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை.

30 வருடத்திற்கு மேலதிகமாக வாடிக்கையாளர் நன்மதிப்பை பெற்ற ஒரே நிறுவனம்

| 11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| லண்டன் | ஜேர்மனி | அவுஸ்ரேலியா | சுவிஸ் | கனடா |
| Rs.600/- | Rs.600/- | Rs.800/- | Rs.900/- | Rs.900/- |

| கொழும்பு | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| இல. 18/3 டாக்டர் ஈ.ஏ.குரே மாவத்தை கொழும்பு 06 | 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25,கந்தசாமி கோவில் வீதி. வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி கிளிநொச்சி. |
| 0112 360926<br>011 4378164 | 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |

(சி-3082)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 172
விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 01.07.2018 தொலைபேசி : 021 222 3378

நாவாந்துறை




## மாற்றம் அடையும் நிகழ்ச்சி நிரல்



# கொடூரம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர ஏனைய மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன இண்டைக்குச் சாத்திரியாரைக் காணவில்லை... மூப்பர் குரல் கொடுத்தார்.

பொருத்தம் பார்க்கிறதுக்கு ஆட்கள் வந்திருப்பினம் அதுதான் சுணங்குது போல. கங்காணியார் கார்த்திகேசனின் பதிலை மூப்பர் அங்கீகரிப்பதாக அமைதியானார்.

**விதானையார்:** அது சரி, அண்டைக்கு முதலமைச்சரின்ர நூல் வெளியீட்டு விழாவுக்குப் போனனான்.

**பண்டிதர்:** எனக்கு வர முடியாமல் போயிற்றுது. என்ன நடந்தது விதானையார்.

**விதானையார்:** என்ன நடக்கிறது. முதலமைச்சரின்ர முதுகில குத்தினவியள் முன்னுக்கு இருந்தினம்.

**வாத்தியார்:** இது கலியுகம். கலியுகத்தில நெஞ்சில உரமும் நேர்மைத்திறனும் வாக்கில வாய்மையும் இல்லாமல் போலி நடிப்புகள் தானே மேலோங்கி நிற்கும். அந்தவகையில முதலமைச்சரின்ர முதுகில குத்தினவியள் முன்னுக்கு இருக்கிறதில ஒரு பிழையும் இல்லை.

**விதானையார்:** அது மட்டுமல்ல வாத்தியார் முதலமைச்சரின்ர தனிப்பட்ட செயலாளர்கள், முதலமைச்சருக்கு எதிராக செயற்பட்டவர்களை ஓடி ஓடி கையில பிடித்துக்கொண்டு போயல்லோ முன்னாசனங்களில் இருத்தினவியள்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். நானும் அவதானித்தனான்.

**பண்டிதர்:** பழைய தொடர்புகளை மறக்க முடியல்லப் போல.

**மூப்பர்:** முதலமைச்சரின்ர நூல் வெளியீட்டில கூட்டமைப்பின்ர தலைவர் இரா. சம்பந்தரும் கலந்து கொண்டவர். அந்த வெளியீட்டு விழாவில ஏதேனும் புதிதாகப் பேசுவினம் எண்டு சனங்கள் ஆர்வத்தோட வந்தவியள்.

ஆனால் அங்க இசை விழா நடந்தது மாதிரி இசைக்கச்சேரி நீண்ட நேரத்தை எடுத்திட்டுது.

**கங்காணி:** அப்ப இசை விழாவிலதான் புத்தக வெளியீடு நடந்ததோ.

**மூப்பர்:** (சிரித்தபடி) இல்லை இல்லை நீதியரசர் பேசுகிறார் என்ற முதலமைச்சரின் நூல் வெளியீடு தான் நடந்தது.அந்த மேடை நிகழ்வில ஒரு சிறு நிகழ் வாக ஒன்று இரண்டு பாட் டைப் பாடுவதாக இசை நிகழ்வை வைத்திருக்கலாம். ஆனால்...

**விதானையார்:** விழாவில ஓடித்திரிந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு இதுதான் முதல் நிகழ்வாக இருந்திருக்கும். அவையள் இசை நிகழ்வு நேரத்தை வரையறுக்க முடியாத அளவில ஓடித் திரிந்தினம்.

**விதானையார்:** நூலைத் தொகுத்த பிரக்கிராசியாரின்ர பேச்சும் வித்தியாசமாக இருந்தது.



## சாத்திரியார் சதாசிவம் ஐசியூவில அனுமதிக்கப்பட்டிருக்கிறார்

**வாத்தியார்:** உண்மை தான் விதானையார். ஊர்ப் பெருமை சொன்ன அவர் தன்ர ஊரில ஒரு நீதவானை இடமாற்றின செயலைத் தன்ர சாதனையாகக் கூறினார். அதுமட்டுமல்லாமல் எங்கள் எல்லோருடைய தலைவருமான இரா. சம்பந்தர் என்று குறிப்பிட்டதோட, ஒரு சிலரின்ர பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைச் செயற்றிறன் மிக்கவர்கள் போல கூறிக் கொண்டார்.

எனக்கெண்டால் முதலமைச்சரையும் கூட்டமைப்பையும் ஒற்றுமைப்படுத்திவிடுகிற வேலையில அவர் இறங்கி இருக்கிறார் போலத் தெரியுது.

**பண்டிதர்:** நல்ல விடயம் ஒற்றுமைப்படுவது நல்லது தானே. ஆனால் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்த போது அதனைத் தடுக்கிற முயற்சியிலும் பிரக்கிராசியார் தலையிட்டிருந்தால், ஒற்றுமைப்படுத்திற முயற்சியில ஈடுபடலாம். ஆனால் அப்படி ஏதும் நடந்ததாகத் தெரியல்ல. எங்கட சனங்கள் கெம்பி எழுந்ததாலதான் நம்பிக்கையில்லாப் பிரேரணை பிசுபிசுத்துப் போனது.

**பண்டிதர்:** தெரியாமல் தான் கேட்கிறன் நடக்கப் போற மாகாண சபைத் தேர்தலில முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் ஐயா தான் நிற்பாரோ?

**விதானையார்:** விக்னேஸ்வரன் ஐயாவை நம்ப வைத்து ஏமாற்றுகிற வேலையில கூட்டமைப்பு ஈடுபடலாம் என்பதால நேர காலத்தோட ஒரு முடிவை எடுத்து அதனை எங்கட சனத்துக்குத் தெரியப்படுத்துறதுதான் விக்னேஸ்வரன் ஐயா செய்யக்கூடிய ஒரேவழி.

**வாத்தியார்:** சரி...சரி... அரசியலைக் கதைத்துக் கொண்டிருந்தால் நேரம் போறதும் தெரியாமல் இருக்கும். சுழிபுரத்தில ஆறு வயது மாணவியைக் கொலை செய்திருக்கினம். மானிப்பாயில வாள்வெட்டு, மூதாட்டி கொலை செய்யப் பட்டிருக்கிறார். இப்படியே அவலச் செய்திகள் எங்களை உலுக்கி வருகுது. ஆனால்...

**கங்காணி:** என்ன வாத்தியார் ஆனால் எண்டு இழுக்கிறியள்.

**வாத்தியார்:** தமிழ் அரசியல் தலைமை ஒரு தலைமயிர் வளர்த்த மாதிரி தனிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது பற்றித்தான் கதைக்குது.

**விதானையார்:** அப்படிக் கதைத்து அதில ஏதேனும் கிடைத்தாலும் பரவாயில்லை. அதிலும் எதுவும் இல்லை என்கிற போது...

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் எங்கட உயர் அரச அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், அரசியல்வாதிகள் என அனைவரும் ஒன்றுகூடி வடக்கின் நிலைமை பற்றி ஆராயவேணும்.

**மூப்பர்:** அதோட ஒவ்வொரு ஊர்களிலும் இருக்கிற கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்களை இயங்கு நிலைக்கு உட்படுத்தி அந்தந்தப் பகுதிகளில பௌர்ணமிக் கருத்தரங்குகளை நடத்த வேணும். அந்தக் கருத்தரங்கில துறை சார்ந்தவர்களை அழைத்து ஒழுக்கம்- பண்பாடு- விவசாய முயற்சி, கால் நடை வளர்ப்பு, உளவியல், ஆன்மீகம், பெற்றோரின் பங்கு, பிள்ளைகளின் கல்வி, மக்கள் சமூகத்தின் பொறுப்பு என்பன தொடர்பில் கருத்துரைகளை வழங்கி மக்களை விழிப்படையச் செய்யவேணும். அப்பதான் ஊரில முன் னேற்றம் ஏற்படும்.

இதைவிட்டிட்டு வன்கொடுமையும் கொலையும் நடக்கும் போது அதனை எதிர்த்து கடையடைப்பு, போராட்டம் செய்யிறது என்றால், நடக்கிற அநியாயங்கள் நடந்தே தீரும்.

**விதானையார்:** மூப்பர் சொல்லுறது முழுக்க முழுக்கச் சரி. எங்கட பகுதிகளில எத்தனையோ கிராமங்களின்ர முன்னேற்றத்திற்கு அந்தப் பகுதிகளில இயங்குகிற சனசமூக நிலையங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் காரணமாக இருக்கின்றன.

எனவே முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேணும். கலாசார நிகழ்வுகளை நடத்தி இளைஞர் சமூகத்தை தவறான பாதையில செல்லவிடாமல் வழிப்படுத்த வேணும். இது விடயத்தில கலாசார உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என அனைவரும் பங்கேற்று எங்கள் கிராமங்களில் முன் னேற்றத்தை ஏற்படுத்த வேணும்.

இவ்வாறு விதானையார் சொல்லிக் கொண்டிருக்கையில், அந்நேரம் பார்த்து சாத்திரியார் சதாசிவத்தின்ர பேரப்பெடியன் ஆலடிக்கு வந்தான். தாத்தா யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின்ர அதி தீவிர சிகிச்சைப் பிரிவில அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவலைக் கூற, என்ர கதிர்காமத்துக் கந்தா சாத்திரியாருக்கு என்ன நடந்தது எனக் கேட்டார் வாத்தியார்.

என்னெண்டு தெரியல்ல. பேரப்பெடியனின் பதிலோடு ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து யாழ்ப்பாணப் பெரியாஸ் பத்திரிக்குச் செல்லத் தயாராகினர். பெரியாஸ்பத்திரிக்குச் சென்றவர்கள் ஐ.சி.யூவில் இருக்கிற சாத்திரியாரை ஒவ்வொருத்தராகச் சென்று பார்த்தனர்.

சாத்திரியாருக்கு ஒட்சிசன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்க இருக்கிற அத்தனை கருவிகளும் சாத்திரியாரின்ர உடம்பில பொருத்தப்பட்டிருக்குது. கங்காணியார் வாத்தியாரின் காதில் ஏதோ இரகசியம் சொல்ல,

என்ன வாத்தியார்; கங்காணி என்ன சொல்லுறார். சாத்திரியாருக்கு ஏதேனும் ஆபத்தாமோ என்று வினவினார் பண்டிதர்.

**வாத்தியார்:** இல்ல... இல்ல யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை ஐ.சி.யூவில (ICU) இப்ப அனுமதிக்கப்படுகிறவியள் குணமடைகிறது குறைவு. ஏதோ வொரு தொற்றுக்கு ஆளாகினம். இப்ப ஐ.சி.யூவில ஏதோ பிரச்சினை நடக்குது எண்டு ஆஸ்பத்திரியில கதைக்கிறவியளாம்.

**பண்டிதர்:** என்ர ஆலடிப் பிள்ளையாரே சாத்திரியாரைக் காப்பாற்று. காலப் பிழைக்கு இந்த நேரம் பார்த்து ஐ.சியூவில சாத்திரியார் இருக்கிறதாப் போச்சு.

இவ்வாறு கூறியபடி ஆலடி மாநாட்டு உறுப் பினர்கள் வைத்தியசாலையில் இருந்து வெளியேறினர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தி அமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா கடந்த 24.06.2018 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வுகளுக்குப் பின்பாக, வடபுலத்து மக்களின் கவனத்தை ஈர்த்த ஒரு நிகழ்வாக நீதியரசர் பேசுகிறார் என்ற நூல் வெளியீட்டு விழாவைக் குறிப்பிட முடியும்.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், தமிழர்களின் அரசியல் புலத்தில் மக்களின் கவனத்தையீர்த்த நிகழ்ச்சிகளில் எழுக தமிழ் எழுச்சி முதன்மையானது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வகிபங்கு இருந்துள்ளதென்பது அவதானிக்கக்கூடிய விடயம்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எந்த நிகழ்வுகளை நடத்தினாலும் அதில் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வகிபங்கு இல்லை என்ற போது அவற்றுக்கான முக்கியத்துவம் பெரிதுபடுத்தப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. மாறாக அண்மைக்காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறநீங்கலாக நின்ற நிகழ்வுகளே தமிழ்மக்களின் பார்வையைத் தம்பக்கம் ஈர்த்திருந்தது.

எனினும் இவை யாவற்றுக்கும் மாறாக வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் உட்பட பாராளுமன்றப் பிரதிநிதிகளும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அதிலும் குறிப்பாக முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தவர்கள், அந்தப் பிரேரணையைத் திட்டமிட்டவர்கள் என அனைவரும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றனர் என்பது தான் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்க விடயமாகும்.

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் நிறைவு பெற்று அடுத்த தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடக்கின்ற வேளையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பிப்பாரா? என்ற கேள்விகள் எழுந்த வண்ணமுள்ளன.






முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் புதிய கட்சியை ஆரம்பித்து தேர்தலில் களமிறங்குவாராக இருந்தால் அவரின் வெற்றி நிச்சயம் என்பது ஏற்புடைய உண்மை.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெற்றி பெற்று விட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்து புதியதொரு தலைமைக்கு வழி வகுக்கும் என்பது தவிர்க்க முடியாதது.

அதாவது முதலமைச்சர் விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பித்து தேர்தலில் களமிறங்கும்போதே புதிய கூட்டமைப்பு கருக்கட்டிவிடும்.

இப்போதிருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது புளொட், ரெலோ ஆகிய இரு கட்சிகளின் இணைவை மட்டுமே குறித்து நிற்கிறது.

கூட்டமைப்பில் இருந்து புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் வெளியேறினால் தமிழரசுக்கட்சி தனித்து விடும்.

அதேநேரம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பிப்பாராக இருந்தால் புளொட் அவரை ஆதரிக்கும் என்பதை அந்தக் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

எனவே எஞ்சியிருக்கக் கூடிய தமிழரசுக் கட்சியும் ரெலோவும் மட்டுமே கூட்டமைப்பைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

அதிலும் செல்வம் அடைக்கலநாதன் தவிர்ந்த ரெலோவின் ஏனைய முக்கியஸ்தர்கள் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கத் தவறமாட்டார்கள்.

ஆக, ரெலோவும் கூட்டமைப்பில் இருந்து வெளியேறாமல் இருந்தால் அந்தக் கட்சிக்குள் உடைவு ஏற்பட்டு விடும் என்ற சூழ்நிலையில் ரெலோவும் வீட்டை விட்டு வெளிக்கிட்டாக வேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிடும்.

இதுதவிர, புளொட் தலைவர் சித்தார்த்தன் அவர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு ஆலோசனையை வழங்குவதில் மிகவும் நெருக்கமானவர். சித்தார் த்தன் கூறுகின்ற ஆலோசனையை சம்பந்தர் நிராகரிப்பதில்லை. இந்நிலையில் விக்னேஸ்வரன் அவர்களை வெளியேறவிடக்கூடாது. வெளியேறவிட்டால் எல்லாம் தவிடுபொடியாகிவிடும் என்ற எச்சரிக்கையை சித்தார்த்தன் அவர்கள் இரா.சம்பந்தருக்கு எடுத்தியம்பிய வண்ணம் இருக்கிறார் என்பது அறியப்பட்ட தகவல்.

இவை ஒருபுறமிருக்க, முதலமைச்சர் விக்னேஸ்வரனின், நீதியரசர் பேசுகிறார் என்ற நூல் வெளியீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் சிலரைத் தவிர, ஒட்டுமொத்தக் கூட்டமைப்பினரும் கலந்து கொண்டுள் ளனர். இந்த அதிரடியான சம்பவத்தின் பின்னணி என்ன என்பதுதான் இங்கு ஆராயப்படவேண்டிய விடயம்.

அதாவது முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தவர்கள்- அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் விக்னேஸ்வரனை நிறுத்துவதில்லை என்று அறிவித்தவர்கள் திடீரென வீட்டோடு கிளம்பி வீரசிங்கம் மண்டபம் வந்தனர் என்றால், அதனை ஒரு சாதாரண சம்பவமாக எவரும் பார்த்துவிட முடியாது.

முதலமைச்சரின் நூல் வெளியீட்டிற்கு கூட்டமைப்பினர் வருகை தந்தாலும் விமர்சிப்பீர்கள், வருகை தராவிட்டாலும் விமர்சிப்பீர்கள். உங்களை என்ன தான் செய்வது என்று நீங்கள் முணுமுணுத்தால் அதனை நிராகரிப்பதற்காக ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்டமுடியும்.

அதாவது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் புத்தக வெளியீடு தொடர்பில் அச்சிடப்பட்ட அழைப்பிதழில் சிறப்பு விருந்தினர் என்ற வரிசையில் இரா.சம்பந்தரின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. மாறாக திருத்தியமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் என்று ஏலவே அச்சிடப்பட்ட அழைப்பிதழுக்கு மேலதிகமாக அச்சிடப்பட்டு ள்ளது.

அந்த திருத்திய நிகழ்ச்சி என்ற பகுதியிலேயே இரா. சம்பந்தரின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆக, முதலமைச்சர் விக்னேஸ்வரனின் புத்தக வெளியீட்டில் இரா.சம்பந்தர் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

அழைப்பிதழ் அச்சாகிய பின்பு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரையும் நூல் வெளியீட்டிற்கு அழைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதென்பது உறுதியாகிறது.

இருந்தும் அந்தக் கோரிக்கையை முன்வைத்தது யார் என்பதுதான் இன்னமும் வெளிப்படாத விடயம்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கலந்து கொண்ட அதேநேரம் அந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முதலமைச்சருக்கு எதிரான வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என ஒட்டுமொத்த எதிர்ப்படையும் கலந்து கொண்ட போது, முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனிக்கட்சி அமைப்பதற்கு ஆப்பு வைக்கப்படுகிறது எனப் பலரும் விமர்சித்துக் கொண்டனர்.

கூடவே அடுத்த முறையும் விக்னேஸ்வரன் அவர்களே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவார். அதற்கு அவரும் சம்மதிப்பார் என்ற கருத்துக்களும் மக்கள் மத்தியில் பேசுபடு பொருளாயிற்று.

இப்பொழுது நிலைமை என்னவாக உள்ளது என்பதற்குப் பதிலளிக்க இன்னமும் ஒருசில மாதங்கள் மட்டுமே தேவைப்படும். அதுவரை தமிழ்மக்களும் அரசியல் அவதானிகளும் அமைதியாக இருப்பதே ஒரேவழி.

**திருநீலகண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

## ஏமாந்த சிறுத்தை




ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானை யும் புள்ளி மானையும் கண்டது. அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில் இடது வலது பாதைகளில் ஓடின. சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. 'எதைத் துரத்தலாம்' என்று தயங்கி நின்றது. பிறகு, 'சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம்.


அதன் இறைச்சி தான் சுவையாக இருக்கும்' என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத்தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலை தூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி! புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது. ஆனால் புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்துவிட்டிருந்தது.

**நீதி : முக்கியமான நேரத்தில்முக்கியமான் முடிவை விரைவாக எடு க்க வேண்டும்.**




## கல்வி



சித்திரமான இச்சொல்லுக்கு
சிந்தனையால் வளம் சேர்ப்போம்

மாறிவரும் உலகில்
புதியன படைப்போம்...

கைவிரல் பிடித்து
நடை பழக்கி
மெல்ல மேலேற்றுவோம்...

உலகம் செதுக்க
உளிகள் படைப்போம்...

பாரதி வழி நின்று
மனத்தின்மையை தெளிப்போம்...

அறிவின் கூர்மையால் அற்புதம்
செய்வோம்...

தன்னை உணரும் தத்துவம் படிப்போம்...
உடலினை உறுதி செய்வோம்...

கவிதை புனைகதை
ஓவியம் உள்ளிட்ட நுண்கலை வளர்ப்போம்...

ஒவ்வொரு விதையும்
விருட்சமாக வீரியம்
கொடுப்போம்...

அன்பின் துணைகொண்டு
அனைத்தும் செய்வோம்...

மானுடம் செழிக்க
சுவடுகள் பதிப்போம்..

## பொது அறிவு

1)உலக அமைதிக்கான நோபல் பரிசு யாரால் சிபாரிசு செய்யப்படுகிறது ?

**நோர்வே அரசு**

2)வெங்காயத்தில் அதிகமுள்ள வைட்டமின் எது?

**வைட்டமின் 'பி',**

3)தபால் தலையில் முதலில் இடம்பெற்ற இந்தியர் யார் ?

**மகாத்மா காந்தி.**

4)உலகின் முதல் செயற்கைகோளின் பெயர் என்ன?

**ஸ்புட்னிக் 1**

5) அலைபேசிகளில் காணப்படும் SOS என்பதன் விரிவாக்கம் என்ன?

Save Our Soul.

6)உலக இரத்த தான தினமாக கருதப்படும் நாள் எது?

**அக்டோபர் 1**

7)மோப்ப சக்தியால் இரை தேடும் பறவை இனம் எது?

**கிவி**

8)இதயத்தில் எதனை அறைகள் உள்ளன?

**4**

9)பயணித்த தூரத்தை அறிய வாகனங்களில் பயன்படுத்தப்படும் கருவி எது?

**ஓடோமீட்டர்**

10)சுப்ரமணிய பாரதியின் பிறந்த ஊர் எது?

**எட்டயபுரம்**




சரியான எழுத்துக்களை பெட்டிக்குள் இடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



### மாணவி றெஜினாவின் கொலைபற்றி?

### பெண்களின் பாதுகாப்பு எப்படி இருக்கிறது இப்போது?

### யாழ்ப்பாணத்தில் கடைகட்டும் படலம் முடிஞ்சு இப்போது கல்யாண ....

**தமிழன் — யாழ்ப்பாணம்**

**புலி வேட்டை பற்றி?**

மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாய் இருந்த சிறுத்தைப் புலி கொல்லப்பட்டது என்ற செய்திக்கு அப்பால் இதற்கு அப்பால் இறந்த அந்த சிறுத்தைப்புலியுடன் இளைஞர் நடந்து கொண்ட விதம் வேதனையின் உச்சம்.

நாம் இழந்த இழப்பை அறிந்தவர்கள் இன்று கூட போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்று கத்திக் கதற என்ன காரணம். இறந்தவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை ஒரு துளியும் கடைப்பிடிக்காத காடையர்களுக்கு தண்டனை வேண்டித்தானே கத்துகிறோம்.

ஆனால் ஐந்தறிவுள்ள சிறுத்தைப் புலியுடன் நாம் (இழப்பை அனுபவித்த இனம்) நடந்து கொண்டதை சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் வெட்கித் தலை குனிவோமல்லவா.

**சரன் — யாழ்ப்பாணம்**

**பெண்களின் பாதுகாப்பு எப்படி இருக்கிறது இப்போது?**

ஆறு வயது பெண் குழந்தைக்கே பாதுகாப்பு இல்லாத ஒரு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நினைக்கும் பொழுது நெஞ்சம் வெட்கித் தலை குனிகிறது.

போதையின் பிடியில் சிக்கி இந்த சமூகத்தை வேரறுக்கும் செயல்களைச் செய்பவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும். அந்தத் தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருத்தல் வேண்டும். இதுவே எமது தாழ்மையான கருத்து.

**வருஷன் — கிளிநொச்சி**

**வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் வியாசரே?**

ஒரு திருமண வீட்டிற்குப் போகிறோம். அங்கு விதவிதமான உணவுகள் இருக்கிறது. ஏன் சோறு கூட வெள்ளை, சிவப்பு என்ற இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. நமக்கு பிடித்த சோற்றை முதலில் எடுத்து விட்டு கறிப்பக்கம் செல்கிறோம். விதவிதமான கறிகள். சிலருக்கு கத்தரிக்காய் அலெர்ஜிக். அதே கத்தரிக்காய் சிலருக்கு அலாதிப்பிரியம். சிலருக்கு பயிற்றங்காய் நாரிப்பிடிப்பை ஏற்படுத்தும் (எனக்கல்ல). சிலருக்கு பயிற்றங்காய் பாயாசம் போல. வடையில்கூட சிலர் ஒரு வடை எடுப்பார்கள். சிலர் இரண்டு மூன்று கூட தாண்டும். இது போலத்தான் வாழ்வும். எமக்குப் பிடித்ததை எடுத்துக் கொண்டு பிடிக்காததை தட்டி விட்டு விட்டு முன்னேறிச் செல்ல வேண்டும். அப்படிச் செல்பவனுக்குத் தான் வெற்றி கிடைக்கிறது.

**சுதன் — குப்பிளான்**

**தமிழர்களுக்கு கூட்டமைப்பு பெற்றுத் தந்த தீர்வு என்ன?**

இந்தக் கேள்வியை ஒரு மூன்று நான்கு தரம் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாருங்கள். உங்களை அறியாமல் உங்களுக்கும் சிரிப்பு வரும். தங்களுக்கான வாகனப் பொமிட்டில் இருந்து வகை வகையான....... வரை அனைத்திற்கும் தீர்வு கண்டுவிட்டார்கள். தமிழரின் தீர்வைத் தவிர.

**தம்பி — வதிரி**

**வியா மாஸ்ரர் நான் ஒரு பெண்ணை உயிராக விரும்புகிறேன். என் காதலைச் சொல்ல செல்லும் போதெல்லாம் யாராவது குறுக்கே வந்து விடுகிறார்களே?**

அடப்பாவி அவனாடா நீ. என் மனைவியின் பின்னால் ஒருத்தன் திரிகிறான். அவனை என்ன செய்யலாம் என்று என்னிடம் ஒரு பெண்ணின் கணவர் கேள்வி கேட்டார். நானும் இடக்கு முடக்காய் பதில் சொல்லி விட்டேன்.




**செல்வம் — இணுவில்**

**யாழ்ப்பாணத்தில் கடைகட்டும் படலம் முடிஞ்சு இப்போது கல்யாண மண்டபம் கட்டும் படலம் ஆரம்பமாகிவிட்டதே?**

அது என்னமோ உண்மைதான். ஆனால் நடித்தால் கதாநாயனாகத்தான் நடிப்பேன் என்று அடம்பிடித்தது போல யாழ்ப்பாணத்துப் பெண்கள் கட்டினால் வெளிநாட்டு மாப்பிள்ளையைத்தான் கட்டுவேன் என்று அடம்பிடிக்கிறார்களே.

இங்கு கல்யாண மண்டபம் கட்டிப் பயன் என்ன?

**சயன் — யாழ்ப்பாணம்**

**மனிதனிடம் சமூக அக்கறை இல்லாது போய் விட்டதே?**

இதற்கு ஒரு சின்ன உதாரணம். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு பக்கத்தில் இருக்கும் பஸ் தரிப்பிடத்தில் ஒரு முதியவர் இற்றைக்கு இரண்டு மாதங்களாக வசித்து வருகிறார். வீதியோரத்தில் சமையல் கூட செய்கிறார். பஸ்தரிப்பிடம் முழுவதும் தனது சாமான்களை அடுக்கி வைத்து வீடு போல தங்கி இருக்கிறார். இற்றைவரை அதையாரும் கவனிக்கவில்லை. பஸ் ஏற வரும் பயணிகள் சற்றுத்தள்ளி வெயிலில் நின்று பஸ் எடுக்கிறார்கள். அந்த முதியவரை அவரின் குடும்பமும் கவனிக்கவில்லை. அந்த பகுதி அதிகாரிகளும் கவனிக்கவில்லை. பிரதேச சபையும் கவனிக்கவில்லை. பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் ஒரு அநாதை முதியவருக்கு உரிய நடவடிக்கை எடுத்து அவரை ஏதும் இல்லத்தில் சேர்க்கத் தெரியாத எமக்கு எதுக்கு சபை. வெட்கம், வேதனை, அவமானம்.

**அபி — முல்லை**

**வியாசரே உங்களை ஒரு பெண்ணுடன் பீச்சில் பார்த்தேனே?**

அடப்பாவி குதூகலமாய் இருக்கிற என் வாழ்க்கையில் கும்மி அடிக்காதடா பிளீஸ்.

**கவின் — மானிப்பாய்**

**அட்டைகளாக இருந்து இரத்தம் உறிஞ்சும் உறவுகள் பற்றி?**

இந்த உலகத்தில் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்பவருக்கு மதிப்பில்லை. வெறும் பசப்பு வார்த்தைகளுக்கு மவுசு இருக்கிறது. எமது தமிழ்த்தலைமை போலத்தான் இந்த மனிதர்களும். தமிழ்த் தலைமை எங்களை விற்று தம் பொக்கட்டை நிறைக்கிறதே. அதே போலத்தான் இவர்கள் உறிஞ்சும் வரை உறிஞ்சி விட்டு முடிந்ததும் கழன்று சென்று விடுவார்கள் கவனம்.

**தனு — மானிப்பாய்**

**மாணவி றெஜினாவின் கொலைபற்றி?**

மனித ரூபத்தில் இருக்கும் மிருகங்களுடன் தான் நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மாணவி றெஜினாவின் கொடூர கொலை மீண்டும் நினைவுபடுத்தியிருக்கிறது. ஒரு பெண் குழந்தைக்கே ஆண் இனத்தால் பாதுகாப்பு இல்லை என்கின்ற நிலையிருந்தால் மொத்த பெண் இனமும் ஒட்டுமொத்த ஆண் இனத்தையும் காறி உமிழுமல்லவா. பெண்களைவிட ஆண்களுக்கு பலத்தை ஆண்டவன் கொடுத்தது அவளுக்கு பாதுகாப்பாய் இருக்கவே தவிர பலாத்காரம் செய்வதற்கு அல்ல என்பதை இவ்விடத்தில் மீண்டும் பதிவிடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக் கலசம்

### மரம்
மரவியாபாரி பார்க்கிறான்
முழு மரத்தையும்
குருவிக்கூடு நீங்கலாக.

### வரம்
இறைவனிடம் இரண்டு சோடி
சிறகுகள் கேட்டேன்
இப் பூமியை விட்டு வெகுதூரம்
பறந்து செல்ல.

### சிகரெட்
என்னை முத்தமிட்டால்
நீ நிதமும் மடிவாய்.

### கண்ணாடி
நான் உன்னைப்
பார்க்கிறேன்-நீயோ
என்னைப் பார்க்கிறாய்.

### காத்திருப்பு
காத்திருக்கிறேன்- நீ
மறுபடி வருவாய் என
உனது டயரிகளுடனும்
நீ தந்த கனவு மீதிகளுடனும்
எதிர்பார்த்திருக்கிறேன்.

### சுவாசம்
தினமும் சுவாசிக்கிறேன்- நீ
சுவாசித்த காற்றின்
அணுக்களை- நான்
யாசித்திருப்பதால் நொடியும்
தவறாமல் சுவாசிக்கிறேன்

**உ.மாதவி, கோண்டாவில்**

### போதை போதை
குப்பியால் ஊர் சுறாக போனது
சக்கர நாற்காலியும்
கவிழ்ந்து போனதடா
சரக்கு விலை ஏறினாலும்
சுருண்டு யார் படுப்பார்

அடியே சக்காலத்தி
அடியே சக்காலத்தி
அடங்க மாட்டியா
உன் விலை ஏறுதடி
அடுப்பில் பூனை படுக்குதடி

உனக்கு விலை அதிகமடி
உன் அழகும் குறையவில்லை
உன் அளவும் குறைந்து இல்லை
உன் கப்பு குறையவில்லை
நீ போதை ஏத்தும் கள்ளி

அண்ணன் என்ன தம்பி என்ன
பல கணவர் உன் போதைக்கு
சட்டைப்பை காலி
கலியாண வீட்டிலும் மரண வீட்டிலும்
உன் ஆட்சி நடக்குதடி

காதல் ஆண்களின் பேரழகி
மானிட வர்க்கத்தை ஆட வைப்பாள்
மாண்டு விட்டாள் ஆட்டி வைப்பாள்
மதுக் கோப்பையில் மாட்டுண்ட
கானமயில் ஆடக் கண்டேன்

**எஸ்.ஏ.கோகுலன்**
**கோப்பாய்**

### விடியாத தேசம்
விடியலைத் தேடி புறப்பட்ட இனம்
விரக்தியுற்று வீழ்ந்து கிடக்கு
சாகத் துணிந்தவன் சரித்திரமானான்
சாகப் பயந்தவன் தரித்திரமானான்

வீணாய் போன அரசியல்வாதிகள்
பிரிவினைக்கு வித்திட்டனர்
முப்பது வருடம் கடந்த பின்னர்
கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்

முன்னுக்குப்பின் முரணான அரசியல்
மூன்று தசாப்தங்கள் தமிழரை அழித்தது
அழிவுக்குப் பின்னர் பிரிவினை வேண்டாம்
இறந்த மக்களின் ஆவி கொதிக்கிறது

எனியும் வேண்டாம் போலி அரசியல்
தமிழருக்கு வேண்டும் சுயநிர்ணய உரிமை
ஏங்கித் தவிக்கும் தமிழரின் உணர்வினை
ஏளனமாய் பார்க்கும் பேரினவாதம்

வடக்கில் பேச்சு தீர்வு உறுதி
கிழக்கில் பேச்சு உரிமையை பெறுவோம்
தெற்கில் பேச்சு அமைதியாய் இருப்போம்
உலகுடன் பேச்சுபொறுமை காப்போம்

**அராலியூர்**
**ப.தர்மகுமாரன்**

### போதிப்பு
போதிப்பு ஒரு சாதிப்பு
அது இல்லையேல் பாதிப்பு
நத்துக்கத்த உயிர் போக
நாறின உடல் கொண்டவனே
முத்தான கல்வியை வெளியே
விற்றேது என்ன பயன்
முத்தாத வெண்டிக்காய் முத்தவைத்தீர்
கல்வியை பிந்தவைத்தீர். அது நீதியோ?
பித்தனே நீயாவே சாகின்றாய்
பொத்தாது நீ போதித்தால்
கத்தாது காத்திருப்பர் தானே
சுத்தாது மாணவருக்கு கல்வியுடன்
சத்தை வழங்கினால் பத்தாதென்பாரோ?
வித்தை முத்தாக்கி மத்தால்
வெண்ணெய் உருவாக்கி முத்து
முத்தான இரத்தினங்களை கோயிலில்
வைத்த உச்சமே கோபுரம்
இனித்த கல்வியை இனியேனும் தா?
இனியுணர்ந்தாலும் மன்னிப்புண்டு வா?

**தமிழ்மணி மானிப்பாய்**

## மௌனத்தின் தேடல் -403




### குடிமகன் வாழ்வு
உன் குடும்பம் உனக்காக
ஏங்குகிறது கஞ்சிக்காக
உன் மனம் எங்கோ?
திண்டாடித் திணறுகிறது
சரக்கு விலை உயர்வு என
குடியே வேண்டாம்
நற்குடிமகனாய் வாழ்!

**நிரூஷினி~ ஆ**
**யா/சுண்டுக்குளி ம.க.**

### போதையிலிருந்து வெளியேறு!
மதுபோதைக்கு அடிமையாகி
ஒளியிழந்து உடல்
மெலிந்து பொருள் அழிந்து
போயிடினும் சரக்கு
விலை உயர்ந்திடினும் உன்கையில்
மதுப் போத்தலும் காற்சட்டை
பையில் பீடிக் கட்டுமா
சரக்கு உன்னை முழுமையாக
தன்வசப்படுத்தி விட்டதல்லவா?
நீ பாலகன் அல்ல... ஆபத்து நிலையிலிருந்து
மீள முயற்சி செய்.

**அபி குலமாலிகா**
**சங்கானை**

### ஆராரோ ஆரிவரோ
நீ யாரோ.. ஆராரோ.. ஏன் அழுவான்
வடக்குத்தான் குடியில் முதலிடத்தில்
சரக்கடித்துக் கண்ணுறங்கு
தொல்லையில்லாது கொள்ளையிட்டு
தொட்டிலாட்ட நான் இருக்கிறேன்
உன் கட்சிக்காக வாதிடுபவர்கள்
இருக்கும்வரை நாட்டிற்கு வருவாய்
நீ தருவாய் (கண்) மணியே!
நீ உறங்கு ஆராரோ ஆரிவரோ!

**மாவையூர் கவி**
**பண்டத்தரிப்பு**

### போரும் போதையும்
சுருக்கென்று
சரக்கு விலை உயர்வு
கை கொடுத்த தெய்வம்
காலை வாரியமைக்கு
விதிமுறையில்லா
மறைமுக வரியே காரணம்
சொல்லாமல் வந்த
பொல்லாத போரும்
தொல்லை கொடுத்து
இல்லாமையை உருவாக்கும்
மதுப் பழக்க தோசமும்
ஒரு வகையில் ஒன்று தான்
மெதுவாக மனதை மயக்கும்
மதுவில் பிரியம் வைத்தால்
எதுவும் நிலைப்பதில்லை.

**க.நாகராசா**
**நுணாவில்**

## மௌனத்தின் தேடல் -404



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 04.07.2018 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிடம்

பொழுது சரிந்து கொண்டிருந்த போதிலும் வெயில் அனலாக எரித்துக்கொண்டிருக்கிறது. குறைக் கண்ணை மூடியவாறு தூங்குவது போல்பாசாங்கு செய்து கொண்டிருந்த பரமசிவம் அருகில் ஏதோ அரவம் கேட்கவும் உஷாரடைந்தவராய் கண்களை அகலத் திறந்து சுற்று முற்றும் ஒரு தரம் நோட்டம் விட்டார். எதுவித அசைகையும் தென்படவில்லை. தோளிலிருந்த துவாலைத் துண்டினால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டவர், மீண்டும் கண்களை மூடி இளமைக்காலத்து அழியா நினைவுகளில் மூழ்ககத் தொடங்கினார்.

மங்களம்.... அவரது சகதர்மினி... அவரது வாழ்க்கையுடன் சரி பாதியாக ஒன்றிப் போனவள். அவரது மனக்கண்முன் வந்து நின்றாள். அவளைக் கைபிடித்த அந்தநாள் நினைவுகள் இப்பொழுதும் அவர் உள்ளத்தில் இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அவளுடன் நடத்திய குடும்ப வாழ்க்கை... அதன் பயனாக அவர்களது வாழ்வில் உதித்த வம்ச விளக்குகளாக இரண்டு ஆண்பிள்ளைகள், ஒருபெண் என விருத்தி பெற்றபோது... மழலைகளின் குறும்புகளால் அவரும் மனைவியும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கிக் திளைத்த நாட்கள்... வாழ்க்கையை அவர்கள் இனிமை சொட்டச் சொட்ட அனுபவித்த அந்தக் காலப்பகுதி அவரது இதயத்தில் தோன்றி அவரை மெய்மறக்கச் செய்தது.

பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கியதில் பெரும் பங்கு அவளுடையதுதான். உழைப்பின் ஊதியத்தை அவளிடம் கையளித்துவிட்டு நிம்மதியாக இருந்து கொள்வார். பிள்ளைகளின் குறை நிறைகளை அங்கலாய்ப்புடன் அவரிடம் முறையிடும் மனைவியைச் செல்லமாகக் கடிந்து கொள்வார்.

"என்ன செய்ய வேணு மென்பது அவைக்குத் தெரியும். நீர் சும்மா தொணதொணத்து அதுகளைக் குழப்பி விடாதையும்"

பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கும் சுபாவம் அவருடையது. ஆனால் மங்களமோ... பிள்ளைகளை அரவணைத்து, கண்டிக்க வேண்டியவிடத்து கண்டித்துப் பக்குவமாக வளர்த்து ஆளாக்கிவிட்டாள். மூத்தவன் ரவியை ஒரு பொறியியலாளராகவும் இளையவன் ரகுவை ஒரு ஆசிரியராகவும் மகள் ராதாவை பிரதேச செயலகத்திலும் பணிபுரியுமளவிற்கு உந்துசக்தியாய்... உறுதுணையாய் இருந்தவள் மங்களம்தான். அதேசமயம் பத்திரிகைகளைப் புரட்டுவதும் நண்பர்களுடன் அரட்டையடிப்பதும் பரமசிவத்துக்கு பொழுது போக்காக அமைந்துவிட்டது. ஆரம்ப காலத்தில் மங்களம் அவரது போக்கை கண்டித்த போதும் நாளடைவில் நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதை உணர்ந்து கொண்டாள். பிள்ளைகளும் எதற்கெடுத்தாலும் அம்மாவின் ஆலோசனையை வேண்டி நின்றார்கள். திருமண விடயத்திலும் அப்படித்தான் அவர் ஒதுங்கிக் கொண்டார். " ஏதோ நீர் பார்த்து முடிவெடுத்தால் சரி"

மங்களத்துக்கு கணவன் தன்மீது வைத்திருக்கும் அதீத நம்பிக்கையை எண்ணி ஒரு பக்கம் பெருமிதமாக இருந்த போதிலும் கணவன் குடும்பத் தலைவனாய் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கமும் இருக்கத்தான் செய்தது. பணத்துக்காக அலையாமல் பண்புமிக்கவர்களாக மருமக்களைத் தேர்ந்தெடுத்தாள். பரமசிவம் முழு மனதுடன் அவளது தெரிவினை ஏற்றுக்கொண்டார்.

பிள்ளைகள் மணம் முடித்துப் போன பின்னரும் அவரும் மங்களமும் மகளுடனேயே தங்கிவிட்டனர். மங்களம் உயிரோடு இருக்கும் வரை தானே முன் வந்து சமையல் பொறுப்புக்களை கவனித்துக்கொண்டாள். பிள்ளைகள் மட்டுமல்ல பேரப் பிள்ளைகளும் அவள்மீது அதீத அன்பு செலுத்தினர்.

ஓய்வூதியம் பெற்றதும் பரமசிவம் மனதளவில் சோர்ந்து போனவராய் ஓய்வெடுத்துக் கொண்டார். அந்தச் சமயத்திலும் மங்களம் அவரை ஒரு குழந்தையைப் போல் தாங்கி பராமரித்து வந்தாள். தனக்கும் வயதாகிவிட்டது என அவள் ஒரு போதும் நினைத்ததில்லை. வழமைபோல் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தவள் திடீரென ஒருநாள் நெஞ்சைப் பொத்திப் பிடித்தவாறு எவருக்குமே இடைஞ்சல் கொடுக்காமல் கண்களை மூடிக்கொண்டுவிட்டாள்.

மொத்தக் குடும்பமும் அவளது பிரிவுத் துயரைச் சுமக்க முடியாமல் தத்தளித்து நின்றபோது பரமசிவம் மட்டும் அதற்கு விதி விலக்கா... என்ன... குடும்பத்தின் மொத்த பாரத்தையும் மனைவிமீது சுமத்திவிட்டு குளிர் காய்ந்தவர், மலையே தன்மீது சரிந்துவிட்டாள்போல துடி துடித்துப்போனார். இந்த உலக வாழ்க்கையை தொலைத்தால் தான் அவளது பிரிவுத் துயரிலிருந்து விமோசனம் கிடைக்கும் என்றுகூட அவர் நினைத்ததுண்டு. எனினும் எமக்குக் கிடைத்த இந்த வாழ்க்கையை இன்பமோ, துன்பமோ அதை முற்றாக வாழ்ந்துதான் தீரவேண்டும் என அவரது உள்மனம் அறிவுறுத்தியது. சோகத்தின் விளிம்பில் அவர் விரக்தியுடன் நடைபிணமாக உலவத் தொடங்கினார்.

மங்களத்தின் பிரிவுக்குப் பின் இன்றுதான் மகள் ராதாவும் கணவனும் வேலைக்குக் கிளம்பிப் போயிருக்கிறார்கள். தனிமையும் வீட்டில் ஏற்பட்டிருந்த வெறுமையும் அனலென அவரை வாட்டி வதைக்க விரக்தியின் விளிம்பில் நின்று அவர் தத்தளித்துக்கொண்டிருந்தார். இதயமோ மங்களத்தின் நாமத்தை உச்சரித்து துடித்துக் கொண்டிருந்தது. அந்தத் துடிப்பின் தாலாட்டில் அவர் மெய்மறந்து கிடந்தார்.

திடீரென வீட்டில் ஆரவாரம் கேட்க அவரது புலன்களும் திடுக்கிட்டு விழித்துக்கொண்டன. அருகில் வந்த ராதா, அப்பாவிடம் வினவினாள்.

" அப்பா! சாப்பிட்டீங்களா?"

பதிலெதுவும் கூறாமல் மகளை ஏறிட்டுப் பார்த்தார், பரமசிவம். அவளுக்குப் புரிந்துவிட்டது.

"மேசையில் போட்டு மூடி வைத்த சாப்பாட்டை ஏனப்பா இவ்வளவு நேரமாகியும் எடுத்துச் சாப்பிடாமல் விட்டனீங்கள்?"

செல்லமாக அப்பாவைக் கடிந்து கொண்ட ராதா மெதுவாக அவரை எழுப்பிவந்து சாப்பிட வைத்தாள். சாப்பிடும்போது அவரது கண்கள் பனித்ததை அவள் அவதானிக்கத் தவறவில்லை.

மாலை தேநீர் கலக்கும்போது பார்த்தால் அப்பாவின் குவளையைக் காணவில்லை. தேடிப் பார்த்தபோது அது அவரது சாய்மனையின் கால்மாட்டில் எறும்புகள் மொய்த்தபடி கிடந்தது. எதுவும் பேசாமல் ராதா அதை எடுத்துக்கொண்டு போனபோது அவரது மனம் குறுகுறுத்தது. மங்களம் நான் குடித்தவுடன் எடுத்துப்போய் கழுவி வைத்து விடுவாள். இனியும் நான் அப்படி எதிர்பார்க்க முடியுமா?

ராதாவின் மனதிலும் ஒரு ஏக்கம் இருக்கத்தான் செய்தது. "அம்மாவுக்குத்தான் நாங்கள் ஒரு பணிவிடையும் செய்யவில்லை. அப்பாவையாவது கவனமாகப் பார்க்க வேண்டும்" ராதா மட்டுமல்ல அவளது அண்ணன்மார்களுக்கும் அந்த ஏக்கம் இருக்கத்தான் செய்தது.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. ரகு காலையிலேயே வீட்டிற்கு வந்திருந்தான். அப்பாவுக்குப் பிடித்தமான நெய்த்தோசை கொண்டுவந்தான். அவருக்கென ஒரு தட்டில் போட்டு எடுத்து வந்து கொடுத்தான். மகனது பாசத்தில் நெகிழ்ந்து போனவர் அதை வாங்கிச் சாப்பிட்டார். தோசை சாப்பிட்டவுடன் அவருக்கு பிளேன் ரீ குடிக்க வேண்டும். மங்களம் குறிப்பால் அதையறிந்து அவருக்கு சுடச்சுட தேநீர் கொண்டு வந்து கொடுப்பாள். இப்போது பரமசிவம் மகள் ராதாவைத் தேடினார். அவளோ... கிணற்றடியில் துணிகளைத் துவைத்துக்கொண்டிருந்தாள். ஒரு இங்கிதமுமில்லாமல் எப்படி அவளிடம் தேநீர் போட்டுத்தா என்று கேட்பது. மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டவர் மகன் ரகு தந்த தண்ணீரை வாங்கி மடக் மடக் எனக் குடித்தார்.

மங்களம் உயிருடன் இருக்கும்வரையும் அவரது ஒவ்வொரு தேவைகளையும் பார்த்துப் பார்த்துச் செய்து வந்தாள். இப்பொழுது அவரது வாழ்க்கை கட்ட விழ்த்துவிட்ட ஓடம் போல கரை காணாத தண்ணீரில் கிடந்து தத்தளிக்கிறது. கரைகாணும் வரை அவர் கிடந்து தத்தளித்துத் தான் ஆகவேண்டும். காலப் போக்கில் அவர் சூழலுக்கேற்ப தனது பழக்கவழக்கங்களை இசைவாக்கம் ஏற்கும்படியாக மாற்றிக்கொள்ளவேண்டும். சுரணை ஏதுமில்லாமல் அவர் தன்பாட்டுக்கு நடந்துகொண்டால் அவரது தேவைகளைக் கவனிக்க மங்களம் உயிர்பெற்று வந்தால்தான் முடியும்.

பரமசிவம் தனது பழக்கவழக்கங்களை இயன்றளவில் மாற்றிக்கொண்டு விட்டார். அன்று அவர் தனது ஓய்வூதியத்தை எடுப்பதற்காக வெளியே சென்ற போது எதிர்பாராத விதமாக மழையில் மாட்டிக்கொண்டார். அவர் மழையில் நனைந்துவிட்டால் மங்களம் ஓடோடி வந்து அவரது தலையைத் துவட்டி விட்டதுடன் நின்றுவிடாமல் சுடச்சுட இஞ்சி போட்ட கோப்பி குடிக்கக் கொடுப்பாள். மழையில் நனைந்ததால் அவருக்கு ஜலதோஷம் ஏற்பட்டு காய்ச்சலும் வந்துவிட்டது. ராதா, அவரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துப்போய் மருந்துவாங்கிக் கொடுத்தாள். மறுநாள் வேலைக்கு லீவு போட்டு விட்டு வீட்டிலேயே இருந்து அவரைக் கவனித்துக்கொண்டாள்.

மாலை வேலையால் வரும்போது ராதாவின் கணவன் மாமனாருக்கு ஹோர்லிக்ஸ் வாங்கி வந்தான். ராதா அதைக் கரைத்து அப்பாவுக்கு கொடுத்தாள். அவரால் அதை வாயில் வைக்க முடியவில்லை. வயிற்றைப் புரட்டியது. வாயிலோ வேப்பிலையை அரைத்து தடவியது போன்றதோர் கசப்பு உணர்வு. குடிக்க மறுத்து விட்டார்.

"ராதா இடியப்பமும் புளிச் சொதியும் வைச்சுக கொடுத்தால் ஒருவேளை வாய்க்கு இதமாயிருக்கும்" கணவனின் ஆலோசனைக்கேற்ப ராதாவும் முயற்சியில் இறங்கினாள். பரமசிவத்துக்கும் புளிச்சொதியென்றால் சாப்பிட்டுப் பார்க்கலாம் என்றொரு விருப்பம் தோன்றியது. ராதாவும் இடியப்பத்தின் மேல் சுடச்சுட பால் சொதியை ஊற்றிக்கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தாள்.

மருமகன் அவரைக் கைத் தாங்கலாக தூக்கிப்பிடித்து சாய்ந்தவாறு உட்காரவைக்க, ராதா ஒருவாய் இடியப்பத்தை ஊட்டினாள். எதிர்பாராதவிதமாக பரமசிவம் ஓங்களிக்கத் தொடங்கினார். அத்துடன்அவருக்கு உணவு ஊட்டுவது நிறுத்தப்பட்டு விட்டது. ஆற்றாமையுடன் ராதா அப்பாவைக் கேள்வியால் உலுப்பினாள்.

"அப்ப... என்னதான் சாப்பிட விருப்பமாயிருக்குது சொல்லுங்கோவன் அப்பா"

"கொம்மா வைச்ச புளிக்கஞ்சி"

சற்றும் எதிர்பாராத இந்த வார்த்தை அவரது அழ்மனத்திலிருந்து அவரையும்மீறி வெளியே வந்துவிட்டது. மங்களத்தின் வெற்றிடம் அவரது அந்தராத்மாவை ஊடறுத்து நின்றது. அதை வேறு எவராலும் நிரப்ப முடியாது என்ற உண்மை அவரது மனதின் பிரதிபலிப்பு. இதை அறிந்திராத ராதா புளிக்கஞ்சி வைப்பதற்கு ஆயத்தமானாள்.

மலரன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடை சிறைச்சுவர்களுக்குள் எதிரொலிக்கும் அவலக் குரல்கள்

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஜூலை 23 ஆம் திகதியன்று இரவு 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் இராணுவ ஜீப் வண்டியொன்றை இலக்கு வைத்து குண்டொன்று பலத்த ஓசையுடன் வெடிக்கச் செய்யப்பட்டது. காயமடைந்தோருக்கு உதவும் பொருட்டு ட்ரக் வண்டியொன்றில் இராணுவ வீரர்கள் ஸ்தலத்தை வந்தடைந்தனர். கைக்குண்டுகளை வீசியபடி வந்த தமிழீழ விடுதலைப் புலிகளால் அவர்கள் வழிமறித்து தாக்கப்பட்டனர். 13 இராணுவ வீரர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். தனித்து இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்களில் ஆகக்கூடிய எண்ணிக்கையாக இது பதிவாகியிருந்தது.

கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்கள் இறுதிச் சடங்குகளுக்கென அடுத்த நாள் (ஜூலை 24) பொரளை கனத்தை மயானத்திற்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்ட போது கொழும்பு மாநகரில் தமிழர்களைப் பூண்டோடு அழிக்கும் நோக்கில் வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டதுடன் அவை ஏனைய பிரதேசங்களுக்கும் காட்டுத்தீ போன்று பரவத் தொடங்கின.

அரச பாதுகாப்புப் படையினரின் ஆசீர்வாதங்களுடன் கூலிப் படையினர் கொள்ளையடித்தனர். தீவைத்தல் மற்றும் கொன்றொழித்தல் நடவடிக்கைகளில் ஐந்து நாட்களுக்கு ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அப்பாவித் தமிழ் மக்கள் பலரைப் படுகொலை செய்தும், சுமார் 4,800 வீடுகளையும் 1,600க்கும் மேற்பட்ட வியாபார ஸ்தலங்களையும் அழித்தொழித்தும் அடாவடித் தனங்களில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில், இனக்கலவரங்களில் ஈடுபடுமாறு தனது தொழிற்சங்க ஆட்களை ஏவி விட்டவரும் சிங்கள மேலாண்மைவாதியுமான முன்னாள் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் சிறில் மத்தியூ மேற்படி பாவச் செயல்களின் சூத்திரதாரியாக விளங்கியதுடன், அரசாங்கமும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவும் நான்கு நாட்களாக வாய் திறக்காத நிலையில் வேடிக்கை பார்த்ததாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

இன இணக்கப்பாடானது சிறைச்சாலைகளில் 1983 ஜூன் வரை காணப்பட்டது. வேறுபட்ட இனங்களைச் சேர்ந்த அனைத்து சிறைக் கைதிகளும் இனப்பாகுபாடு ஏதுமின்றி ஒன்றாக வசித்து வந்தனர். சிறைக் கைதிகள் ஒருவருக்கொருவர் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள உதவியதுடன் ஒருவரையொருவர் ஒரு போதும் முட்டிமோதியதில்லை.

பனாகொடை இராணுவ முகாமில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த குழுவொன்று சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சர்வதேச ஜூரிமார் நீதிமன்றத்தினால் விடுக் கப்பட்டிருந்த வேண்டுகோளைத் தொடர்ந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு 1983 ஜூனில் இடமாற்றம் செய்யப்பட்டது.

கடந்த 1983 ஜூலை 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 13 இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்ட செய்தியை வெலிக்கடைச் சிறைச்சாலைக் கைதிகள் ஜ/லை 24 இல் பத்திரிகைகள மூலம் வாசித்தறிந்ததும் கொதித்தெழுந்தனர். பொரளையில் உள்ள கனத்தை மயானத்திற்கு 13 இராணுவ வீரர்களினதும் உடல்கள் கொண்டுவரப்படும் செய்தியும் அவர்களின் செவிகளுக்கு எட்டின. அந்தக் கொலை வெறி ஆட்டம் 24 ஆம் திகதி இடம்பெற்ற போதிலும், ஊரடங்குச் சட்டம் ஜூலை 25 திங்களன்று பிற்பகல் 3.00 மணியளவிலேயே பிறப்பிக்கப்பட்டது.

ஆமாம்! உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வெலிக்கடைச் சிறை வளாகத்திற்குள் 53 தமிழ் சிறைக்கைதிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள ABCD என்ற நான்கு பிரிவுகளில், B3, C3 மற்றும் D3 பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளே இவ்வாறு பரிதாபகரமாக கொல்லப்பட்டனர்.

அனைத்து சிங்கள குற்றவாளிகளும் கீழ்த்தளத்தில் A3 பிரிவில் இருந்தனர். அங்கு எல்லாமாக 16 சிறைப்பாதுகாவலர்கள் கடமையில் இருந்துள்ளனர். ஒவ்வொரு பிரிவுக்குமான நுழைவாயில்களும் இரும்புக் கதவொன்றின் மூலம் அடைக்கப்பட்டிருந்தன. பூட்டப்பட்ட அறைகளைக் கண்காணிக்கவென பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வரவேற்பறையில் இரண்டு பாதுகாவலர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இரண்டு வெவ்வேறு தினங்களில் இந்தப் படுகொலை அரங்கேறியது. சிங்கள சிறைக்கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட முதல் நாள் (ஜூலை 25) தாக்குதலில் 35 தமிழ்க் கைதிகளும், இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் மேற்கொள்ள ப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது மேலும் 18 தமிழ்க் கைதி களும் மூன்று சிறைப் பாதுகாவலர்களும் கொல்லப்பட்டனர். இந்தக் கொடூர சம்பவங்கள் தொடர்பாக இதுவரை எவருமே குற்றவாளியாகக் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பதில் ஆணையாளரான சீ. டி. ஜான்ஸ்ம் அவரது உத்தியோகத்தர்களும் கொலைவெறிக் கும்பலின் வெறியாட்டத்தை அடக்க முற்பட்ட போதிலும் சுமார் 300 சிங்கள சிறைக் கைதிகள் சிறைக்கதவுகளை உடைத்துக் கொண்டு வெளியேறி வரவேற்பறைக்குள் அவசர அவசரமாக நுழைந்தனர். இருபதுக்கும் மேற்பட்ட தாக்குதல்தாரிகள் B3 மற்றும் D3 பிரிவுகளில் இருந்த தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்தனர். எவ்வாறிருப்பினும், A3 பிரிவில் இருந்த கைதிகள் உள்ளே தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருந்தனர். வெலிக்கடைச் சிறைச்சாலையில் முதல் நாள் நிகழ்ந்த கலவரங்கள் பிற்பகல் சுமார் மூன்று மணியளவில் ஆரம்பமாகின. அங்கு நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 பேரில், 'குட்டிமணி' என ஜெகன், தங்கத்துரை மற்றும் ஒரு சிலரும் அடங்கியிருந்தனர். அவர்கள் B3 இல், ஒரே அறையில் இருந்தனர். ஏனைய 28 தமிழ்க் கைதிகளும் C3 இல் உள்ள அறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் விமானமொன்றைக் கடத்த முற்பட்ட குற்றத்திற்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த சேபால ஏக்கநாயக்க உள்ளிட்ட ஏ3 இல் இருந்த சிங்களக் கைதிகளே இந்தக் கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒருசில மீற்றர்கள் தூரத்தில் தான், தமிழ் தொழில் வாண்மையாளர்கள், மருத்துவர்கள், மதகுருமார், கல்வியியலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்கள் ஒருசிலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சி3 பிரிவைப் பாதுகாக்கும் கடமைப்பற்றுள்ள சிங்கள சிறைக்காவலர் ஒருவர் அங்கிருந்த தமிழ்க் கைதிகளிடம் "அவர்கள் உங்களைத் தேடி வந்தால் அது எனது இறந்த உடலைத் தாண்டியே நடக்கும்" என ஆறுதல் கூறியிருந்தார்.

அவர் அறைக் கதவு திறவுகோல்களை மறைத்தும் வைத்திருந்தார். வெலிக்கடையில் நிலை கொண்டிருந்த 4 ஆவது பீரங்கிப் படையைச் சேர்ந்த லெப்டினன்ட் ஹத்துருசிங்க ஜான்ஸிடமிருந்து உதவி கேட்டு வந்திருந்த செய்தியைத் தொடர்ந்து ஒருசில ஆயுதம் தரித்த இராணுவத்தினருடன் ஸ்தலத்திற்கு விரைந்தார். அவர் களைக் கண்டதும் கொலை வெறிச் சிறைக்கைதிகள் தமது



ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு மேல் மாடிக்கு ஓடினர்.

பதில் ஆணையாளர் ஜான்ஸ்க்கு அப்பால், சிறைச்சாலை அதிகாரிகள் ஏற்பட்ட அனர்த்தத்தை கட்டுப்படுத்துவதில் சிறிதளவில் ஈடுபட்டனர்.

C3 இல் கடமையில் இருந்த சிங்கள் சிறைச்சாலைப் பாதுகாவலரால் ஒருவர் ஒருசில தமிழ்க் கைதிகளைக் காப்பாற்ற முடிந்தது. சிறைச்சாலை ஆணையாளர் விசாரணையின்போது தெரிவித்துள்ளதாவது, 'நான் பிரதி பொலிஸ்மா அதிபர் சுந்தரலிங்கத்துடன் தொடர்பு கொண்டு உதவி கேட்டேன். அவரால் உதவ முடியவில்லை. அதனையடுத்து, ஜெனரல் ஆட்டிகல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்ட போது, சிறைச்சாலைகளுக்குள் துருப்பினர் பயன்படுத்தப்படுவதில்லை என அவர் கூறினார்".

27 இல் 'கொல்லப்பட்ட 18 பேரில் சமூக சேவை அமைப்பைச் சேர்ந்த டொக்டர் இராஜசுந்தரமும் ஒருவராவார். மேற்படி கொலை வெறித்தாக்குதலில் இருந்து தப்பிப் பிழைத்தோரில் புனித ஜோன் தேவாலயத்தைச் சேர்ந்த வணபிதாவும் ஒருவராவார். அவர் தனது பயங்கர அனுபவத்தை வலைத்தளமொன்றில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் அந்தப் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"வானம் முழுவதும் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளித்தது. சப்பல் பிரிவில் இருந்த அரசியல் கைதிகள் மீது தாக்குதலொன்று மேற்கொள்ளப்படுகின்றதென்பதை நாம் விரைவாக உணர்ந்து கொண்டோம். சிங்கள கைதிகள் அனைவரும் திறந்து விடப்பட்டனர். அவர்கள் கையில் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு தமிழ்க் கைதிகளை கொலை செய்து கொண்டிருந்தனர். அந்த நாளன்று முப்பத்தைந்து பேர் கொல்லப்பட்டனர். ஜூலை 26 ஆம் திகதி நாங்கள் இரண்டாம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

சப்பல் படுகொலையில் தப்பிப் பிழைத்தோர் முதலாம் மாடியில் உள்ள அறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஜூலை 27 ஆம் திகதி நாம் தங்கியிருந்த கட்டடத்தில்தான் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கு வந்த காடையர்கள் பூட்டுக்களை உடைத்துக் கொண்டு உள்ளே வந்த நிலையில் எம்மை எமது அறைகளில் இருந்து கூட்டிச் செல்லத் தொடங்கினர். அதிர்ஷ்டவசமாக, அவர்களால் மூன்று அறைகளைத் திறக்க முடியவில்லை என்பதால் ஒன்பது பேரும் தப்பிப் பிழைத்தனர். அவர்கள் உடனடியாகவே பூட்டுக்களை உடைத்தெறிந்த நிலையில் கதவைத் திறந்தனர். டொக்டர் இராஜசுந்தரம் அவர்களிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்ன போதிலும் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். அப்போது அங்கு விரைந்து வந்த இராணுவத்தினர் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

எம்மில் எட்டுப் பேரும் முதலாம் மாடியில் தப்பிப் பிழைத்திருந்த ஏனைய ஒன்பது பேரும் ட்ரக் வண்டியொன்றில் ஏற்றப்பட்டோம். அடுத்த நாள் காலை, வெளியே அழைத்துச் செல்லப்பட்ட நாம் கைவிலங்கிடப்பட்ட நிலையில் சிறியரக விமானமொன்றில் ஏற்றப்பட்டோம். அதன் பின்னரே, நாம் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்ததை உணர்ந்தோம். இரண்டு மாதங்களின் பின்னர் போக அனுமதிக்கப்பட்டோம்" என தெரிவித்துள்ளார்.

இந்த மனிதப்படுகொலைகள் குறித்து 1983 ஓகஸ்ட் 4 ஆம் திகதி இந்தப்பேரவலத்தை ஏன்தடுக்க முடியாமல் போய் விட்டதென எதிர்க் கட்சியினரால் கேட்கப்பட்ட கேள்விக்கு அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாச "சிங்களக் கைதி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்" எனப் பதிலளித்தார். (ஹன்சாட் ஓகஸ்ட் 4. 1983 1285)

இந்தப் படுகொலை அரசியல் அதிகாரத்தில் உள்ளோரால் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டதொன்றென அரசியல் ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இந்த நாட்டில் 1956/58 என இலக்கலவரங்கள் நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளன. அவை குறித்தும் உண்மையான நியாயமான விசாரணை நடத்த அதிகாரிகள் தவறியே இருந்தனர். வெலிக் கடை சிறைச்சாலையில் டீ3 மற்றும் னு3 பிரிவுகளில் உள்ள அறையில் தற்போதுள்ள கைதிகளுக்கு அந்த ஆவிகளின் அவலக் குரல்கள் கேட்ட வண்ணமே உள்ளன.

**கே.கே.எஸ். பெரேரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி பதினேழு இராணுவத்தினரின் தொடர்ச்சியான பாலியல் வல்லுறவினால் மாணவி கிருசாந்தி குமாரசுவாமி கைதடியில் கொடூரமாகக் கொல்லப்பட்டாள். 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி எட்டு வயதுச் சிறுமி சுழிபுரப் பகுதியில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டாள். 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி புங்குடுதீவு மாணவி லோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்விற்கு உட்பட்டுக் கொல்லப்பட்டாள். இப்படியான மனிதத் தன்மையற்ற சம்பவங்களால் இதயம் கனத்து அத்துயரிலிருந்து மீளுவதற்கு முன்னர் மீண்டும் ஒரு துயரச் செய்தியால் சர்வதேசமே ஆர்ப்பரித்து எழுந்தது.

# தொடர்கின்ற துயரங்கள்...

## பூமிப்பந்தின் நெற்றியில் சுவரொட்டியானாள் றெஜினா

காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயின்று வந்த சிறுமி சிவனேஸ்வரன் றெஜினா (25.06.2018) திங்கட்கிழமை 12 மணியளவில் பாடசாலையிலிருந்து வீடு திரும்பினாள். றெஜினாவின் தாயார் சுமித்திரா அவர்கள் காலையில் பிள்ளையைப் பாடசாலையில் இறக்கிவிட்டுவிட்டு சமுர்த்தி வங்கிக்கும் கிராம அலுவலகத்திற்கும் சென்றுவிட்டு மதியம் 1.30 மணிக்கு வீடு திரும்பியபோது றெஜினாவை வீட்டில் காணவில்லை. தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றிருக்கலாம் என்று நினைத்த தாயார் அங்கு சென்று பார்த்தார். அங்கும் றெஜினா இல்லை. உறவினர்களும் அயலவர்களும் றெஜினாவைத் தேடத் தொடங்கினர். 1.30 இல் இருந்து 4 மணிவரை தேடும் படலம் நீடித்தது. நீண்ட நேரத்தேடுதலின் பின்னர் சிறுமியின் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஆள் நடமாட்டம் இல்லாத வீட்டு வளவில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது. இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைவாக வந்தனர். சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்த பொலிஸார் துரித விசாரணைகளை நடத்தினர். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்டன. சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு பேரைக் கைது செய்தனர். அன்று இரவு ஏழு மணியளவில் மல்லாகம் நீதவான் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். விசாரணைகள் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைக்க உத்தரவிட்டார். மறுநாள் உடற்கூற்றுப் பரிசோதனையின் முடிபு மனித குலத்தையே அதிர வைத்தது.

## றெஜினாவின் பிறப்பும் சகோதரர்களும்

சின்னராசா சிவனேஸ்வரன், சிவனேஸ்வரன் சுமித்திரா தம்பதிகளின் நான்காவது பிள்ளையாக 2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். சி.பிறேமன், சி.பிரசன்னா ஆகிய இரு ஆண் சகோதரர்களையும் சி.றியானா என்ற ஒரு பெண் சகோதரியையும் கொண்ட இச் சிறுமி ஜே/ 174 காட்டுப்புலம் கிராம சேவையாளர் பிரிவில் வாழ்ந்து வந்தார். தந்தையார் கூலித் தொழிலையும் தாயார் வீட்டுப் பணியையும் மேற்கொண்டு வந்தார்கள்.

சி.பிறேமன் தரம் -10 இலும் சி.பிரசன்னா தரம்-08 இலும் யாழ். சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் பயின்று வருகின்றார்கள். சி.றியானா தரம்-5 இலும் காட்டுப் புலம் அ.த.க. பாடசாலையில் பயின்று வருகின்றார்.

தாயார் வீட்டில் ஒரு பசுமாட்டையும் வளர்த்து பராமரித்து வருகின் றார். வீட்டின் வலது பக்கத்தில் வைக்கோல் பட்டறை இடப்பட்டு வேலிகள் காவோலையால் வேயப்பட்டும் உள்ளன.

## ஆசிரியராக வருவதே றெஜினாவின் இலட்சியம்

மூன்று வயதிலேயே நல்ல ஞாபகசக்தியையும், திறன் விருத்தியையும் கொண்ட றெஜினா தனது முன்பள்ளிக் கல்வியை சங்கானை வட்டபிளே முன்பள்ளியில் பயின்று ஆங்கில கல்வியிலும் முன்மாதிரியான மாணவியாகத் திகழ்ந்தார். வகுப்பறையில் விளங்காத மாணவர்களுக்கு கரும்பலகையில் விளங்கப்படுத்துகின்ற திறனையும் கொண்டிருந்தார். வீட்டில் நிற்கும் போது சிறு தடியொன்றை கையிலெடுத்து தன்னை ஓர் ஆசிரியராகப் பாவனை செய்து பிள்ளைகளே நீங்கள் எல்லோரும் நன்றாகப் படித்துப் பெரியாட்களாக வரவேண்டும் என்று வீட்டின் சுவரை மாண வர்களாகக் கருதி தடியால் ஓரிரு அடி அடிப்பாராம். ஆசிரி யராக வர வேண்டும் என்பதே றெஜினாவின் இலட்சியம். ஆறு வயதிலேயே ஆசிரியராக வர வேண்டும் என்று பாவனை செய்து இலட்சியம் இலக்கு அமைத்த இப் பாலகிக்கா இந்நிலை...?

## றெஜினா உண்ட கடைசி உணவு

25ஆம் திகதி திங்கட்கிழமை காலை பாடசாலைக்கு ஆயத்தமாகிய பின்னர் தாயார் றொட்டியையும் பால் தேநீரையும் கொடுக்க அதை வாங்கித் தாயிடம் அம்மா இந்த றொட்டியை நீங்களும் கொஞ்சம் கடியுங்கோ என்று றொட்டியை தாயின் வாயில் நீட்டிக் கடிக்க வைத்து தானும் சாப்பிட்டாள். இதுதான் இவளின் இறுதி உணவு. இறுதி உணவிலும் தாயாருக்கும் கொடுத்து பகிர்ந்து உண்ணும் உயரிய பண்பைக் கொண்ட இப் பாலகிக்கா இந்நிலை...?

## றெஜினாவின் பேரன் மா.செல்லையா அவர்களின் குமுறல்

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தால் இவ்வாறான சீர்கேடுகள் நடக்காது. சீர்கேடு செய்தவர்களை மரத்தில் கட்டி உடனே சுட்டுப் போடுவார்கள். அவர்கள் இல்லாத காரணத்தினால் சீர்கேடுகள் மலிந்து கிடக்குது. இயக்கம் இருந்தால் எமது சமூகத்தில் நல்லொழுக்க விழுமியங்கள் மிளிர்ந்திருக்கும். றெஜினாவின் இறப்பால் நான் எவ்வளவோ கவலைப்படுறன்.

இதைவிட பெற்ற தாய் தகப்பனுக்கு எப்படிக் கவலையாக இருக்கும். மனிதனாகப் பிறந்ததிற்கு அர்த்தம் இருக்கிறது. சித்திமார், பெரியம்மா மார் நாங்கள் யாரும் பிள்ளைகளுக்கு ஒருநாள் பார்த்தாவது ஈக்கிலால் தன்னிலும் அடித்திருக்க மாட்டோம். ஆனால் மிருகத்தனமாக பிள்ளைகளுக்கு இப்பச் செய்திட்டார்கள். எங்கட பிள்ளைகளுக்கு நடந்த இந்த கொடூரம் போல உலகில் யாருக்கும் இப்படி நிகழக்கூடாது.

## றெஜினாவின் சகோதரி சி.றியானாவுடன் இறுதி நிமிடங்கள்

தங்கச்சியை நான் கடைசியாக பள்ளிக்கூடம் போறதிற்கு முன்னர் கொஞ்சிப்போட்டு போனான். ஒரு 11.45 மணி போல தங்கச்சிக்கு பள்ளிக்கூடம் விட்டு என்ர வகுப்பிற்கு வந்து என்னை "அக்கா போட்டு வாறன் என்று வாய் காட்டிட்டு போனா" அதற்குப் பிறகு நான் தங்கச்சியைக் காண் வில்லை. இதுதான் தங்கச்சி என்னோட கதைச்ச கடைசி நிமிடம்.

## றெஜினாவின் சித்தியின் பகிர்வு

பிறேமனும் பிரசன்னாவும் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் படிக்கிறார்கள். அவர்கள் இருவரும் 25 ஆம் திகதி காலை ஏழு மணிக்கு மூன்று கிலோமீற்றர் தொலை விலுள்ள பாடசாலைக்கு நடந்து போனார்கள். துவிச்சக்கர வண்டி ஓபாத காரணத்தால் றியானாவும் இவர்களோடு நடந்து தான் காட்டுப்புலம் பாடசாலைக்குப் போனா. எனது அக்கா 7.15 அப்படி றெஜினாவைப் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு போய் சைக்கிளில் விட்டிட்டு சமுர்த்தி வங்கிக்கும் கிராம அலுவலகத்திற்கும் வாக்காளர் பதிவிற்குச் சென்றிருந்தார். அவா மீண்டும் வீட்டிற்கு 1.30 அப்படி வந்திட்டா. றியானாவிடம் எங்க தங்கச்சி என்று கேட்டார். தெரியாது என்று பதிலளித்தார் றியானா. உடனே பாடசாலை புத்தகப்பை கட்டிலுக்கு பக்கத்தில் இருந்தது. ஒருகாலமும் சப்பாத்து வெள்ளைச் சீருடை மாற்றாமல் வெளியில் செல்லமாட்டா றெஜினா. அக்கம் பக்கம் தேடி பார்க்கின் றோம். கிட்டத்தட்ட நான்கு மணிவரை 12 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் மூன்று நான்கு பேர்கள் பக்கத்து வீட்டிற்கு புறா பிடிக்க வந்திருந்தார்கள். அவர்களுக்கு இருபது வயதிற்குள்ளேதான் இருக்கும். நான்கு ஐந்து பேர்கள் எமது கேற்றிற்கும் சந்திக்கும் இடையில் நின்று றெஜினாவைக் கூட்டிட்டுப் போட்டினம். பிள்ளை அடுத்த வர்களின் கையில் போகாது. அம்மாட்டக் கூட்டிட்டு போறன் என்று சொல்லக் கூட்டிட்டுப் போட்டினம். நாங்கள் எல்லோ ரும் தேடுகின்றோம். கிணற்றிற்குள் சடலமாக றெஜினா வைக் கண்டோம். நாங்கள் தேடிக் கொண்டிருக்கும் போது சிலபேர் வேலி அடைத்துக்கொண்டிருந்தார்கள். அவர் களை செந்தேக நபர்களாகக் கைது செய்தனர் பொலிஸார். அதில் ஒருவர் குற்றவாளியென ஒத்துக் கொண்டுள்ளார். இப்படியான சம்பவங்களுடன் தொடர்பு பட்ட குற்றவா ளிகளுக்கு அதிகபட்ச தண்டனைகள் வழங்கப் பட வேண்டும். கஞ்சா, கசிப்பு, கள்ளு ஆகியவற்றின் பயன்பாடுகளால் இளம் சமுதாயத்தினர் இதற்கு அடிமைப்பட்டு திசைமாறிப் போயுள்ளார்கள். பாவங்களுக்கு அடிமையாகி வாலிபத்தை அழித்து இருக்கின்ற குருத்துக்களையும் மொட்டுகளையும் தங்களுக்கு இரையாக்குகிறார்கள்.

றெஜினா என்னும் சின்னஞ்சிறிய வண்ணத்துப்பூச்சி கொடிய காமுகர்களின் வலைக்குள் அகப்பட்டு துடிக்க துடிக்கக் கொல்லப்பட்டாள் என்ற செய்தி மனித இதயங் களை சுக்கு நூறாக்கியது. கொடூர அரக்கர்கள் சிறிதும் இரக்கமின்றி வேர்விட்டு மரமாகி கிளை பரப்பி தமது அராஜகங்களைத் தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். ஒரு காலத்தில் தமிழரின் இருப்புக்கு விடுதலைப்புலிகள் இருந் தார்கள். அவர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது சமூகத்தில் பல தீமைகள் விதைக்கப் பெற்று இருக்கின்றன. அத்தீமைகளைக் களைய ஒவ்வொரு இளைஞர்களும் யுவதிகளும் சமூக நலனுக்காக முன்வர வேண்டும். அவ்வாறு முன்வந்தால் இறந்து போன றெஜினாக்கள் எம் மண்ணில் பிறப்பெடுத்து சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பார்கள்.

**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளியாக மனைவியாக — தாயாக —

## நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் முன்னாள் போராளிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாலதி படையணியைச் சேர்ந்த அந்த முன்னாள் பெண் போராளி 2011இல் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர், அவருக்கு இலங்கை அரசாங்க அதிகாரிகளால் ஒரேயொரு தையல் இயந்திரம் மாத்திரமே வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏழு ஆண்டுகளாக போரில் ஈடுபட்ட குறித்த முன்னாள் பெண் போராளிக்கு தையலில் ஈடுபடுவதில் ஆர்வம் இருக்கவில்லை. இதனால் இவர் தையலில் ஈடுபடாமல் கோழி வளர்க்கும் முயற்சியில் இறங்கினார். ஆனால் இந்த முயற்சியும் தோல்வியடைந்தது.

'நான் எனது குடும்பத்தாருக்கு பாரமாக இருப்பதை விரும்பவில்லை. நான் ஒவ்வொரு தடவையும் வெளியே செல்லும் போதும் எனது செலவிற்கான பணத்தை தந்தையிடம் வாங்க வேண்டிய நிலையிலுள்ளேன். இவ்வாறானதொரு வாழ்க்கையை நான் விரும்பவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போது இயங்கிக் கொண்டிருந்தால் நான் தளபதியாக இருந்திருப்பேன்' என 35 வயதான முன்னாள் பெண் போராளி தெரிவித்தார். இவர் அச்சம் காரணமாக தனது அடையாளங்களை வெளியிட மறுத்திருந்தார்.



தமிழ் இறையாண்மைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் மூன்று பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட யுத்தமானது மே 2009இல் இலங்கை இராணுவத்தினரால் வெற்றி கொள்ளப்பட்டதையடுத்து முடிவிற்கு வந்தது. இந்த யுத்தம் முடிவுற்று தற்போது ஒன்பது ஆண்டுகள் கடந்த நிலையில், முன்னாள் பெண் போராளிகளின் வாழ்வு குழப்பம் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

தமிழ் தாய்நாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பெண் விடுதலை போன்றவற்றை மையப்படுத்தியே அதிகளவான பெண்கள் தமிழீழ விடுதலைப் புலிகளில் இணைந்து கொண்டனர். புலிகள் அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாவர்.

ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னர், முன்னாள் பெண் போராளிகள் மீண்டும் தமது பாரம்பரிய வாழ்வை வாழவேண்டிய நிலையேற்பட்டது. தமது ஆண் போராளிகளுக்குச் சமமாக செயற்பட்ட இப்பெண் போராளிகள், போர் முடிவடைந்த பின்னர் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்று வீட்டுப் பொறுப்புக்களை ஏற்கவேண்டிய நிலைக்குத் திடீரெனத் தள்ளப்பட்டனர்.

இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என முன்னாள் கடற்புலிப் பெண் போராளி தெரிவித்தார். இவர் தன்னை அடையாளப்படுத்த விரும்பவில்லை. தற்போது 39 வயதான இவர், 1990களில் இவர் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட பின்னர் யுத்தங்களில் பங்கேற்றிருந்ததால் இவரது உடலில் பல்வேறு வடுக்களைக் காணமுடியும்.

'நான் பெண்களுக்கான கராத்தே மற்றும் ஏனைய தற்காப்புக் கலைகளைப் பயிற்றுவிக்க விரும்பினேன். ஆனால் எனது கணவர் அதற்கு சம்மதிக்கவில்லை. இவ்வாறான பயிற்சிகளை வழங்குவதால் எனது பின்னணி தொடர்பாக மக்கள் சந்தேகப்படுவார்கள் என எனது கணவர் தெரிவித்திருந்தார்' என குறித்த முன்னாள் பெண் போராளி தெரிவித்தார்.

போரிலிருந்து தப்பிப் பிழைத்தோர் இன்றும் கூட தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான முன்னாள் பெண் போராளிகளின் அடிப்படை சமூக பொருளாதாரத் தேவைகளை முதன்மைப்படுத்துவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை' என இலங்கைக்கான அனைத்துலக நெருக்கடி குழுவின் மூத்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்தார்.

'வறுமை மற்றும் பாலியல் வன்கொடுமைகள் போன்ற மீறல்களை முன்னாள் பெண் போராளிகள் எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரக்கூடிய எந்தவொரு முழுமையான கோட்பாட்டையும் இலங்கை அரசாங்கம் இன்னமும் உருவாக்கவில்லை' என அலன் கீனன் குறிப்பிட்டார். தமிழ் சமூகத்தில் வாழும் முன்னாள் பெண் போராளிகள் தொடர்ந்தும் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் ஆய்வாளர் அலன் கீனன் மேலும் சுட்டிக்காட்டினார்.

போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ்ப் புலிகள் தமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் சிறுவர் ஆட்சேர்ப்புக்களில் ஈடுபட்டனர். அத்துடன் தமிழ் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகவும் பயன்படுத்தினர்.

இராணுவத்தினர் 'போர் தவிர்ப்பு வலயங்களை' இலக்கு வைத்து கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டிருந்தனர். இதனால் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

போர் இடம்பெற்ற போது சமூக அடக்குமுறைகளிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ்ந்த பெண் போராளிகளின் பெண்ணியவாத ஆயுதம் சார் குறியீடானது யுத்தம் முடிவடைந்த பின்னர் முடிவிற்கு வந்தது. போர்க்காலத்தில் நீளக் காற்சட்டை அணிந்து திரிந்த பெண் போராளிகள், போர் முடிவடைந்த பின்னர் தமது குடும்பத்தினர் மற்றும் அயலவர்களை சமாதானப்படுத்துவதற்காக மீண்டும் சேலை போன்ற பாரம்பரிய ஆடைகளை அணிந்து கொண்டும் கட்டையாக வெட்டிய தலைமுடிகளை மீண்டும் வளர்க்க வேண்டிய நிலைக்கும் உள்ளாகினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயர்மட்ட பொறுப்பாளராகக் கடமையாற்றியவரின் மனைவியும் வடமாகாணத்திற்கான பெண்கள் விவகார அமைச்சருமான அனந்தி சசிதரன், தன்னிடம் முன்னாள் பெண் போராளிகள் பலர் வாழ்வாதார உதவி கோரி வருவதாகத் தெரிவித்தார்.

இப்பெண் போராளிகள் பலர் தமது கணவன்மாரை இழந்தும் தொழிலற்றும் வாழ்வதுடன் அரச புலனாய்வுக் கண்காணிப்பிற்குள் உள்ளாவைத் தவிர்க்க வேண்டிய நிலையிலும் வாழ்வதால் இவர்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக வடமாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

'முன்னாள் பெண் போராளிகள் பலர் உடலில் யுத்த வடுக்களைக் கொண்டுள்ள போதிலும் அவர்கள் அணியும் உடைகளால் அந்த வடுக்கள் வெளியில் தெரிவதில்லை. ஆனால் இவர்களின் உடலிலுள்ள யுத்த வடுக்கள் காரணமாக இவர்களால் கடினமான பணிகளைச் செய்யவும் முடியாத நிலையில் வாழ்கின்றனர்' என வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

முன்னாள் பெண் போராளிகள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதால் இது ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பாதிப்பைச் செலுத்துகின்றது.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் இடம்பெறுவதாகவும் உறுதியான பொருளாதாரம் கட்டியெழுப்பப்படுவதாகவும் கூறப்படுகின்ற போதிலும் முன்னாள் பெண் போராளிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையை உயர்-நடுத்தர வருமான நாடாக மாற்றும் நோக்குடன் 'Vision – 2025' என்கின்ற திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கின்ற போதிலும் கூட இப்பெண் போராளிகளின் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்படவில்லை.

கடும்போக்கு ஆட்சியாளரான மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது வடக்கில் பாரிய கட்டுமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவ்வாறான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உள்ளூர் பணியாளர்கள் அதிகளவில் அமர்த்தப்படவில்லை என தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று இயக்குநர் ஜெகன் பெரேரா தெரிவித்தார்.

2015இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்றுக் கொண்ட பின்னர், வீடமைப்புத் திட்டங்கள் பாரியளவில் மேற்கொள்ளப்படுவதாகவும் இது பொதுமக்களுக்கு நன்மையளிப்பதாகவும் ஜெகன் பெரேரா தெரிவித்தார்.

'தற்போது வெளிப்படையான ஒரு மாற்றம் தென்படுகின்றது. ஆனால் இவ்வாறான திட்டங்கள் உண்மையில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களைச் சென்றடைகின்றதா என்பதே இங்கு வினாவாக உள்ளது. கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அல்லது நகரங்களில் பொருளாதார வலுவற்று வாழும் மக்கள் இவ்வாறான திட்டங்கள் மூலம் நன்மை பெறவில்லை' என ஜெகன் பெரேரா தெரிவித்தார்.

வர்த்தகத் திட்டங்கள் உட்பட்ட நல்லிணக்கத் திட்டங்களுக்காக 2018இல் இலங்கை அரசாங்கத்தால் கிட்டத்தட்ட 8 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குள் குறைந்தது ஐந்து முன்னாள் போராளிகள் அல்லது போரின் போது கணவன்மாரை இழந்த பெண்கள் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும்.

2025இல் இலங்கை பொருளாதார வலுமிக்க ஒரு நாடாக மாறுவதற்கு நல்லிணக்கம் என்பது மிகவும் முக்கியமான விடயமாக உள்ளதாக வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது நிதியமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

'போர் வெற்றி கொள்ளப்பட்டாலும் கூட நாங்கள் இன்னமும் சமாதானத்தை வெற்றி கொள்ளவில்லை. சமாதானத்தை வெற்றி கொள்ள வேண்டுமாயின் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வெல்வது மிகவும் அவசியமானது' என அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருந்தார்.

2001இல் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட பிறிதொரு முன்னாள் கடற்புலிப் போராளி புலிகள் அமைப்பில் எட்டு ஆண்டுகள் கடமையாற்றியிருந்தார். யுத்தத்தின் பின்னர் இவர் தனது கணவருடன் வாழ்ந்து வருகிறார். 'சிற்றுண்டிகளை தயாரிப்பது தொடர்பான பயிற்சிகளை நான் பெற்றிருந்தேன். இதன் மூலம் இவற்றைத் தயாரித்து கடைகளுக்கு கொடுத்து எனக்கான வருமானத்தைப் பெற்றுக் கொண்டேன். ஆனால் தற்போது என்னால் இதனைத் தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாதுள்ளது.' என 33 வயதான முன்னாள் பெண் போராளி தெரிவித்தார்.

இவர் தற்போது கர்ப்பிணியாக உள்ளார். இவரது வலது காலில் யுத்த வடு உள்ளது. இதற்குள் தற்போதும் குண்டுத்துகள்கள் உள்ளதாகவும் இவர் தெரிவித்தார். இவரது கணவர் ஒரு மாற்றுத்திறனாளி ஆவார்.

ஆகவே தனது கணவரையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பை இவர் கொண்டுள்ளார். ஒரு மனைவியாகவும் தாயாகவும் குடும்பக் கட்டமைப்பிற்குள் பொறுப்புக்களை வகிப்பதென்பது மிகவும் கடினமான ஒன்றாகும் என முன்னாள் பெண் போராளி தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் – **Holly Robertson**
வழிமூலம் – **Washington post**
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி ஏன்? வெளியேறியது





உலகக் கோப்பை கால்பந்தின் மிகப்பெரிய சாபக்கேடு இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. மீண்டும்... ஆம், மீண்டும் ஓர் உலகச் சம்பியன் குரூப் சுற்றுடன் வெளியேறியிருக்கிறது. ஜேர்மனி - 1954ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒவ்வோர் உலகக்கோப்பையிலும் கால் இறுதிக்குள் நுழைந்த் அணி, கடந்த நான்கு உலகக் கோப்பைகளிலும் குறைந்தபட்சம் 3ஆம் இடம் பெற்ற அணி, இப்போது மூன்றில் இரண்டு போட்டிகளில் தோற்று, குரூப் பிரிவில் கடைசி இடம் பிடித்து வெளியேறியுள்ளது. கடந்த ஐந்து உலகக் கோப்பைகளில், நடப்புச் சம்பியன்களில் லீக் சுற்றோடு வெளியேறுவது இது நான்காவது முறை. ஜேர்மனியின் தோல்விக்கு இந்த செண்டிமென்ட் கைகொடுத்தாலும், அவர்களை வெளியேற்றியது அவர்களின் திட்டமும் ஆட்டமும்தான். நடப்புச் சம்பியன் ஏன் வெளியேறியது? அவரை வெளியேற்றிய காரணங்கள் என்னென்ன? ஓர் அலசல்.

### நம்பர் 6' ஃபெயிலியர்

இந்த உலகக் கோப்பையில் ஜேர்மனியின் பின்னடைவுக்கு முதல் முக்கியக் காரணம் நம்பர் 6' பொசிஷனில் சொதப்பியதுதான். கால்பந்தில் டிஃபன்ஸிவ் மிட்ஃபீல்டர்களைத்தான் 'நம்பர் 6' பிளேயர்கள் எனக் குறிப்பிடுவார்கள். முன்கள வீரர்களையும் டிபண்டர்களையும் இணைக் கும் பாலம் இவர்கள்.

இரண்டு ஏரியாக்களிலும் இவர்கள் பங்களிக்கவேண்டும். ஓர் அணியின் மிகமுக்கியத் தூண் இந்த பொசிஷன். 2014 உலகக் கோப்பையில் ஜேர்மனி அணி வென்றபோது, இந்த பொசிஷனில் விளையாடியவர் ஃபிலிப் லாம். 2 பாக்ஸ் -டு - பாக்ஸ் மிட்ஃபீல்டர்கள் ஆடியபோது அந்த இடத்தில் ஆடியவர்கள் ஸ்வைன்ஸ்டீகர் மற்றும் கெதிரா.

லாம் - ஒரு டிஃபண்டர். 'நம்பர் 6' பொசிஷனில் அவர் விளையாடும் போது, டிஃபன்ஸ்'க்கு நல்ல ஒத்துழைப்பு கிடைக்கும். ஸ்வைன்ஸ்டீகர் - கெதிரா கூட்டணி விளையாடிய போது, ஸ்வைன்ஸ்டீகர் டிபனஸ்'கும், கெதிரா ஃபார்வேர்டுக்கும் சப்போர்ட் செய்து ஆடுவார்கள். ஸ்வைன்ஸ்டீகரின் அனுபவம் டிஃபண்டர்களுக்கு உதவியாக இருக்கும். அவர்தான் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகன்கூட.

ஆனால், இந்தத் தொடரில் இந்த பொசிஷனில்தான் ஜேர்மனி பெரிய ஓட்டை விட்டது. கடந்த உலகக் கோப்பையில் பெரும்பாலும் பிளேமேக்கர் ரோலில் ஆடிய டோனி குரூஸ், கெதிராவுடன் கூட்டணி சேர்ந்தார்.

இருவரில் 'யார் டிஃபண்டர்களுக்கு சப்போர்டிவாக விளையாடுவது என்று திட்டமிட்டார்களா எனத் தெரியவில்லை. இருவருமே அட்டாக்கில் ஆர்வம்கொண்டு எதிர் அணியின் பாக்ஸ்'க்கு அருகிலேயே ஆடிக்கொண்டிருந்தனர். ஃபுல் பேக் இருவரும் விங்கில் இருந்ததால், இரண்டு சென்ட்ரல் டிஃபண்டர்கள் மட்டும் பல நேரங்களில் தனித்துவிடப்பட்டனர். மெக்ஸிகோ அணி, கவுன்ட்டர் அட்டாக்கில் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி கோலடித்துவிட்டது. மேலும் மேலும் கோலடிக்க முயன்றது.

ஆனால், அந்தப் பிரச்சினை சரிசெய்யப்படவே இல்லை. எதிர் அணி இப்படி இரண்டு மூன்று முறை வந்தாலே, ஆட்டத்தின் கெமிஸ்ட்ரி முற்றிலுமாக மாறிவிடும். ஸ்வீடன் அணிக்கு எதிராகவும் பலமுறை இந்தத் தவறு நிகழ்ந்தது. கடைசிவரை அட்டாக்கில் மட்டுமே ஆர்வம்காட்டிய ஜேர்மனி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருந்தால் முடிவு நிச்சயம் மாறியிருக்கும்.

### நம்பர் 9' சொதப்பல்

ஜேர்மனி இத்தனை காலம் உலகக் கோப்பையில் ஆதிக்கம் செலுத்த முக்கிய காரணமாக விளங்கியது, அந்த அணியின் ஸ்ட்ரைக்கர்கள். கடந்த சில ஆண்டுகளாக ஜர்ஜன் க்ளின்ஸ்மேன், மிரோஸ்லேவ் குளோஸ் போன்ற டாப் க்ளாஸ் ஸ்ட்ரைக்கர்களுடன் விளையாடிய அணி ஜேர்மனி. குளோஸ் போச்சர் வகை வீரர். பந்தை கோலுக்குள் திணிக்கக் காத்துக்கொண்டிருப்பார். கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் கோலாக்க முயல்வார். உலகக் கோப்பையின் டாப் கோல் ஸ்கோரர்! ஆனால், அப்படிப்பட்ட வீரர்கள் யாரும் இந்த ஜேர்மனி அணி இல்லை. நம்பிக் களமிறக்கப்பட்டவர்களும் பெரிதாகச் சோபிக்கவில்லை.

ஜேர்மனியின் பிரதான ஸ்டிரைக்கரான டிமோ வெர்னர், ஒரு ஸ்ட்ரைக்கர் கொடுக்கவேண்டிய பங்களிப்பை அணிக்குக்கொடுக்கவேயில்லை. இந்த மூன்று போட்டிகளிலும் 252 அட்டாக்குகள் செய்துள்ளது ஜேர்மனி. அதில் அவர்கள் அடித்தது வெறும் இரண்டே கோல்கள். 288 நிமிடம் விளையாடிய வெர்னர், மொத்தம் அடித்ததே 6ஷொட்கள் என்பதுதான் மிகப்பெரிய சோகம். ஒரு ஷொட் அடிக்க, அவர் எடுத்துக்கொண்டது 48 நிமிடம். அதாவது, ஒவ்வொரு ஹால்ஃப் டைமுக்கும் ஒரு ஷொட். இதைவிட மிகப்பெரிய கொடுமை என்னவெனில், அந்த 6 ஷொட்களில், இலக்கை நோக்கி அடிக்கப்பட்ட ஷொட்களின் எண்ணிக்கை - 1!

மரியோ கோமஸ் களமிறங்கினால் விங்கில் சென்று விளையாடத் தொடங்குகிறார். 32 வயதான மரியோ கோமஸிடம் அதிகம் எதிர்பார்ப்பதும் தவறுதான். அவர்களைத் தவிர்த்து அணியில் ஸ்ட்ரைக்கர்களே இல்லை என்பது தான் அடுத்த சோகம். ஒரு நடப்பு சம்பியன் 11 பொசிஷன்களிலும் சிறந்த பிளேயர்கள் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், சம்பியன் ஆகவேண்டிய அணி, கட்டாயம் 11 பொசிஷன்களிலும் சிறந்த வீரர்களை வைத்திருக்க வேண்டும்.

### கப்டன் இருந்துச்சு... ஆனால், லீடர் இல்லை..!

ஜேர்மனி அணியின் தோல்விக்கு இன்னொரு மிகமுக்கியக் காரணம் - ஒரு நல்ல லீடர் இல்லாதது. லாம், ஸ்வைன்ஸ்டீகர் போல் `commanding' வீரர்கள் ஜேர்மனியில் இல்லாதது ஒரு பலவீனமாக அமைந்துவிட்டது. நூயர் கப்டனாக இருந்தாலும், கொஞ்சம் டென்ஷன் பார்ட்டி. ஆட்டம் கையை மீறிப் போகும் போது, அங்கு உடனடியாக ஒரு மாற்றம் கொண்டுவர வேண்டும். ஆட்டத்தின் அணுகுமுறையில், கேம் பிளானில் கொஞ்சம் பட்டி டிங்கரிங்க செய்யவேண்டும். அதற்கு ஓர் அனுபவமுள்ள தலைவன் இருக்க வேண்டும். அப்படியாரும் அந்த அணியில் இல்லாததால், 45 நிமிடம் முடிந்து டக் அவுட் போகும் வரை அதே பிளானோடுதான் ஆடுகிறார்கள்.

தென் கொரியாவுடனான ஆட்டத்தில் பலமுறை வெர்னர் மிகவும் ஃப்ரீயாக போஸ்டின் முன் இருக்கிறார். ஆனால், வழக்கம் போல் பாஸ் கிம்மிச் நோக்கியே பயணிக்கிறது. அந்த இடத்தில் ஆட்டத்தின் வேகத்தைக் குறைத்து, ஆப்ஷன்களை அதிகரித்திருக்க வேண்டும். ஆட்டத்தின் வேகத்தையும், ஃப்லோவையும் நன்றாக கன்ட்ரோல் செய்யக்கூடிய ஸ்வைன் ஸ்டீகர், லாம் போன்ற வீரர்கள் ஒருவர்கூட அணியின் நடுகளத்தில் இல்லை. அப்படி அந்த இடத்துக்கு வந்திருக்க வேண்டிய முல்லர், கெதிரா போன்ற வீரர்கள், ஒரு சாதாரண வீரர்களாகவே நடந்து கொண்டனர்.

### பயிற்சியாளர் லோ - தவறுகளின் தொடக்கம்!

சொல்லப்போனால் மெக்சிகோ அணிக்கெதிரான போட்டிக்கு முன்பே ஜேர்மனிக்கு வார்னிங் சிக்னல் அடிக்கப்பட்டுவிட்டது. உலகக் கோப்பைக்கு முன் கடைசியாக விளையாடிய 6 போட்டிகளில் ஒன்றில் மட்டுமே வென்றிருந்தது ஜேர்மனி. லோ - எதையுமே மாற்றாமல் களமிறங்கினார். குண்டோகன், ரியூஸ் போன்றவர்களை அமரவைத்துவிட்டு தன் ஃபேவரிட்களான கெதிரா, ஓசில் ஆகியோரைக் களமிறக்கினார். ஸ்வீடனுடன் இருவரையும் வெளியே அமர்த்தினார். ஆனால், ஒரு வெற்றி, அதீத நம்பிக்கை கொடுத்த அந்தத் தவற்றை மீண்டும் செய்யவைத்தது. கெதிரா - குரூஸ் இருவருமே பெரிதாக வேகம் இல்லாதவர்கள். எப்படி அது செட் ஆகும்?



தலைசிறந்த ஸ்ட்ரைக்கர்கள் இல்லாதபோது, வெறும், இரண்டு ஸ்ட்ரைக்கர்களை மட்டுமே ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றார். அணி முழுக்க நடுகள வீரர்கள். அணியில் தேர்வு செய்யப்படாத கோபத்தில் சர்வதேசப் போட்டிகளிலிருந்து நீல் வேக்னர் ஓய்வே அறிவித்தார். அவர் பெரிய தாக்கம் ஏற்படுத்தியிருக்கப் போவதில்லை. ஆனால், ஒரு கூடுதல் ஆப்ஷன் கொடுத்திருப்பார். அதை ஜேர்மனி தொலைத்திருந்தது. அதேபோல், கடைசி வரை அட்டாகிங் அணுகுமுறையை மாற்றவே இல்லை. ஒவ்வொரு போட்டியிலும், வீரர்கள் மாற்றப்பட்டார்களே தவிர, அணுகுமுறை மாற்றப்படவில்லை. Aerial threat கொடுக்ககூடிய ஹம்மல்ஸ், முல்லர், போடங் போன்றவர்களை வைத்துக்கொண்டு குரூஸ் கடைசி வரை ஷொர்ட் பாஸ்கள்தாம் எடுத்துக்கொண்டிருக்கிறார். எதையுமே லோ மாற்றவில்லை. சம்பியன்களின் தலையெழுத்தும் மாறவில்லை.

இத்தனை டெக்னிக்கல் பிரச்சினைகள் ஜேர்மனியின் ஆட்டங்களில் அப்பட்டமாகத் தெரிந்தது. ஆனால், அவர்கள் எதையும் சரிசெய்து கொள்ளவே இல்லை. இந்த முறை சம்பியனாகும் அணி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் அணிகளின் ஆட்டத்தோடு, இந்த ஜேர்மனியின் ஆட்டத்தையும் 'Case Study'- ஆக எடுத்துக்கொண்டு "சம்பியன்கள் எப்படி வெளியேறினார்கள்" என்று பாடம் படிக்கவேண்டும். இந்த நிலை மாறவில்லையெனில், உலகக் கோப்பையின் பரபரப்பில் மிகப்பெரிய பகுதியை இழக்க நேரிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உரிமைக்குரல்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : எல்.ஆர்.ஈஸ்வரி



ஒரு தாய் வயிற்றில் வந்த உடன்பிறப்பில்
கொஞ்சம் பிரிவு வந்தால்
பின்பு உறவு வரும்
நல்ல மனிதருக்கும் நன்றி மறந்தவருக்கும்
முன்பு உறவிருந்தால்
பின்பு பிரிவு வரும்
ஒரு தாய் வயிற்றில்...............

சோலை மலர்க் கூட்டம் சொந்தம் கொண்டாடி
சிரித்து உறவாடுதே
மாலை பனி மூட்டம் மலர்கள் இலை தோறும்
சிரித்து விளையாடுதே
இங்கு நான் அங்கு நீ. என்று நாம் வாழலாம்
அண்ணன் போற்றும் தம்பி
என்று நீயே கூறலாம்
ஒரு தாய் வயிற்றில்...............

உடலின் பின்னோடு உலவும் நிழல்கூட
இருளில் பிரிகின்றது
வெளிச்சம் வரும் போது உடலை நிழல்தேடி
இணைய வருகின்றது
என் மனம் பொன்மனம் என்பதை காணலாம்
நாளை அந்த வேளை
வந்து என்னை சேரலாம்
ஒரு தாய் வயிற்றில்...............

கண்ணை மறைக்கின்ற காலம் வரும் போது
தர்மம் வெளியேறலாம்
தர்மம் அரசாளும் தருணம் வரும்போது
தவறு வெளியேறலாம்
நல்லவர் லட்சியம் வெல்வது நிச்சயம்
அண்ணா அன்று சொன்னார்
என்றும் அதுதான் சத்தியம்
ஒரு தாய் வயிற்றில்..............

# இது நம்ம கதைகள்... 05

## பூனையும், புருஷனும்

கடந்த வாரம் வெளியான "ஒரு நாயும், நல்லாயிருந்த ஊரும்" கதையை வாசித்து சில இல்லத்தரசிகள் Hot ஆகியதாகத் தகவல் கிடைத்தது. நாட்டையும், வீட்டையும் பிரிக்கும் நாரதர் அல்ல "இது நம்ம கதைகள்", மாறாக நம் வாழ்க்கையின் நடப்புக்களையும், நிதர்சனங்களையும் நகூக்காகச் சொல்லி நன்மை பயப்பதே இதன் பணி. எனவே இல்லத்தின் அகல் விளக்குகளே...! உங்களைக் cool பண்ண இதோ இந்த வாரக் கதை........

அந்த வீட்டின் செல்லப் பிராணி ஒரு பூனை. அதற்கு Hero என்று பெயர். ஆரம்பத்திலே ஹீரோவை shampoo வைத்துக் குளிப்பாட்டுவார்கள். பூனைக்கென்றே super market இல் விற்கப்படும் பால்மா, உணவு வகைகள் அதற்கு வழங்கப்பட்டன. அது படுத்துறங்க கம்பளம் போட்ட கதிரை. வீட்டிலுள்ளோர். முதுகிலெல்லாம் அது செல்லமாக குதிரைச் சவாரி செய்யும். அந்தளவு சுதந்திரம் அதற்கு வழங்கப்பட்டிருந்தது. ஹீரோவும் எலிகளை அவ்வப்போது பிடித்தது. நம்மவர்கள் செத்துப்போன சிறுத்தையுடன் pose கொடுத்து fb இல் போட்டது போல்,ஹீரோவும் தான் பிடித்த எலியுடன் pose கொடுக்கும். வீட்டிலுள்ளோரின் பாராட்டுக்களையும், முத்தங்களையும் பெறும்.

நாட்கள் போகப்போக ஹீரோ மீதான அக்கறை வீட்டிலிருந்தோருக்குக் குறையத் தொடங்கியது. ஹீரோவும் சோம்பேறியானது. எலியைப் பிடிப்பதற்குப் பதிலாக சட்டியைத் தட்டி சாப்பாட்டைப் பதம் பார்த்தது. அடிக்கடி எஜமானி அம்மாவிடம் அகப்பைக் காம்பால் சாத்து வாங்கத் தொடங்கியது. Hero இப்போது zero ஆனது. செல்லப்பிராணி தொல்லைப் பிராணியானது. அதை எங்காவது காடாத்தவேணும் என்று வீட்டுக்கார அம்மா ஐயாவைப் பார்த்து நச்சரிக்கத் தொடங்கினாள்.

அம்மாவின் நச்சரிப்புத் தாங்காமல் ஐயா Super man அவதாரமெடுத்தார். ஒரு பையில் ஹீரோவை சுருட்டிப் போட்டுக் கொண்டு ஹீரோ சைக்கிளில் விரைந்தார். ஊருக்குப் புறத்தேயிருந்த மயானத்தில் பையைத் தூக்கியெறிந்து விட்டு வேகமாக வீடு திரும்பினார். இந்தத் தடவை மனைவியின் பாராட்டுக் கிடைக்கும், கெஞ்சிக் கேட்காமலே ஒரு கப் தேநீர் கிடைக்கும் என்ற கற்பனைகளுடன் அண்ணாமலை யின் சைக் கிளாக செட்டை கட்டிப் பறந்தது நம்மாளின் சைக்கிள்.

கேற்றை சத்தமாகத் திறந்து தன் வெற்றி வரவை கட்டியம் செய்து கொண்டு உள்ளே நுழைந்தார். நமட்டுச் சிரிப்புடன் மனைவி நிற்க பின்னே மியாவ் என்றவாறு re-entry ஆனது நம்ம ஹீரோ பூனை. வியப்பும் விசனமும் மேலெழ "இது எப்படி திரும்பி வந்தது" என்றார் மனைவியைப் பார்த்து. "இந்தக் கேள்வியை நான் தான் உங்களிடம் கேட்க வேணும்" என்றாள் சற்றுக் கோபத்துடன். "ஒரு பூனையைக்கூட ஒழுங்கா காடாத்தத் தெரியாத மனுஷன் ....."என்று புறுபுறுத்தவாறு மனைவி உள்ளே செல்ல நம்மாளுக்கு தலைசுற்றுவது போலிருந்தது. தேநீர்க் கனவில் தேள் கொட்டிய உணர்வு தோன்றியது. அடுத்த முறை miss பண்ணமாட்டேன் என்று சபதம் பூண்டார். ஹீரோ பூனை இப்போது வில்லனாகியது.

சில நாட்களின் பின் திட்டம் தயாராகியது. டபக்கென ஹீரோவைப் பிடித்து, பொதி செய்து, தயாராக நின்ற Hero Honda இல் ஆவா போல் பறந்தார் நம்மாள். அடுத்தவூர் எல்லையில் "U turn" போட்டு டோனியின் ஹெலிஹொப்டர் ஷொட் போல் ஹீரோவை மின்னல் வேகத்தில் தூக்கியெறிந்தார்"வீடு நோக்கி ஓடிவந்த எம்மையே நாடி நிக்குதே அநேக நன்மையே.. நன்மையே..." என்று பாடியவாறு பிரியாணிக் கனவுடன் வீட்டினுள் காலடியெடுத்து வைத்தார் அடுத்த கணமே அதிர்ந்து போனார். பிரியா மணியாக பூனை நின்று கொண்டிருந்தது. இது எப்படி இவ்வளவு விரைவாகத் திரும்பி வந்தது என்று தன் மனதையே குடைந்து கொண்டார். அடுப்படியிலிருந்து வரும் அர்ச்சனைக்கு காது கொடுக்காமல் மெல்ல நழுவினார்.



Master plan உருவாகியது. பூனையைப் பிடித்து பெட்டியிலே அடைத்து, மனைவியை நெற்றியில் வெற்றித் திலகமிடச் செய்து, நண்பனிடம் இரவல் வாங்கிய Honda Civics காரில் ஊர்கள் கடந்து, நகரங்கள் தாண்டி, மாவட் டம் மாறி,சந்துகள் - பொந்துகளில் நுழைந்து பொருத்தமான இடத்தில் ஹீரோ பூனையை காடாத்தி விட்டு திரும்பிக் கொண்டிருக்கிறார் நம்மாள். வீட்டிற்கு வெகுதூரம் செல்ல வேண்டும்.நேரம் அந்தியைத் தாண்டி விட்டது.

Samsung கைபேசியை எடுத்து மனைவிக்கு அழைப்பெடுத்தார்.. "என்னப்பா எங்கே நிற்கிறீங்கள், என்ன விசயம் " என வினவினாள் மனையாள்." ஒரு ஆவேசத்தில பூனையை சந்து - பொந்தெல்லாம் சுற்றிச் சுழன்று கொண்டு வந்து காடாத்தி விட்டிட்டன். ஆனால் இப்ப எனக்கு வீட்டிற்குத் திரும்பி வர வழி தெரியவில்லை. பூனை உங்க வந்தால் ஒருக்கால் அதனிடத்தில் phone ஐ கொடு, அதனிடம் தான் நான் திரும்பி வாறத்திற்கு வழி கேட்க வேணும் " என்றார்... துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்று மற்றவர்களுக்கு வழி சொல்லும் நம்ம வட்டுக்கோட்டைச் சிங்கம்.

**(Sorry Bros for making fun of you.)**

இங்கும் நம் வழிகாட்டிகள் பலருக்குத் தாங்கள் செல்லும் வழி கூடச் சரிவரத் தெரிவதில்லை.

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# சமூக மாற்றத்துக்காய் வெளிவரும் கலைமுகம் கலை இலக்கிய சஞ்சிகை

நமது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன.நாம் அன்று எவ்வாறு இருந்தோம் இன்று எவ்வாறு இருக்கின்றோம்.

எமது வாழ்வியலுடன் இருந்த இயற்கை எவ்வாறு இல்லாது போனது. அதற்கான மூலகாரணம் என்ன என்பதை அலசி ஆராயும் சிறந்த ஆசிரியர் தலையங்கத்துடன் வெளிவந்து இருக்கிறது கலைமுகம் கலை இலக்கிய சமூக இதழ்-65

கலைமுகம் கலை இலக்கியம் பற்றி மட்டும் பேசாது ஒரு சமூக அக்கறையுடன் வெளிவருவது மகிழ்விற்குரிய விடயமே. ஒரு பொது இடத்தில் பிரசங்கம் நடைபெறுகிறது அதை நூறு பேர் கேட்கிறார்கள். அந்தப் பிரசங்கத தில் சொல்லப்படும் நல்ல கருத்துக்களை அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் நூறு பேரும் பின்பற்றப் பேவதில்லை என்பது பிரசங்கத்தைச் செய்பவருக்குத் தெரியும். இருந்தாலும் அந்த நூறில் ஒரு பத்துப் பேரில் மாற்றம் உண்டென்றால் நிச்சயம் அது பாரிய வெற்றியே.

ஒரு பிரசங்கத்தில் பத்துப் பேர் என்றால் பத்துப் பிரசங்கத்தில் நூறு பேர். இது தான் சமூக மாற்றம்.

அந்த வகையில் கலைமுகம் கலை இலக்கிய சமூக இதழும் சமூக மாற்றத்துக்காய் அயராது பாடுபட்டு வருகின்றது என்பது பெருமைப்படவேண்டிய ஒரு விடயம்.




இரட்டைப்பனை மரத்தின் அழகிய தோற்றத்துடன்வெளிவந்திருக்கும் கலைமுகம்சஞ்சிகை முகப்புப் படத்திலேயே பலீ செய்திகளைத் தாங்கி நிற்கிறது.

முகப்புப் படத்துக்கான கருவை வாசகர்களாகிய உங்களிடம் விட்டு விடுகிறேன். கலைமுகம் சஞ்சிகையை வாசிக்கும் போது அதன் பொருளைத் தேடிக் கண்டு பிடியுங்கள்.

"படைப்பு என்பது முற்று முழுதாக தூய உருவாக்கம் அல்ல ஏனெனில் அது இல்லாத ஒன்றில் இருந்துஉருவாவது அல்ல. எங்கோ ஒரு வெளியில் இருந்து பிரமமாய்தோன்றுவதும் அல்ல. அது ஒரு தேவையில் இருந்து உருவாவது. எமக்குள் தேவை ஒன்று உருவாக்கித் தருகின்ற வெளிப்பாட்டு அடையாளமே படைப்பு" என்கின்ற முக்கிய குறிப்புடன் ந.மயூரன் எழுதிய கவிதை, கருத்தியல், அரசியல் எனும் கட்டுரை நீண்டு செல்கிறது.

கீதா சுகுமாரின் உலப்பாடு யுத்தம், அகம், வெளி. சாந்தனின் நினைவின் நீள்தடம்.சோ.ப வின் வார்ட் இல. G.4 சிறுகதை, கறை ஒரு காண்பியல் கலைக் காட்சி அனுபவத்தின் உணர்வுப் பகிர்வு. கலாநிதி வ.சிவலோகதாசனின் அறிவியல் கற்கைகள் துறைகளுக்கு மாற்றப்பட வேண்டிய தமிழ் இலக்கிய அறிவியல் சிந்தனைகள். மறைந்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம், ஈழத்துப் பத்திரிகை உலகில் ஒரு சகாப்தம், காலத்தால் அழியாத கலைஞன் ஏ.ஈ.மனோகரன் போன்ற பல தரமான ஆக்கங்களுடன் இன்னும் பல கவிதை கட்டுரைகள் வெளியாகி இருக்கிறது.

ஒரு சமூகத்தின் கண்ணாடியாக பிரதிபலிக்கும் கலை முகம் கலை இலக்கிய சமூக இதழ் நம் அனைவரின் கைகளிலும், வீட்டின் கோல்களிலும், புத்தக சாலைகளிலும், நூலகங்களிலும் இருக்க வேண்டிய ஒன்று.

சமூக மாற்றத்திற்கான சிந்தனையில் பயணிக்கும் கலை முகம் சஞ்சிகையுடன் நாமும் இணைந்து பயணிப்போம்.

**மாவை.நா.கஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# டிக் டிக் டிக்

திரைவிமர்சனம்





தமிழ் சினிமா தற்போதெல்லாம் புதிய புதிய கதை களங்களில் அடுத்தக்கட்டத்தை நோக்கி பயணிக்கின்றது. அந்த வகையில் நாய்கள் ஜாக்கிரதை, மிருதன் என தொடர்ந்து புதிய முயற்சிகளை எடுத்து வரும் சக்தி சௌந்தர்ராஜன் வித்தியாசமான கதைக்களத்தை தேர்ந்தெடுக்கும் ஜெயம் ரவியுடன் கூட்டணி வைத்துள்ள ஸ்பேஸ் கதைக்களம் தான் டிக் டிக் டிக். ரசிகர்களை இந்த வித்தியாச கதைக்களம் கவர்ந்ததா பார்ப்போம்.



படத்தின் ஆரம்பக்காட்சிலேயே 8 டன் எரிகல் சென்னையில் வந்து விழுகின்றது. இதனால் ஒரு சில உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

அதைத் தொடர்ந்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அதை விட பெரியளவில் ஒரு எரிகல் மோதவருவதாக தகவல் கிடைக்கின்றது.

அது வந்து மோதினால் தமிழகம், இலங்கை, ஆந்திரா ஆகிய இடங்கள் அழியும். இதை தடுக்க மெஜிசிஷியன் மற்றும் திருடனான ஜெயம்ரவி உதவியுடன் ஒரு சில அமைப்பினரை விண்வெளிக்கு அனுப்பி அந்த எரிகல்லை உடைத்து கல்லை திசை திருப்ப ப்ளான் செய்கின்றனர். ரவி இந்த ப்ளானை வெற்றிகரமாக முடித்தாரா என்பதே மீதிக்கதை.

ஜெயம் ரவி எப்போதும் வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பவர். அந்த வகையில் வனமகன், மிருதனை தொடர்ந்து விண்வெளி சார்ந்த ஒரு கதையை தேர்ந் தெடுத்ததற்காகவே ரவியை பாராட்டலாம். நிவேதா பெத்து ராஜ், ரமேஷ் திலக், அர்ஜுன் மற்றும் கப்டனாக வரும் வின்செண்ட் என அனைவருமே தங்கள் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

சரி ஸ்பேஸ் படம் என்றாலே நமக்கு பல ஹொலிவுட் படங்கள் நினைவிற்கு வரும். அதிலும் கிராவிட்டி, இண்டர்ஸ்டெல்லர் ஆகிய படங்கள் சமீபத்திய ரெபரன்ஸ். அந்த படம் அளவிற்கு நினைத்தாலும் தமிழ் சினிமாவில் தற்போது ஒரு படம் எடுக்க முடியாது.

அந்த வகையில் டிக் டிக் டிக் எப்படி என்றால் 40 மார்க் எடுத்து பாஸ் ஆகியுள்ளது என்றே சொல்லலாம், ஏனெனில் ஜெயம் ரவி தான் இந்த மிஷினை முடித்தாக வேண்டும், அதற்காக பல வருடம் மிலிட்ரியில் இருந்த வின்செண்ட் செய்யமுடியாததை கூட ஜெயம் ரவி ஏதோ பொட்டிக் கடையில் மிட்டாய் வாங்குவது போல் செய்வது என்ன லொஜிக்.

படத்தில் லொஜிக் எல்லாம் பார்த்தால் கிலோ எவ்வளவு என்று தான் கேட்க தோன்றும், அந்த அளவிற்கு பல இடங்களில் லொஜிக் எல்லை மீறல், ஆனால், அதையும் மீறி ஜெனரல் ஆடியன்ஸ் நான் லொஜிக் எல்லாம் பார்க்க மாட்டேன், ஜாலியாக ஒரு படம் பார்க்க வேண்டும் என்றால் ஜாலியாக இருக்கின்றதோ இல்லையோ, ஒரு புது அனுபவத்தை இந்த டிக் டிக் டிக் கொடுக்கும்.

ஹொலிவுட்டில் ரிலிஸான ஆர்மகடான் படத்தின் சாயல் தான் இந்த டிக் டிக் டிக், அதே கதைக்களம் என்றாலும் முடிந்த அளவிற்கு நம்ம ஊர் மக்களுக்கு புரியும் படி சொன்னதற்காகவே சக்தி சௌந்தர்ராஜனை மனம் திறந்து பாராட்டலாம். கொஞ்சம் **Now you see me** சண்டைக் காட்சியை கூட கொப்பி அடித்துள்ளீர்கள் போல?.

வெங்கடேஷின் ஒளிப்பதிவில் நாமே ஸ்பேஸ்க்கு சென்ற அனுபவம். டி.இமான் இரண்டாம் பாதியில் மெதுவாக செல்லும் காட்சியை இசையால் தூக்கிப்பிடிக்கின்றார். இவர்களை எல்லாம் விட சிஜி டீம் கண்டிப்பாக பாராட்டியே ஆகவேண்டும், இத்தனை கம்மி பட்ஜெட்டில் இவ்வளவு தரமான காட்சிகளை தந்துள்ளனர்.

கதைக்களம் தமிழில் இப்படியெல்லாம் படம் வருமா? என்று நினைக்க, அதைக்கொண்டு வந்த சக்தி சௌந்தராஜனுக்கு பாராட்டுக்கள்.





படத்தின் முதல் பாதி செம்ம வேகமாக செல்கின்றது, எப்போது ஸ்பேஸிற்கு செல்வார்கள் என்ற ஆர்வம் தொற்றிக்கொள்கின்றது.

இரண்டாம் பாதியில் சீன விண்வெளி வீரர்களிடம் இருந்து அணு ஆயுதத்தை திருடி விட்டு வெளியே விண்வெளியில் ரவி மிதக்கும் காட்சி, ஹொலிவுட் தரம்.


இசை, ஒளிப்பதிவு, சிஜி ஒர்க் என அனைத்தும் திருப்தி.

முன்பே சொன்னது போல் ஏகப்பட்ட லொஜிக் மிஸ்டேக், கொஞ்சம் ரவியை தவிர மற்றவர்களுக்கு வேலை கொடுத்திருக்கலாம்.

ஸ்பேஸிற்குள் கதை நகர்வதால் நமக்கு கொஞ்சம் படம் மெதுவாகவே இரண்டாம் பாதி செல்வது போன்ற உணர்வு.

சீன விண்வெளி வீரர்களுடன் நடக்கும் விடயம் இதற்கா இவ்ளோ பில்டப் என தோன்றுகின்றது.

மொத்தத்தில் ஹொலிவுட் படங்கள், லொஜிக் எல்லாம் மறந்து உள்ளே சென்றால் கண்டிப்பாக டிக் டிக் டிக் ஒரு புது அனுபவத்தின் நுழைவு வாயிலாக இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச பார்வை

# உலக சந்தையில் அமெரிக்காவின் போக்கு

அமெரிக்க முதலாளித்துவத்திற்கு எப்பொழுதும் உலகமானது பதற்ற நிலையில் காணப்படவேண்டும் என்பதே விருப்பமாகும். அப்பொழுதுதான் அமெரிக்காவின் உள்நாட்டு இருப்பும் அமெரிக்காவின் உலக இருப்பும் உறுதி செய்யப்படும். அதற்காக அமெரிக்கா ஒன்றுமாறி மற்றொன்று என்ற வகையில் உலகின் எங்கோ ஒரு மூலையில் பிரச்சினைகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கும். உலக அரங்கில் அமெரிக்கா இன்றும் ஒரு வயது போனாலும் வல்லரசாக இருப்பதற்கு இவ்வாறான அணுகுமுறையே காரணமாகும்.

அதனடிப்படையிலேயே சமகால உலக ஒழுங்கும் காணப்படுகின்றது. இந்தத் தடவை அமெரிக்கா சற்று வித்தியாசமாக பொருளாதார குழப்பத்தையும் இராணுவ ரீதியான குழப்ப நிலையையும் ஒன்று சேரக்கொண்டு செல்வதனைக் காணலாம். கொரிய தீபகற்ப முரண்பாடு, சிரியா முரண்பாடு, ஏமன் முரண்பாடு, ஜெருசலேம் பிரச்சினை, ஈரான் உடன்படிக்கையில் இருந்து வெளியேற்றம் என்று இராணுவ அரசியல் ரீதியான ஒரு கொதிநிலைக்கு உலகைத் தள்ளிவிட்டு மறுபுறம் வர்த்தகப்போரை ஆரம்பித்துள்ளது அமெரிக்கா. இந்த வர்த்தக உலகப் போரைப் பற்றிய ஒரு ஆய்வினை இக் கட்டுரை ஆய்வு செய்கின்றது.



சமகாலத்தில் அமெரிக்காவின் வர்த்தக யுத்தமானது சீனாவுடனேயே ஆரம்பித்தது. உலக மேடையின் மைய வர்த்தக சக்திகளாக அமெரிக்கா- சீனா ஆகியன காணப்படுகின்றன. உலக சந்தையின் இவ் இரண்டு நாடுகளுமே முதன்மையாகப் பங்கிட்டுக் கொள்கின்றன. சீனாவின் வளர்ச்சியானது பொருளாதாரத்தில் அபரிமிதமாகக் காணப்படுகின்றது. இதனால் சீனாவில் வர்த்தக முடக்கத்தினை ஏற்படுத்துவதற்காக சீனாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு பன்மடங்கு வரியினை அமெரிக்கா விதித்தது. இதுவே இன்றைய உலக வர்த்தக குழப்ப நிலைக்கான காரணமாகும். 50 பில்லியன் டொலர் மதிப்பிலான சீனப்பொருட்கள் மீது 25 சதவீதம் வரி விதிப்பை அமெரிக்கா விதித்துள்ளது. எஃகு மற்றும் அலுமினியம் ஆகியவற்றுக்கான வரியை அமெரிக்கா உயர்த்தியது. அத்துடன் 200 பில்லியன் டொலர் மதிப்பிலான சீனப் பொருட்கள் மீது 10 சதவீத கூடுதல் வரியினையும் அமெரிக்கா விதித்துள்ளது. உள்நாட்டு வர்த்தகத்தினை பாதுகாப்பதற்காகவே இவ்வாறான ஒரு வரி விதிப்பு என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் பொருளாதார கொள்கைகளால் அமெரிக்கா பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்யும் விதமாகக் குறிப்பிட்ட சீனப் பொருட்களுக்கான 25 வீதமான வரி விதிக்கப்படுகின்றது என அமெரிக்க வர்த்தகத்துறை குறிப்பிட்டது.

டொனால்ட் ட்ரம்ப் இன் அதிரடி நடவடிக்கைக்குப் பதிலடியாக சீனாவானது அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பன்றி இறைச்சி, மறு சுழற்சி அலுமினியம், ஸ்டீல் பைப்புக்கள், பழங்கள், வைன் உள்ளிட்ட 128 பொருட்களுக்கு 25 வீத வரியினை விதித்துள்ளது. இதற்கு சீனா கூறும் விளக்கமானது அமெரிக்காவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரிவிதிப்பினால் ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடு செய்வதற்காகவே இவ்வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுகின்றது. இது வெள்ளை மாளிகையைக் கொதிப்புக்குள்ளாக்கியுள்ளதுடன் சர்வதேச சந்தையை சீனா சீர்குலைப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பான கண்டனத்தினை வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் " லிண்ட்ஸே வார்டர்ஸ்" தெரிவித்துள்ளார். சர்வதேச சந்தையை சீர்குலைத்து அமெரிக்கா தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் சீன வர்த்தகத்தை நிறுத்த வேண்டும் என அவர் கூறியிருந்தார். இவ்வாறு பரஸ்பர இறக்குமதிக்கான வரியினை அதிகரித்ததன் மூலம் உச்சளவிலான வர்த்தகப்போர் ஒன்று பன்னாட்டுப் பரப்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவின் இந்தக் கூடுதல் வரி விதிப்பானது ஐரோப்பிய நாடுகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான ஒரு கண்டனத்தினை ஜி- 7 நாடுகளின் மாநாட்டில் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தன. அத்துடன் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் 22 ஜுன் முதல் புதிய வரிகளை விதித்துள்ளது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நீலஜீன்ஸ், மோட்டார் சைக்கிள்கள், சோளத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் விஸ்கி போன்றவற்றிற்கு இந்த வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தினை ஐரோப்பிய ஒன்றிய வணிக ஆணையர் சிசலியா மால்ம்ஸ்டோர்ம் தெரிவித்தார். ஏற்றுக்கொள்ள முடியாத தன்னிச்சையான செயற்பாட்டினை அமெரிக்கா மேற்கொண்டதற்கு பதிலாக இதனைத் தவிர வேறுவழி தங்களுக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார்.

இதன்படி ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்கப் பொருட்களுக்கு 2.8 பில்லியன் யூரோ அளவிலான வரியினை விதித்துள்ளது. ஜுலை மாதம் தொடக்கம் கனடா 16.6 பில்லியன் டொலர் மதிப்பிலான அமெரிக்க சரக்குகள் மீது வரி விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இந்தியாவானது அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், இரும்பு, உருக்கு ஆகிய மொத்தம் 29 பொருட்களுக்கான வரியினை 20 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் வரை உயர்த்தியுள்ளது. அப்பிள், முந்திரி, பாதாம் போன்றன இதற்குள் அடங்குகின்றன. இது தொடர்பான இந்திய அரசின் வரி உயர்வு அறிக்கையில் உடனடி நடவடிக்கை தேவைப்படும் சூழல் தற்போது நிலவுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமெரிக்கா தன் சுய பாதுகாப்பிற்காக ஏற்படுத்திய வரி சீரமைப்பானது பன்னாட்டு பொருளாதாரத்திலும் பன்னாட்டு சந்தையிலும் பாரிய குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் நாடுகளினுடைய பொருளாதார வலைப்பின்னல் சிதைவடைவதுடன் வேறுவடிவம் கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. குறிப்பாக சீனப் பொருட்களின் அமெரிக்கா இறக்குமதி கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர் சீன நிறுவனங்களின் முதலீடு அமெரிக்காவில் குறைவடைந்துள்ளது. சீனா மெல்ல மெல்ல தன் பொருளாதார பாதையினை ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு மாற்றும் நிலை உருவாகின்றது.

அத்துடன் ஏற்றுமதிகளின் தேக்கமானது உள்நாட்டிலும் பெரும்பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. பங்குச் சந்தைகளில் கணிசமான வீழ்ச்சி நிலை இதன்மூலம் ஏற்படுகின்றது. சமவுடைமை பொருளாதாரத்தினை தன் காலுக்குக் கீழ் கட்டுப்படுத்த வேண்டும் என்ற முதலாளித்துவத்தின் பொருளாதார பாய்ச்சலானது இன்று உலகப் பொருளாதாரத்திற்கே ஆபத்தாக மாறியுள்ளதுடன் அமெரிக்காவின் வர்த்தக சந்தையிலும் சிக்கல்களை உண்டு பண்ணுகின்றது. பொருளாதாரப் உலகமயமாதலினால் நாடுகள் அனைத்தும் ஒரே சந்தையாக மாறியிருக்கும் தற்போதைய சூழலில் குறிப்பிட்ட ஒரு நாடு மேற்கொள்ளும் வர்த்தக நிலை மாற்றம் உலகப் பொருளாதாரத்தையே குழப்பிவிடும். அதுவே தற்போது நடைபெறுகின்றது. ஏற்றுமதி இறக்குமதியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையினால் முதலீட்டு நிறுவனங்கள் தங்களின் பாதையை வேறு நாடுகளுக்கு மாற்ற முயற்சி செய்கின்றன. அமெரிக்காவின் ஹார்லி டேவிட்சன் மோட்டார் வாகன நிறுவனம் தனது சில தொழிற்சாலைகளை அமெரிக்காவிலிருந்து வேறு நாடுகளுக்கு மாற்றும் முடிவினை எடுத்துள்ளது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியினை ஐரோப்பிய ஒன்றியம் அதிகரித்ததனால் தாங்கள் இந்த முடிவினை எடுத்துள்ளதாக இந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பல நிறுவனங்கள் அமெரிக்காவினை விட்டு குடிபெயரும் நிலை காணப்படுகின்றது. அத்துடன் அமெரிக்காவுடனான வர்த்தகத் தொடர்புகளை நாடுகள் குறைக்கும் வாய்ப்பும் உருவாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்த வர்த்தக முடிவுகளுக்கு உலகம் பூராகவும் காணப்படும் வர்த்தக நிபுணர்கள் கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் எச்சரிக்கையினையும் தெரிவித்தாலும் டொனால்ட் ட்ரம்ப அதனை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. தன்னை ஒரு தொழிலதிபராகக் காட்டுவதில் முழு முனைப்புக் காட்டுகின்றார். அமெரிக்காவின் பிரதான தொழிலதிபராக இருந்தே ஜனாதிபதி பதவியினை கைப்பற்றினாலும் இன்னும் அந்த மனநிலையிலிருந்து அவர் விடுபடவில்லை. வரிமுறை தொடர்பான விட்டுக்கொடுப்பற்ற தன்மை இதனையே வெளிப்படுத்துகின்றது.

சீனாவுடன் ஆரம்பித்த இவ்வர்த்தக யுத்தம் இன்று இந்தியா, ஐரோப்பிய ஒன்றியத்தையும் அதற்குள் இழுத்துள்ளது. சீனாவைப் பொறுத்தவரை அதன் பொருளாதாரம் இரும்புச் சுவரில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மாவோ சேதுங் அதனைத் தொடர்ந்து டென் சியாங் பிங் தற்போது ஜி ஜின்பிங் ஆகிய மூவராலும் பலமான ஒரு " பொருளாதார சீனா" கட்டியெழுப்பப்பட்டுள்ளது. குறிப்பாக இன்றைய சீன ஜனாதிபதியான ஜி ஜின்பிங் மிகவும் நேர்த்தியான அதேநேரம் வேகமான புதிய வகை சோசலிச பொருளாதாரத்தினை உருவாக்கியுள்ளார். இது சோசலிச அரசியலினுள் திறந்த பொருளாதார முறையென்று அடையாளப்படுத்தப்படுகின்றது. இதில் பயணிக்கும் வரை சீனப் பொருளாதாரம் சீனப்பெருஞ்சுவர் போன்று மிகவும் பலம் வாய்ந்ததாகவே அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஐரோப்பிய ஒன்றியமும் பலமான ஒரு பொருளாதாரக் கட்டமைப்பினை தன்னுடைய நாடுகளுக்குள் கொண்டிருக்கின்றது. தன்னுடைய வரி உயர்வினால் அமெரிக்காவுடன் ஒரு பொருளாதார சமநிலையினை ஏற்படுத்த முயன்று தன்னுடைய பொருளாதாரத்தின் உறுதித் தன்மையினை அது பேணமுடியும். இந்தியப் பொருளாதாரமே பெரும்பாலும் ஏற்றுமதியில் தங்கியுள்ளதனால் அதனுடைய பொருளாதார ஸ்திரத்தன்மையினை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இவ்வாறு உலகப் பொருளாதார சந்தையினைக் குழப்பியுள்ள அமெரிக்க ஜனாதிபதியினால் எதிர்காலத்தில் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டால் அதனைத் தடுக்கும் பொறிமுறைகள் எந்தளவிற்கு உள்ளது என்பது சந்தேகமே. உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் என்ற அமெரிக்க ஜனாதிபதியின் வரி சீர்திருத்த முறையினால் அமெரிக்கா தினையை விதைப்பதற்குப் பதிலாக வினையை விதித்து ள்ளது என்றே ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன்மூலம்அமெரிக்காஎவ்வாறுதினையை அறுவடை செய்யப் போகின்றது என்பதனைக் காத்திருந்து தான் பார்க்க வேண்டும். எனினும் இந்த உலக சந்தை குழப்ப நிலை எதிர்காலத் தில் நாடுகளின் அரசியல் உறவிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது நிதர்சனமாகும்.

எஸ்.கோகுலன்,
வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# facebook சிம்மாசனம்



காசியிலுள்ள விசுவநாதர் ஆலயம் இஸ்லாமியர்களின் வசமிருந்தது. பூஜை எதுவும் நடைபெறாது பூட்டிக் கிடந்தது. காசி தேசத்தை ஆண்ட நவாபிடம் போய் கோயிலை தம்மிடம் தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

சிம்மாசனத்தில் இருந்த நவாப் அவருக்கு ஆசனம் தராமல் நிற்க வைத்துப் பேசினார். மொழிபெயர்ப்பாளர்கள் மூலம் குமரகுருபரர் என்ன சொல்கிறார் என்று புரிந்து கொண்டார். புரிந்த பின்னும் அகம் பாவத்துடன் சிரித்தார்.

கிழவரே... நீர் என்ன சொல்கிறீர் என்று எனக்கு விளங்கவில்லை. ஏதோ தானம் கேட்கிறீர் என்பது தெரிகிறது. ஆனால், என்ன தானம் என்பது தெரியவில்லை.

எனது மொழியில் கேட்டால் அல்லவா எனக்குப் புரியும். என் மொழியில் கேளுங்கள்... தருகிறேன் சொல்லிவிட்டு எழுந்து போனார். அந்த நவாபின் சபை குமரகுருபரரைப் பார்த்துச் சிரித்தது. குமரகுருபரரும் சிரித்தார்.

ஞானிகள் என்போர் எளிமையானவர்கள் எல்லாவித அவமதிப்பையும் இன்முகத்துடன் ஏற்பவர்கள். கோபமில்லாதவர்கள். எதிரே இருப்பவன் அரசனோ, அசுரனோ, அறிவிலியோ, ஆராய்ந்து அறிந்த பண்டிதனோ யாராயினும் தரக் குறைவாகப் பேசமாட்டார்கள்.

எந்த ஞானியும் தனக்கென்று தானம் கேட்டதேயில்லை. ஞானியின் கைகள் எப்போதும் பிறருக்காகத் தான் தானம் கேட்கும். ஊருக்காகத் தான் அவர் மனம் யோசனை செய்யும்.

ஞானி எளிமையானவர். அந்த எளிமையைக் கண்டு அவரை இகழ்ச்சியாய் எடை போடக்கூடாது. பல செல்வந்தர்களுக்கு இந்த எளிமை புரியாத விடயமாக இருக்கிறது.

சற்று உயரமாக மேடை போட்டு... உலகமே தன் கீழ் என்கிற மமதை வந்துவிடுகிறது. ஆட்சியாளர் பலருக்கு இதுவே வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது.

ஆட்சியில் அமர்வது என்பது இடையறாது தந்திரம், கணக்கில்லாத துரோகங்கள், கலவரம் ஊட்டும் வன்முறைகளால் நிகழ்வது. இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு இருந்தால்கூட அவனுக்கு நல்ல தூக்கம் என்பதில்லை. மூன்றையும் கொண்டவனுக்கு எவ்விதம் தூக்கம் வரும்.

ஆழ்ந்து தூங்காதவனிடம் அமைதி எப்படி குடிகொண்டு இருக்கும். அமைதியில்லாத எவனும் பிறரை எளிதில் அவமதிப்பான். ஆட்சியாளர்கள் சகலரையும் அவமானப்படுத்த இந்த அமைதியின்மையே காரணம்.

மறுநாள் விடிந்தது. காசி தேசத்துச் சான்றோர்கள் அவையில் கூடினார்கள். பாட்டுப் பாடுகிற வித்துவான்களும், ஆடல் மகளிரும், அரபியில் கவிதை சொல்கிறவர்களும், அந்த மொழியில் இறைவன் பெருமை படிப்பவர்களும் ஒன்றுகூடினார்கள்.

எங்கே அந்த மதுரைக் கிழவர்...? நவாப் விசாரித்தார்.

அவர் அரபி படிக்க போயிருக்கிறார். யாரோ சொல்ல, சபை சிரித்தது.

அப்படியா ஆயுஸுக்கும் இந்த பக்கம் திரும்ப மாட்டார் என்று சொல்லுங்கள். மறுபடி சபை சிரித்தது.

அவருக்கு வயது வேறு ஆகிவிட்டது. அரபி மொழியை இறைவனிடம் போய் படிக்க வேண்டும். யாரோ சொல்ல, மீண்டும் சபை சிரித்தது.

அடடா.. இது தெரிந்திருந்தால் வெறும் கையுடன் அனுப்பியிருக்க மாட்டேனே. வழிப்பயணத்திற்கு ஏதேனும் கொடுத்து அனுப்பியிருப்பேனே.

இறைவனை பார்க்கப்போகும் வழிப்பயணத்தில் நவாப் அவர்கள் என்ன கொடுத்துவிட முடியும். ஒரு பெரிய அரபிப் புலவர் சந்தேகம் எழுப்பினார்.

சில சவுக்கடிகள்... ஒரு உபதளபதி துள்ளிக்கொண்டு சொன்னான். மறுபடியும் அந்த நவாபின் சபை கைகொட்டிச் சிரித்தது.

ஆக அவர் வரவே மாட்டார் என்று சொல்கிறீர்களா?

வரலாம் மன்னா. இந்துக்களுக்கு மறுபிறப்பில் நம்பிக்கை உண்டு.

அந்த மதுரைக் கிழவர் இறந்து மறுபடி பிறந்து இதே காசியில் எருதாக வருவார். உம்முடைய அழுக்குத் துணிகளைச் சுமப்பார். அதுவரை பொறுத்திருங்கள். நவாபால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மதுரைக் கிழவர் மிருகமாக வருவார் என்கிறீர்களா?

ஆமாம்... ஆமாம்... என்று அந்த துதிபாடும் சபை சொல்லியது.

வாசலில் சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். பிடரியும், கோரைப் பற்களும்... சிவந்த கண்களுமாய் ஒரு முதிர்ந்த ஆண்சிங்கம் சபைக்குள் நுழைந்தது.

குமரகுருபரர் அந்த சிங்கத்தின் மீது இரண்டு கால்களையும் தொங்க விட்டு அதன் பிடரியைப் பிடித்து அமர்ந்திருந்தார். ஆண் சிங்கத்தின் மேல் அமர்ந்த ஆண் சிங்கம் போல் காட்சியளித்தார்.

அவர் நரைத்த தலைமுடியும், தலைப்பாகையும், வெள்ளை வெளேர் என்று வயிறு வரை நீண்ட தாடியும், இறையை உணர்ந்த உறுதியான முகமும், போகமே அறியாது கடுமையான பிரம்மச்சரியத்தில் இருக்கும் கட்டுக்குலையாத உடலும் அவரை சிங்கம்போல் காட்டின.

அந்த ஆண்சிங்கத்தை தொடர்ந்து மூன்று பெண் சிங்கங்களும் அதன் குட்டிகளும் வந்தன. நவாபின் சபை கலைந்து, காலைத் தூக்கிக் கொண்டது. நவாப் வாளை உருவிக் கொண்டு பதற்றத்துடன் நின்றான்.

என்ன இது. கத்தினான்.

நேற்று நீர் அமர ஆசனம் தரவில்லை. எனவே ஆசனத்தை கையோடு எடுத்து வந்தோம்.

இதுவா ஆசனம்... இது சிங்கமல்லவா?

இது சிங்கம்தான். இதன் மீது நான் அமர்ந்திருப்பதால் இது என் ஆசனம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1451

Search for people, places and things  Nagendram  Home

### ரவிவர்மன்

லட்டு உடைஞ்சிருக்சேன்னு பீல் பண்ணாம



பூந்தி கிடைச்சிருக்கேன்னு சந்தோசப்படுங்க வாழ்க்கை நல்லாயிருக்கும்

### அஸ்மிகா

ஆடு வாங்க லோன் கேட்கிறியே... ஏதாவது முன் அனுபவம் இருக்கா?



இருக்கு சேர்... வாரத்துக்கு 3 முறை மட்டன் சாப்பிடுவேன்...

### கார்த்திகேயன்

சீக்கிரமா பில்கேட்ஸ் ஆகனும்னு கனவு கண்டா



சீக்கிரமா பில்கட்டுன்னு கஸ்டமர்கேர்ல இருந்து போன் வருது

### ரவிதேஜா

முட்டையை அதோட அம்மா பொரிச்சா குஞ்சு...



எங்கம்மா பொரிச்சா ஆம்லட்

### அம்பிகை

ஆண்குழந்தை என்பது வாரிசு



பெண்குழந்தை என்பது பரிசு

### கார்த்திகா

ஒருவரை முழுமையாக அறியாமல் உங்கள் மனதையோ மானத்தையோ இழந்து விடாதீர்கள்



பின்பு கலங்கி நிற்பது கண்களும் மனதுமல்ல உங்கள் வாழ்க்கையும் தான்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 138

# குழந்தைகளுக்கு வலிப்பு ஏற்படுவதைத் தடுக்க...

சில பிள்ளைகளுக்கு காய்ச்சல் அதிகமாக உள்ள வேளைகளில் வலிப்பு ஏற்படுவதுண்டு. இது மூளையின் செயற்பாட்டில் ஏற்படும் ஒரு வகைத் தாக்கத்தினால் உருவாகின்றது.

இந்தநிலைமை 6 மாதம் தொடக்கம் 6 வயது வரையான பிள்ளைகளில் பொதுவாக ஏற்படுகின்றது. ஆனால் 6 மாதத்துக்கு உட்பட்ட பிள்ளைகளிலும் 6 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளிலும் கூட இந்த நிலைமை ஏற்படலாம்.

அநேகமாகக் காய்ச்சல் கூடுதலாக உள்ளபோதே வலிப்பு ஏற்படும். ஆனால் மெல்லிய காய்ச்சல் உள்ளபோதும் சில வேளைகளில் காய்ச்சலுக்கான காரணம் கிருமித்தொற்றாகவே (Virus fever) இருக்கின்றது. ஆனாலும் எந்தத் கிருமித் தொற்றலைத் தொடர்ந்தும் காய்ச்சல் ஏற்பட்டு வலிப்பு வரலாம்.

உதாரணம் சிறுநீர் கிருமித் தொற்று, சுவாசப்பைக் கிருமித்தொற்று. அதே போல் மூளையில் ஏற்படும் வேறு பாதிப்புக்கள் மூலமாகவும் வலிப்பு உண்டாகலாம்.

எனவே வலிப்பு ஏற்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தகுதி பெற்ற வைத்தியர் ஒருவரின் உதவியை நாடவேண்டியது அவசியம்.




**வலிப்பானது**

1. காய்ச்சல் கூடுதலாக உள்ள போது ஏற்படுமாயின்

2.காய்ச்சல் தொடங்கி 24 மணிநேரத்தில் ஏற்படுமாயின்

3.வலிப்பின்போது கை.கால் இரண்டும் அடித்துக்கொள்ளுமாயின்

4. வலிப்பு 5 நிமிடங்களுக்குள் கட்டுப்பாட்டுக்குள் வருமாயின்

5.வலிப்பு நின்றவுடன் குழந்தை சாதாரணமாக விளையாடி (Active ஆக) இருக்குமாயின்

அது காய்ச்சலினால் மட்டுமே ஏற்படும் சாதாரண வலிப்பாக இருக்கும். இந்த வலிப்பானது ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் ஏற்படுவதற்குக் காரணம் நெருங்கிய குடும்ப அங்கத்தவர் களிடம் இந்த நிலைமை காணப்படுதலே ஆகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் போது, அவர்களுக்கு மீண்டும் மீண்டும் காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கும்.

ஒருமுறை காய்ச்சலுடன் வலிப்பு வந்த பிள்ளைகளுக்கு மீண்டும் காய்ச்சல் வரும்போது வலிப்பு வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்குக் காய்ச்சலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. பரசிற்றமோல் 6 மணி நேரத்துக்கு ஒருமுறை கொடுக்கலாம். ஆனால் பரசிற்றமோலின் அளவு குழந்தையின் நிறைக்கு ஏற்ற அளவில் இருக்க வேண்டும். (8kg பிள்ளைக்கு 5ml பரசிற்றமோல்) காய்ச்சல் மீண்டும் ஏற்பட்டால் 4 மணிநேரத்தில் மீண்டும் பரசிற்றமோல் கொடுக்கலாம். ஆனால் ஒரு நாளைக்கு ஆகக் கூடுதலாக 4 தடவைகளே கொடுக்கலாம்.

2. குழந்தையின் உடைகளை அகற்றிவிட வேண்டும்.

3. காய்ச்சலைக் குறைப்பதற்காக குளிர்ந்த நீரைக்கொண்டு உடலை நனைக்க வேண்டும். முக்கியமாக கழுத்து, அக்குள், நெற்றி, அரைப்பகுதி ஆகிய இடங்களை மீண்டும் மீண்டும் துடைக்க வேண்டும்.

4. Brufen என்ற மருந்தை தகுந்த வைத்தியர் ஒருவரின் ஆலோசனையுடன் காய்ச்சலைக் குறைப்பதற்குக் கொடுக்கலாம்.

வலிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டும் என்பது ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விடயமாகும்.

1. வலிப்பு ஏற்பட்ட பிள்ளையை, இடது பக்கமாக பக்கவாட்டாகச் சரித்துப் பிடித்து தலையைப் பின்புறம் சற்றுச் சாய்த்த நிலையில் வைத்திருக்க வேண்டும். பிள்ளை சீரான நிலைக்கு வரும்வரை அப்படியே வைத்திருக்க வேண்டும். இது நுரையீரலுக்குள் உமிழ்நீர் போன்றன செல்வதைத் தவிர்ப்பதற்கான வழியாகும்.

2. வீணாகப் பதற்றமடைந்து, பிள்ளையைத் தூக்கிக்கொண்டு ஓடித்திரிய வேண்டாம்.

3. வலிப்பு இருக்கும் போது எதனையும் பருகக்கொடுக்கக் கூடாது.

4. காய்ச்சலைக் குறைப்பதற்குக் குளிர்ந்த நீரினால் நனைப்பதை மட்டும் செய்யலாம்.

5. வாயில் நுரை காணப்படின் அதனைத் துடைத்து அகற்றிவிட வேண்டும்.

6. கையில், வாயில் இரும்புப் பொருட்களைக் கொடுத்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது.

7. 5 நிமிடங்களுக்கு மேல் வலிப்பு இருக்குமாயின் உடனடியாக அண்மையிலுள்ள வைத்தியசாலைக்குக் குழந்தையை எடுத்துச் செல்ல வேண்டும்.

சரியான முறையில் வலிப்பு வந்த குழந்தைக்கான முதலுதவியை வழங்குவதன் மூலம் தேவையற்ற பாதிப்புக்கள் வராமல் உங்கள் குழந்தையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**Dr. R. ரமாவித்தியா**

# தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்க...

பொதுவாகப் பல தாய்மார் தமது பாற்சுரப்புக் குறைவாக உள்ளது என்றெண்ணிக் கவலைப்படுகின்றனர். ஆனால் உண்மை அப்படியல்ல. உங்களின் குழந்தையின் விகிதாசாரமான நிறை அதிகரிப்பு, போதுமானளவு சிறுநீர் கழித்தல், அடிக்கடி பாலூட்டப்படல் ஆகியன உரிய அளவு பாற்சுரப்பை எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.

பாற்சுரப்புக் குறைவை ஏற்படுத்தும் காரணிகளாக மாப்பால், பழச்சாறு, தண்ணீர் போன்றவற்றால் பாலூட்டல் பிரதியீடு செய்யப்படுதல், பாலூட்டப் பயன்படுத்தப்படும் சூப்பிகளால் தாயின் முலைக்காம்புகள் மீதான சிசுவின் நாட்டமின்மை, முலைக்காம்புக் கவசம், சீரான கால இடைவெளியிலான திட்டமிடப்பட்ட பாலூட்டல், உறங்கும் குழந்தை சிசு பாலுறிஞ்சலை நிறுத்தமுன் பாலூட்டலை நிறுத்தல், அதிகரித்த பாற் கொழுப்பு, ஒரு மார்பகத்தை மட்டும் பாலூட்டலுக்குப் பயன்படுத்தல் போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன.

இனி பாற்சுரப்பை அதிகரிக்கும் வழிவகைகள் பற்றிப் பார்ப்போம்.

பாற்சுரப்பானது தேவைக்கேற்றவாறே நிர்ணயிக்கப்படுகின்றது. உங்களுக்கு அதிகரித்த பால் தேவைப்படுகையில் பாற்சுரப்பு அதிகரிக்கும். உங்கள் சிசுவிற்கு மிகைத்திறனுடன் பாலூட்டுவதை உறுதிப்படுத்தவும். சிசுவால் அதிகளவு பால் உறிஞ்சலின் மூலம் அகற்றப்படுமிடத்து மேலும் மேலும் பாற்சுரப்பு அதிகரிக்கும்.

பாலூட்டலின் போது குழந்தையின் தலையும் உடலும் ஒரே நேர்த்தளத்திலிருத்தல். குழந்தையின் முகம் தாய் மார்பகத்துக்கும் முலைக்காம்புக்கும் எதிராக இருத்தல். குழந்தையின் மேலுதடு அல்லது மூக்கு தாயின் முலைக் காம்புக்கு எதிராக இருத்தல்.

ஆகியன பாற்சுரப்பைக் கூட்டும். அடிக்கடி குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டவும். பகலில் 1.5-2 மணித்தியாலத்துக்கொரு தடவையும் பாலூட்டல் சிறந்தது.

பாலூட்டும் ஒரு தடவை ஒரு பக்க மார்பகத்தை முழுமையாகப் பயன்படுத்தவும். மறுமுறை மறு பக்க மார்பக்கத்தைப் பயன்படுத்தவும். பாலூட்டலுக்குச் சூப்பிகளையும் போத்தலையும் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். குழந்தைக்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டும் கொடுக்கவும். திண்ம, திரவ உணவுகளை தவிர்க்கவும்.



போதுமான ஓய்வும் உறக்கமும் பாலூட்டும் தாய்க்கு மிக அவசியம். மன அமைதியும் திருப்தியும் பாலூட்டலை அதிகரிக்கும். போதுமானளவு சுத்தமான நீரையும் சமச்சீரான போசணையுடைய உணவையும் உள்ளெடுக்கவும். (புரதம், கல்சியம்). பாலூட்டலுக்கு இடையிலான நேரத்தில் பம்பிகளைப் பயன்படுத்தி மேலதிகமாக மார்பகங்களில் தேங்கியுள்ள பாலை அகற்றல், அதிகளவு பாலுற்பத்தியைத் தூண்டும்.

குழந்தைக்குப் பசியெடுக்கும் போது பாலூட்டவும். மார்பகங்கள் பாலினால் நிரம்பும்வரை காத்திருக்க வேண்டாம். குழந்தையுடனான நேரடித் தொடுகையானது நீண்டதும் அடிக்கடி நிகழும் பாலூட்டலைத் தோற்றுவிக்கும். பாலூட்டும் நேரத்தை உங்கள் சிசுவே தீர்மானிக்கட்டும். ஒரு பக்க மார்பின் பாலினளவு குறையும் போது மறுபக்க மார்பில் பாலூட்டலைத் தொடரவும்.

இரவில் குழந்தையை அருகில் பேணுவதுடன் அடிக்கடி பாலூட்டலை மேற்கொள்ளவும். பகலிலும் நேரடித் தொடுகையைப் பேணவும். இளஞ்சூடான துணியை மார்பகங்களின் மேல் இறுக்கமாகக் கட்டவும். விரல் நுனிகளால் மேலிருந்து கீழாக மார்பகங்களை வருடி விடவும். முலைக்காம்பைச் சுற்றி வட்டவடிவமாக மார்பகங்களை அழுத்தி விடவும்.

இறுக்கமாக மூடியுள்ள கையை மார்பின் மேல் வைத்து முலைக் காம்பை நோக்கிய வண்ணமாக உருட்டுதல் வேண்டும். பாலூட்டும் தாய் நாற்காலியில் அமர்ந்து முன்புறம் குனிந்து தனக்கு முன்னுள்ள மேசையின்மேல் தனது புயங்களை மடித்து அவற்றின் மேல் தலையை வைத்து ஓய்வாக இருக்க வேண்டும்.

மார்பகங்கள் தளர்வாகத் தொங்கியபடியிருக்க வேண்டும். பின் கழுத்திலிருந்து தோள்பட்டைகளுக்குக் கீழான பகுதிவரை முள்ளந்தண்டின் இரு பக்கங் களிலும் பெருவிரல்களால் அழுத்தி விடல் ஒரு சிறந்த பயிற்சியாகும்.

இந்த முறைகள் பயன்தரா விடத்து வைத்திய ஆலோசனையை நாடி மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் பயன்பெறலாம்.

**வைத்திய கலாநிதி யோ.சிவாகரன்**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 468 5555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org